திருமா மணிநங்கை வந்தாள்! – எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2012

பரல் : 1

கண்ணகி கலை இலக்கியக் கூடல்
மட்டக்களப்பு.

# கூடல்

திருமா மணிநங்கை வந்தாள்! ~ எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!

## கண்ணகி கலை இலக்கிய விழா 2012
## சிறப்பு மலர்

மலர் – 1

ஜூலை 28, 29 –2012

விழாமலர் அனுசரணை :
எந்திரி.வ.கருணநாதன், செட்டிபாளையம்.

கண்ணகி கலை இலக்கியக் கூடல்,
மட்டக்களப்பு.

திருமா மணிநங்கை வந்தாள்! – எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!

# கூடல்

*பரல் – 1*

**கண்ணகி கலை இலக்கிய விழா ௨0௧௨ - சிறப்பு மலர்**


தொகுப்பாசிரியர் :
இரா. நாகலிங்கம் (அன்புமணி)

மலர்க்குழு.

காசுபதி நடராஜா.
செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன்.
அ.அன்பழகன் குரூஸ்.
க.ஆறுமுகம்.
கதிரவன் த.இன்பராசா.
தேவ.அலோசியஸ்
சி.வினோதன்.
செல்வி.தி.டிவதர்சினி.

**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**
45A, பிரதான வீதி, சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

தொ.பே. 0777249729
0653650563
மின்னஞ்சல் : kannahivizha@gmail.com


## கூடலில் கூடுவோம் !

கூடல் கூறும் கதைகள் எமது கண்ணகி இலக்கியப் பாரம்பரியத்தின் தடங்களாகும்.

12.03.2011ல் நான்கு பேர் கூடி கண்ணகி இலக்கியவிழா நடத்துவதற்கான அவசியத்தையும், அதன் நோக்கத்தையும் வகுத்தபோது, இது எவ்வாறு சாத்தியமாகும் என்ற அச்சமும் இருந்தது. இன்று கண்ணகி கலை இலக்கியப் பாரம்பரியம் ஒன்று உருவாகி வருவதனை மிகத் தெளிவாகவே அடையாளம் காண முடிகின்றது.

இரண்டாவது வருட விழாவில் 'கூடல்' என்றொரு சிறப்பு மலரை வெளியிடுவதன் மூலம் 2011ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது கண்ணகி இலக்கிய விழாவை மீட்டுப்பார்த்து அதனை ஆவணப் படுத்துவதாகவும், 2012ம் ஆண்டு நடைபெறவுள்ள இரண்டாவது கண்ணகி கலை இலக்கிய விழா பற்றிய விடயங்களைக் கூறுவதாகவும் இக் கூடலை வடிவமைக்க முடிந்தது. இதனூடே விழா பற்றிய விடயத் தெளிவும், செயற்பாடுகளை இன்னும் ஒருநாள் புரட்டிப் பார்க்கத்தக்கதாகவும் இக் கூடல் அமைகின்றது.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பின் உறுதியான கண்ணகி கலை இலக்கியப் பாரம்பரிய மாந்தரோடு கூடலில் கூடி நின்றே கண்ணகி கலை இலக்கிய விழாவில் கூடிக் களிப்போம்.

அன்பழகன் குரூஸ்
செயலாளர்.
**கண்ணகி கலை இலக்கியக் கூடல்.**

# கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்

தமிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகி கதை. அவளின் திண்மையும், தீரமும் நிறைந்த வாழ்வும், மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின.

சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வீகமான கண்ணகி, ஈழ நாட்டில் சிங்கள தமிழ் மக்களின் மத்தியில் வழிபாட்டிற்குரிய தெய்வமானாள்.

பின்னாளில் கண்ணகி "கண்ணகையம்மன்" என கிழக்கிலங்கையில் நிலைபெற்று விடுவதுடன், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் ஆகிவிடுகின்றாள். கிழக்கிலங்கையில் வைகாசித் திங்கள் அவளுக்குரியதாகும். இதன்போது கிழக்கிலங்கை விழாக்கோலம் பூணும்.

மக்கள் தெய்வமான கண்ணகியின் கதை சிலப்பதிகாரம், சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குரை, குளுத்திப் பாடல், கண்ணகையம்மன் நாடகம், கண்ணகி வசந்தன், கும்மி, கரகம், காவடி, கொம்பு முறிப்பு, குரவைக் கூத்து என தமிழில் கண்ணகி கலை, இலக்கியமாக விரிந்துள்ளது.

கண்ணகிக்குரித்தான வைகாசி மாதத்தில் அவளை நினைவுகூரவும், அவளது இலக்கியங்களைப் பரவலாக்கவுமான நோக்குடன் கண்ணகி இலக்கிய விழா 2011.06.18 அன்று எம்மால் தொடக்கி வைக்கப்படுகின்றது.

இவ்விழா எதிர்காலத்தில் வருடம் தோறும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இப் பட்டயம் கண்ணகி இலக்கிய விழாக் குழுவினரால் 2011.06.18ம் திகதி நடைபெற்ற "கண்ணகி இலக்கிய விழா 2011" இன் தொடக்க விழாவில் காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திருமதி **கோமேதகவல்லி செல்லத்துரை** அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் **திரு.சுந்தரம் அருமைநாயகம்** அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

# கண்ணகி இலக்கிய விழாவுக்கான கால்கோள்

2009ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஓர்நாள் மாலை மட்டக்களப்பில் பேராசிரியர் மௌனகுரு அவர்களின் வீட்டு முற்றத்தில் அவருடன் நானும், நண்பர் ஆறுமுகமும் அளவளாவிக் கொண்டிருந்த போது 2010ம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பிலே கண்ணகி இலக்கிய விழாவொன்றினை நடத்த வேண்டும் என்ற எண்ணம் கருக்கொண்டது. ஆனால் அது சாத்தியமாகவில்லை.

பின்னர் 12.03.2011 அன்று அன்பழகன் குரூஸ் அவர்களையும் எம்மோடு இணைத்துக்கொண்டு அதுவும் ஒரு மாலை வேளையில்தான் மௌனகுரு அவர்களின் வீட்டில் சந்தித்தோம். அன்றைய சந்திப்பில் கண்ணகி இலக்கிய விழாவின் நோக்கங்களை வரைந்தோம். 14.03.2011 அன்று அவரது வீட்டிலேயே நடந்த இரண்டாவது சந்திப்பில் அவை ஒரு பிரசுர வடிவில் அன்பழகன் குரூஸ் அவர்களால் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டது. மூன்றாவது சந்திப்பு 18.03.2011 அன்று மாலை மட்டக்களப்பு அரசடி மகாஜனக் கல்லூரியில் கூடினோம். அதில் கலாநிதி செ.யோகராஜா, சீவரெட்ணம், பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் மேலதிகமாக இணைந்து கொண்டனர். அன்றைய சந்திப்பில் கண்ணகி இலக்கிய விழாவின் நோக்கங்கள் தொடர்பாக எழுப்பிய சில வினாக்கள் சர்ச்சைகளை எழுப்பியதால் தீர்க்கமான முடிவொன்றுக்கு வர முடியாமல் அன்றைய சந்திப்புக் கலைந்தது.

சில நாட்கள் மௌனத்தின் பின் நானும், ஆறுமுகம், அன்பழகன் குரூஸ் ஆகியோர் வெல்லவூர்க்கோபால், சதாசிவம் ஆகியோரை இணைத்துக்கொண்டு 28.03.2011 அன்று கவிஞர் வெல்லவூர்க்கோபால் அவர்களின் வீட்டில் கூடி 2011ம் ஆண்டு கண்ணகி இலக்கிய விழாவை நடாத்தியே தீருவது என முடிவெடுத்தோம். அதன்படி மீண்டும் பல புதியவர்களை இணைத்துக்கொண்டு **06.04.2011** அன்று மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் கூடி 23பேர் அடங்கிய கண்ணகி இலக்கிய விழாக்குழுவை ஏற்படுத்தினோம். செயற்குழுக் கூட்டங்கள் தொடர்ந்து 15.04.2011, 21.04.2011, 28.04.2011, 08.05.2011, 15.05.2011, 22.05.2011, 29.05.2011, 06.06.2011, 10.06.2011 ஆகிய தினங்களில் தொடராக நடைபெற்றன. பேராசிரியர் மௌனகுரு அவர்களையும் அவ்வப்போது அணுகி ஆலோசனைகள் பெற்றுக் கொண்டோம். அவரும் மறுக்காமல் எம்மோடு ஒத்துழைத்தார். அதன் பெறுபேறாக **2011 ஜூன் 18,19** ஆகிய தினங்களில் மட்/ **அரசடி மகாஜனக் கல்லூரிக் கலை அரங்கில் முதலாவது கண்ணகி இலக்கிய விழாவை** மட்டக்களப்பின் வரலாறு அண்மையில் கண்டிராத வகையில் நடாத்தினோம். இவ் விழாவின் வெற்றிக்கு மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்கழகம் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது.

இவ்விழாவின் அங்கமாக 19.ஜூன் 2011 காலை நடைபெற்ற ஆய்வரங்கில் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் அவரது தொகுப்புரையின் போது எதிர்காலத்தில் இவ்விழா இலக்கிய விழாவாக மட்டுமன்றி, கலை இலக்கிய விழாவாக நடத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார். அதனை ஏற்று இவ்வருட விழா கண்ணகி கலை இலக்கிய விழாவாக நடைபெறுகின்றது. தொடர்ந்தும் இவ்வாறே நடைபெறும்.

இவ்வருடத்தில் இருந்து இவ்விழாவை மேலும் விரிவுபடுத்திக் காத்திரமான முறையில் முன்னெடுக்குமுகமாக **"கண்ணகி கலை இலக்கியக் கூடல்"** எனும் 35 பேரைக் கொண்ட அமைப்பினையும் உருவாக்கி உள்ளோம். இதில் ஆர்வமுள்ளவர்கள் எதிர்காலத்தில் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

**செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன்.**
தலைவர். "கண்ணகி கலை இலக்கியக் கூடல்"

# கண்ணகி இலக்கிய விழா – 2011

## அழைப்பிதழ்

## கண்ணகி இலக்கிய விழா - 2011

### விழாக் குழு உறுப்பினர்கள் விபரம்.

1. திரு.த.கோபாலகிருஷ்ணன்.
உ. திரு.அ.அன்பழகன் குருஸ்.
3. திரு.க.ஆறுமுகம்.
4. திரு.மா.சதாசிவம்.
5. திரு.செ.எதிர்மன்னசிங்கம்.
6. திரு.இரா.நாகலிங்கம்.(அன்புமணி)
7. செல்வி.க.தங்கேஸ்வரி.
8. திரு.க.செல்வானந்தம்.
9. திரு.செ.தபராஜா.
10. திரு.த.இன்பராஜா.
11. திரு.அ.செல்வேந்திரன்.
12. திரு.சி.சாமித்தம்பி.
13. திரு.சீ.கோபாலசிங்கம்.
14. திரு.மு.தவராஜா.
15. திரு.க.காண்டீபன்.
16. திரு.ந.பிரேமகுமார்.
17. திரு.சி.சந்திரசேகரம்.
18. திரு.கு.ரவிச்சந்திரன்.
19. திரு.தேவ.அலோசியஸ்.
உ0. செல்வி.தி.டிவதர்சினி.
உ1. திரு.க.தெய்வேந்திரன்.
உஉ. திரு.த.அழகையா.
உ3. திரு.ச.மதன்

# மட்டுநகரில் வரலாறு படைத்த கண்ணகி இலக்கிய விழா

*தம்பு சிவா*

*- தினக்குரல் 2 யூலை 2011 சனிக்கிழமை -*

**மீ**ன்பாடும் தேன் நாடாம் மட்டு நகரிலே கண்ணகி இலக்கியவிழா, வரலாறு காணாத பெருவிழாவாக நடந்தேறியது.

**'திருமாமணி நங்கை வந்தாள்!–எங்கள்**
**தேசந் தழைத்திட வந்தாள் வந்தாள்!!'**

என்ற நாதத்துடன் கண்ணகி இலக்கிய விழா-2011, ஜுன் மாதம் 18ஆம் ,19ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரிக் கலை அரங்கு மண்டபத்தில் இரண்டு நாட்களும் காலை,மாலை நிகழ்வுகளாக நடைபெற்றன. 'செங்கதிர்' ஆசிரியர் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் பிரதம அமைப்பாளராக இருந்து செயற்பட்ட கண்ணகி இலக்கிய விழாக்குழுவினரின் பெருமுயற்சியினால் விழா பெருவிழாவாகச் சிறப்புப் பெற்றிருந்தது. இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் பேராளர்கள் வருகை தந்திருந்தமை சிறப்பு அம்சமாகும். முந்நூறுக்கும் மேற்பட்ட பேராளர்கள் விழா அலுவலகத்தில் பதிவு செய்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து பலர் கண்ணகி இலக்கிய விழாவுக்கு வருகை தந்திருந்தனர். விழா ஏற்பாட்டாளர்கள் பிறமாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்களுக்கு ரம்மியமான சூழலில் தங்குமிட வசதிகள் செய்து கொடுத்திருந்தார்கள். மேலும் உணவு, பானங்கள், சுத்தமான குடிநீர் என்று எல்லாமே ஒழுங்காக வழங்கி வந்தோரை பெருந்தன்மையுடன் கௌரவித்தனர்.

18ம் திகதி காலை பண்பாட்டுப் பேரணி இந்துக் கல்லூரி கோட்டமுனை விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பமாகி ஊர்வலமாகி அரசடி மகாஜனக்கல்லூரி கலை அரங்கை வந்தடைந்தது. முதல் நாள் தொடக்க விழா **'கூலவாணிகன் சாத்தனார் அரங்கில்'**, பேராசிரியர் சி. மௌனகுரு தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு அதிதியாக அருட்சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ மத்தியூயும் கலந்து சிறப்பித்தார்கள். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழ்மொழி வாழ்த்தினை கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி. சியாமளாங்கி கருணாகரன் வழங்கினார். அதைத் தொடர்ந்து கண்ணகி இலக்கிய விழாக் கீதம் இசைக்கப்பட்டது. அ.ச.பாய்வா குழுவினர் இக்கீதத்தை இசைத்தனர்.

'நர்த்தன பவனம் நாட்டியப்பள்ளி' மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. வாழ்த்துக் கவிதையினை மட்டுநகர் தந்த மூத்த கவிஞர் செ.குணரத்தினம் வழங்கினார். அதை அடுத்து வரவேற்புரையை கண்ணகி இலக்கியக் குழுவின் பொருளாளர் க. ஆறுமுகம் சிறப்பான முறையில் கூறினார். பிரதம அமைப்பாளர் த. கோபாலக்கிருஷ்ணன் தமது தொடக்கவுரையில் கண்ணகி இலக்கிய விழாவின் நோக்கங்களை எடுத்துரைத்தார். கண்ணகி தொடர்பான இலக்கியங்களை அறிமுகம் செய்து பரவலாக்குதல் - பண்டைய காலம் தொடக்கம் இன்று வரை பயின்றுவரும் கண்ணகி சம்பந்தமான தொன்மங்களை மீட்டுப்பார்த்தல் - கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் கண்ணகி இலக்கியங்களை வெளிக்கொணர்தல் - மற்றும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் குறிப்பாக கிழக்கிலங்கையிலும் நிலவும் கண்ணகி நம்பிக்கைகளுக்கிடையேயான பொதுமைகளை ஆராய்தல் என்பனவாகும் என்றார். மேலும் 'உலகமயமாக்கல், திறந்த பொருளாதாரம் காரணமாக எமது பாரம்பரிய இலக்கிய வடிவங்கள் மறைந்துபோகின்றன. ஒரு சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அவர்களின் கலைகளும் இலக்கியங்களும்தான் சான்று பகர்கின்றன. எனவேதான் எமது பழம்தமிழ் இலக்கியத்தினூடாக எம் மக்களைப் புத்தூக்கம் அடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் எடுக்கப்பட்ட விழாவே இந்தக் கண்ணகி இலக்கிய விழா. கிழக்கிலங்கையில் தொடர்ந்தும் வருடா வருடம் இவ்விழா நடைபெறும் என்பதை விழாக் குழுவினர் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்' என்று கூறினார்.

**பேராசிரியர் மௌனகுரு**

அடுத்து தலைமையுரையை பேராசிரியர் சி. மௌனகுரு வழங்கினார். 'நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்படியான கண்ணகி இலக்கிய விழா இன்று மட்டக்களப்பில் நடைபெறுகின்றது. இத்தகைய விழாக்கள்

புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்க வேண்டும். எனவே கண்ணகி பற்றி முற்போக்கான சிந்தனைகளை முன்வைக்க வேண்டியிருக்கிறது. ஆரம்பத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த குலக்குழுக்களிடையே பலவழிபாட்டு முறைகள் இருந்துள்ளன. பல காலத்தின் பின்தான் தொடங்கிய கண்ணகி வழிபாடு இன்றும் இருந்து வருகின்றது. கண்ணகி இலக்கியங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பெரிய கலை மரபாக இருந்து கொண்டிருக்கிறது. மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் ஆரியரை முன்னிலைப்படுத்த கண்ணகி இலக்கியம் அடிப்படையாக தமிழர் மத்தியிலேயே இருக்கிறது. குறிப்பாக நமது ஈழத்தில் உண்மையாக இருக்கின்றது.

சரித்திரத்தைவிட தொன்மத்திற்கு மிகுந்த வலிமையுண்டு. அதே போல் கண்ணகி தொன்மம் வலிமை பெற்று இருக்கின்றது. சிலப்பதிகாரம் புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் அதற்கான பண்புகள் நிறுவப்பட்டுள்ளன. இக்காப்பியத்திற்குப் பலர் உரை எழுதியுள்ளார்கள். உ.வே. சாமிநாதையரின் உரைதான் சிறந்த உரையாகக் கொள்ளப்படுகிறது. இந்த உரை நூலின் பதின்மூன்று பதிப்புகள் வெளிவந்துள்ளன.

கண்ணகி சமணசமயத்தவராக முன்னிலைப்படுத்தப்பட்ட போதிலும் இந்துசமயம் சாராத பத்தினி வழிபாடு இருந்து வந்திருக்கின்றது. பல இடங்களில் கண்ணகி கதைகள் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன என அறிய முடிகிறது. தமிழ் நாட்டில் கண்ணகி வழிபாடு அருகிவர கேரளத்தில் இன்னும் வேறு பெயர்களில் இந்த வழிபாட்டு முறை இருந்து வருகிறது. இங்குதான் கண்ணகி வழிபாடு இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் வேறு பெயர்களில் அம்மன் கோயில்கள் இருக்கின்றன. வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் வடக்கில் பிரசித்தி பெற்றது. அங்கு கண்ணகி ஆச்சி என்று பக்தர்கள் அழைத்து வழிபடுவார்கள். மட்டக்களப்பில் கண்ணகி அம்மன் என்று அழைப்பார்கள். இங்கு 47 கண்ணகி அம்மன் கோயில்கள் இருப்பதாக அறியமுடிகிறது. இக் கோயில்களில் குளிர்த்தி, பொங்கல் வழிபாடுகளுடன் கூத்துகளும் உடுக்கடித்துப்பாடுவதும் நடைபெற்று வருவது பண்பாட்டு ரீதியாக, பயபக்தியுடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும்.

மட்டக்களப்பு மக்களின் கண்ணகி வழிபாட்டுக்கும் கேரளத்து மக்களால் முன்னெடுக்கப்படும் கண்ணகி வழிபாட்டுக்கும் தொடர்புகள் இருப்பதைக் காணமுடியும். இன்று மட்டக்களப்பு மக்கள் கண்ணகியைப் பண்பாட்டு அடையாளமாகப் பெரிதும் மதித்துப் போற்றுகின்றனர். தமிழ்நாட்டுக் கண்ணகி மட்டக்களப்புக் கண்ணகியாக மாறிய பெருமையுடன் நிற்கிறார்.

இந்து மத பாட விதானங்களில் கண்ணகிக்கு இடம் வழங்கப்படவில்லை. சிறு தெய்வம் என்ற வகையில் கண்ணகிக்கு இடங்கொடுக்காமல் இருப்பது கவலை தரும் விடயமாகவும். மட்டக்களப்பில் வாழுகின்ற பெரும்பாலான தமிழ் மக்களின் தெய்வமாக கண்ணகி விளங்குவதால் பாடநூல்களில் இடம் பெறுவதும் முக்கியம் என எண்ணுகிறேன்.' என்று தமது தலைமையுரையில் கருத்துகளை முன் வைத்தார்.

அடுத்து 'கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்' பிரகடனம் செய்யப்பட்டது. சுவாமி விபுலானந்தரின் மருமகளும் காரைதீவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபருமாகிய திருமதி கோமேதகவல்லி செல்லத்துரையால் கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம் வாசிக்கப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் வழங்கப்பட்டது.

**செங்கதிர் சிறப்பிதழ்**

இதைத் தொடர்ந்து 'செங்கதிர்' கண்ணகி இலக்கிய விழாச் சிறப்பிதழ் வெளியீடு இடம் பெற்றது. வெளியீட்டுரையை மூத்த எழுத்தாளர் இரா.நாகலிங்கம் (அன்புமணி) வழங்கினார். 'மட்டக்களப்பில் ஆண்டாண்டு காலமாக கண்ணகி அம்மனை பயபக்தியுடன் வணங்கி வருகின்றார்கள். புதுமையான சிந்தனையைத் தூண்டுவதுடன் பழம் இலக்கியங்களை முன்னிலைப்படுத்தல் எனற வகையில் இந்த விழா அமைந்துள்ளது. 'செங்கதிர்' சிறப்பு மலர் கண்ணகி இலக்கிய விழாவை ஒட்டி வெளிவந்தமை பொருத்தமான பணியாகும். 'கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தைப் பண்பாட்டுத் தளத்தில் ஒன்றிணைத்து அவர்களது சமூக, பொருளாதார, அரசியல், கல்வி, கலை, இலக்கிய மேம்பாட்டை நோக்கி அறிவுபூர்வமாக அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டுமென்று 'செங்கதிர்' அவாவியும் நிற்கிறது' என்ற ஆசிரியர் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன் கூற்று மனங்கொள்ளத்தக்கது. மேலும் கண்ணகி இலக்கிய விழாவின் நோக்கங்கள் இதழில் இடம்பெற்றுள்ளது. அதிதிப்பக்கம், 'விபுலம்' வெளியீட்டகத்தின் தலைவருமான கணபதிப்பிள்ளை ஆறுமுகம் இடம்பெற்றுள்ளார். 'பத்தினித் தெய்வமும் சுனாமியும் கிழக்கிலங்கையின் பாணமைக்கிராமம் பற்றிய ஒரு ஆய்வு', கந்தையா சண்முகலிங்கம் எழுதிய ஆய்வுக் கட்டுரையும், 'கொம்பு விளையாட்டு

(கொம்பு முறிப்பு) பற்றிய மீள்பார்வை' என்ற எதிர்மன்னசிங்கம் எழுதிய கட்டுரையும் மலரில் இடம் பிடித்துள்ளது. 'கண்ணகியின் பல்வேறு அம்சங்கள்' என்னும் கட்டுரையை செல்வி க.தங்கேஸ்வரியும், 'சக்தி வழிபாட்டில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் என்ற கட்டுரையை வவுனியா ச. விஜயரத்தினமும் எழுதியுள்ளார்கள்.

இப்படிப்பல சிறப்பான அம்சங்களுடன் செங்கதிர் வெளிவந்துள்ளது என்றார். செங்கதிரின் முதல் பிரதியை மூத்த கலைஞர் மு.கணபதிப்பிள்ளை (மூனாக்கானா) பெற்றுக் கொண்டார்.

*- சனிக்கிழமைத் தொடர்ச்சி..... - தினக்குரல் 4யூலை 2011 திங்கட்கிழமை*

கண்ணகி இலக்கிய விழாவிற்கு பிரதம அதிதியாக வருகை தந்திருந்த மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சிறப்புரை ஆற்றினார். 'எமது மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமைமிக்க திருநாளாக இன்று இலக்கியவிழா சிறப்புப் பெறுகின்றது. பட்டயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்கள் எண்ணிறைந்தவை. தமிழில் வெளிவந்த ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளமை அதன் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. சங்கம்மருவிய காலத்தில் தான் காப்பியங்கள் தோற்றம் பெற்றன. சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் கொண்டு முத்தமிழ் நூலாக வெளிவந்துள்ளது. மக்கள் இலக்கியம் என்ற வகையில் சிலப்பதிகாரம் மிகவும் தெளிவாக விளங்கக் கூடியதாக இருக்கின்றது.

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூம் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றலும் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதூம் ஆகிய மூன்று அம்சங்களையும் சிலப்பதிகாரம் முன்னிலைப்படுத்தி நிற்கிறது. சேர நாட்டு மன்னன் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச்சிலை அமைத்து விழா எடுத்தான். அந்த விழாவுக்கு கடல் சூழ் இலங்கைக் கஜபாகு மன்னனும் சென்றிருந்தான். அவன் இலங்கைக்கு வரும்போது கண்ணகி சிலையைக் கொண்டுவந்தான். கண்ணகி வழிபாட்டு முறை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு மிகவும் பிரசித்திபெற்றுள்ளது. கேரள நாட்டுக்கும் மட்டக்களப்பு மக்களுக்கும் பண்பாட்டுத் தொடர்பு இருந்து வந்திருக்கின்றது. கேரள நாட்டுத் தொடர்பு கண்ணகி வழிபாட்டுக்கு வழிவகுத்திருக்கின்றது. மட்டுவாழ் மக்களின் தனிச்சிறப்புக்கு கண்ணகி வழிபாடு அமைந்திருக்கின்றது. வழிபாட்டு முறையில் மிகவும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

மட்டக்களப்பு மக்களின் சமூக, கலாசார, பண்பாட்டு வரலாற்றைப் பேணிக் காப்பதில், அவர்களின் நம்பிக்கை வழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது. கண்ணகி இலக்கிய விழா ஏற்பாட்டுக் குழுவினர் இப் பெருவிழாவை நடத்த முன்வந்ததையிட்டு மட்டுவாழ் மக்களின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தமது உரையில் தெரிவித்தார்.

பாடும்மீன் சு.ஸ்ரீஸ்கந்தராசாவின் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்னும் சிலப்பதிகார ஒலிச்சித்திர ஒலிப்பேழை வெளியீடு இடம் பெற்றது. வெ.தவராஜா அவர்கள் 'வந்தாரை வாழவைக்கும் எமது மட்டக்களப்பு கண்ணகியைத் தொடர்ந்தும் வாழவைக்கும். இன்று நடைபெறும் இவ்விழா பெருமை தருகிறது. கண்ணகி வழிபாடும் எமது சிலப்பதிகாரமும் பெருமை பெறவேண்டும். 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்னும் ஒலிப்பேழையை வெளியிட்டு வைப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்' என்று தெரிவித்தார். பிரபல தொழிலதிபர் ரஞ்சிதமூர்த்தி அவர்கள் முதல் ஒலிப்பேழையைப் பெற்றுக் கொண்டார்.

சிறப்பு அதிதியாக வருகை தந்திருந்த அருட்சகோதரர் மத்தியூ அவர்கள் சிறப்புரை ஆற்றினார். 'மட்டக்களப்புத் தமிழகத்திலே நுண்கலைகளும் பெருமை பெற்றிருக்கின்றது. மலை உச்சியிலிருந்து பெரிய பாறாங் கல்லை கோபாலகிருஷ்ணன் இன்று உருட்டி விட்டுள்ளார்கள். சிலப்பதிகாரம் ஒரு தமிழ் இலக்கியம். நாடகத்தமிழ் கொண்ட நூல் என்றும் கூறுவார்கள். இந்த நூல் தமிழ் நாட்டில் ஒற்றுமையை உண்டாக்க எழுதப்பட்டதா? என்ற கேள்வியெழுகின்றது. சிலப்பதிகாரம் மக்களின் வாழ்வியலோடு கலந்த காப்பியமாக எழுதப்பட்டது. இதில் புதைந்து கிடக்கும் உண்மைகளை வெளிக் கொண்டுவர வேண்டும். இளங்கோவடிகள் முப்பது காதைகளைக் கொண்ட காப்பியத்தை வெளிப்படுத்தியுள்ளார். நாட்டாரியலையும் பண்பாட்டையும் சிலப்பதிகாரம் எடுத்துக் கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மக்கள் கண்ணகி வழிபாட்டினை மேற்கொண்டு வருகின்றார்கள் என்று தமது சிறப்புரையில் தெரிவித்தார்.

கண்ணகி இலக்கிய விழாக்குழுவின் துணைத்தலைவர் மா.சதாசிவம் நன்றியுரை வழங்கினார். இதைத் தொடர்ந்து நூலங்காடி திறந்து வைக்கப்பட்டது. திரு. பொன்செல்வநாயகம் அவர்கள்

நூலங்காடியைத் திறந்து வைத்தபின் பலர் அங்குள்ள நூல்களைக் கொள்வனவு செய்வதில் பெரும் ஆர்வம் காட்டியதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இத்துடன், முதல் நாள் தொடக்கவிழா காலை அமர்வு நிறைவு பெற்றது.

**முதல்நாள் மாலை அமர்வு உரையரங்கு**

மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி கலையரங்கு மண்டபத்தில் சேரன் செங்குட்டுவன் அரங்கில் 18.06.2011 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கேணிப்பித்தன் ச.அருளானந்தம் தலைமையில் உரையரங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பிரதம அதிதியாக மட்டக்களப்பு கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி உயர் திரு பாலேந்திரன் சசிமகேந்திரனும், சிறப்பு அதிதிகளாக கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் மா.செல்வராஜாவும் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி இராஜகுமாரி கனகசிங்கமும் கலந்து சிறப்பித்தனர்.

அறிமுகவுரையை ஓய்வுபெற்ற அதிபரும் விழா இணைப்பாளர்களில் ஒருவருமாகிய மு.தவராஜா வழங்கினார். அவரது உரையைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. எனது உரையை மும்முனையில் நின்று பார்த்து நிகழ்த்த எண்ணுகின்றேன். ஒன்று பாரதி, இளங்கோ, சுவாமி விபுலானந்தர். பாட்டுக்கொரு புலவன் என்று புகழ்பெற்ற பாரதி 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்றவர் கண்ணகி பற்றி தனது பாடல்களில் எங்குமே குறிப்பிடவில்லை. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் உள்ளடக்கிய காப்பியமாக அமைந்துள்ளது. முத்தமிழ் வித்தகர் என்று போற்றப்படுகின்ற சுவாமி விபுலானந்தர் மதங்கசூளாமணி என்ற நாடக நூலையும் இசைக்கலையோடு ஒன்றிய யாழ்நூலையும் தந்துள்ளார்.

சிலப்பதிகாரத்தின் பெண் பாத்திரங்கள் மூவர் கண்ணகி, மாதவி, பாண்டிமாதேவி. ஆண்பாத்திரங்கள் மூவர் கோவலன், பொற்கொல்லன், பாண்டிய மன்னன். மூன்று நெறிகளை உணர்த்தி நிற்கின்றது. அவை அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்று ஆவதூம் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றலும் ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் என்பதும் ஆகும். கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியறிந்து அழுது கண்ணீர் விட்டு பாண்டிய மன்னனிடம் சென்று கேட்டது போல் மட்டக்களப்பில் இருக்கும் விதவைகள் எல்லோரும் கண்ணீர் விட்டு கண்ணகி போல் நீதி கேட்கப் போகிறார்கள். சிலப்பதிகாரம் மகா புரட்சியை ஏற்படுத்திய மனித காப்பியம். இளங்கோவடிகள் சேர,சோழ,பாண்டிய ஆகிய மூன்று நாடுகளுக்கும் சென்று பார்த்து அற்புதமான காப்பியத்தைப் படைத்துள்ளார் என்று தமது உரையில் தெரிவித்தார்.

'அறங்கூறும் சிலப்பதிகாரம்' என்னும் பொருளில் சுன்னாகம் ஸ்கந்தவரோயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் சிறப்புரை ஆற்றினார். ஐம்பெருங் காப்பியங்களுள் இளங்கோவடிகள் கூறும் சிலப்பதிகாரக் காப்பியம் முதலில் நிற்கின்றது. ஈழத்தமிழர்களோடு தொடர்பை ஏற்படுத்திய வகையிலும் முதன்மை பெற்றிருக்கின்றது. நாட்டில் அறம் குறைந்த போது இலக்கியப் படைப்புக்கள் தோன்றலாயின. எல்லோருக்கும் பொதுவாக நீதியே பதில் சொல்லும் என்ற உயர்ந்த தத்துவம் சிலப்பதிகாரத்தில் உண்டு. தர்மம் பிழைக்கும் போது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று சொல்லப்படுகின்ற பஞ்சபூதங்கள் வெளிவரும். இன்று உலகமெங்கும் ஏற்படுகின்ற அழிவுகளைக் கண்ட வண்ணமுள்ளோம்.

***- நேற்றைய தொடர்ச்சி..... - தினக்குரல் 5 யூலை 2011 செவ்வாய்க்கிழமை -***

ஒரு பெண்ணுக்குக் கணவன்தான் முதல் தெய்வம் என்ற ஒப்பற்ற தமிழருடைய பண்பாட்டை கண்ணகி காட்டுகிறார். தாலிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பண்பை இங்கு காட்டி நிற்கின்றார். எந்தச் சந்தர்ப்பத்திலும் தன் கணவன் கோவலனைக் குறைத்துக் காட்டாது ஒரு வார்த்தை தன்னும் பேசாத கற்பரசியாக கண்ணகி இருந்துள்ளார். கண்ணகி உயர்ந்த பத்தினி என்பதை இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் எடுத்துக் காட்டுகிறார். கண்ணகி அறம் காப்பவளாக வெளிப்படுத்துகிறார். கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் திரும்பிவரும் போது அங்கே கண்ணகியின் அறம் தெரிகிறது. கண்ணகியை அறங்காத்த பெண்ணாக இங்கு காட்டியுள்ளார். நெருப்பிடம் மதுரையை அழி என்று சொன்ன நேரத்திலும் அறத்தைக் காத்து 'தீயவர்களை அழி நெருப்பு' என்று கூறுகிறாள் பத்தினிப்பெண்

கண்ணகி. எனவே, சிலப்பதிகாரம் அறம் கூறும் அற்புதமான காப்பியமாகப் படைக்கப்பட்டுள்ளது என்று கூறி எனது உரையை நிறைவு செய்து கொள்ளுகின்றேன் என்றார்.

தொடர்ந்து தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்வி அனுசூயா சேனாதிராஜா 'கடல் கொண்ட காவிரிப்பூம்பட்டினம்' என்னும் பொருளில் உரையாற்றினார். இந்தக் காவிரிப்பூம்பட்டினம் எங்கு சென்றது. கடற்கோள்களினால் காவு கொள்ளப்பட்டுள்ளது. கடற்கோள்களைப் பற்றி அறிந்திருந்தாலும் சுனாமியின் போது தான் அதை நேரடியாக எம்மால் காணக்கூடியதாகவிருந்தது. சோழ மன்னர்களின் தலைப்பட்டினமாக காவிரிப்பூம்பட்டினம் இருந்துள்ளது. சேரன் செங்குட்டுவன் இளவல் இளங்கோவால் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டது. காவேரி ஆறும் காவிரிப்பூம்பட்டினமும் சிலப்பதிகாரத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறி மேலும் பல தகவல்களை முன்வைத்தார்.

'வழக்குரைக்கும் கண்ணகி' என்ற தலைப்பில் சட்டத்தரணி கி.துரைராஜசிங்கம் உரையாற்றினார். எடுத்துக்கொண்ட பொருளை கதையோட்டத்துடன் அற்புதமாக முன்னிறுத்தி தமது வாதத்திறமையை அற்புதமாக முன்வைத்தார்.

சிறப்பு அதிதியாக வருகை தந்திருந்த பேராசிரியர் மா.செல்வராஜா தமதுரையில், சமுதாய சமத்துவத்தைப் பேணுகின்ற சமூக சமநிலை கொண்டுள்ளது மட்டக்களப்பு மண். கண்ணகி வழிபாடு பேணிக் காப்பாற்றப்படுகின்றது. இறைவனுடன் நெருங்கிய தொடர்புள்ள பூசகர்களைக் காணலாம். மட்டக்களப்பிலுள்ள ஒவ்வொரு கண்ணகி கோயிலிலும் ஒவ்வொரு சிறப்பைக் காணலாம் என்றார்.

கலை நிகழ்ச்சிகளும் இடையிடையே நடத்தப்பட்டு பார்வையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்தனர். நுண்கலைக் கலைக்கழகம் குறவஞ்சி நடனத்துடன் நாட்டிய வித்யா மாணவர்கள் வழங்கிய பரதநாட்டியமும் நடன நிகழ்ச்சியும் மிக அற்புதமாக அமைந்திருந்தன. கண்ணகி இலக்கிய விழாக்குழுத் துணைத் தலைவர் சி.சாமித்தம்பி நன்றியுரை நல்கினார். இத்துடன் முதல்நாள் மாலை நிகழ்வு நிறைவு பெற்றது.

கண்ணகி இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் காலை அமர்வு மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி கலை அரங்கு மண்டபத்தில் 19-06-2011 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் 'இளங்கோவடிகள் அரங்கில்' ஆரம்பமாகியது. 'ஆய்வரங்கு' நிகழ்வாக அமைந்த இந்தப் பனுவலில் ஆய்வு மதிப்பீட்டாளர்களாக கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் செ.யோகராஜாவும் திருமதி சாந்தி கேசவனும் பணியாற்றினர். கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் இலக்கிய விழா இணைப்பாளருமாகிய சி.சந்திரசேகரம் அறிமுக உரையை நிகழ்த்தினார்.

### பேராசிரியர் சண்முகதாஸ்

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையுரை நிகழ்த்தினார். இன்றைய இவ் ஆய்வரங்கு சிலப்பதிகாரத்தை செவ்வியல் இலக்கியமாக வைத்துக் கொண்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. விழாவின் நோக்கம் கண்ணகி இலக்கியம் அத்துடன் கலையையும் நோக்கியுள்ளது.

கண்ணகி இலக்கிய விழா என்று அழைப்பதிலும் பார்க்க கண்ணகி கலை இலக்கிய விழா என்று சொல்லுதல் பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன். கண்ணகி கலை இலக்கியப் பரப்பினை இனங்காணும் போது இரண்டு பகுதிகளாகக் கொள்ளலாம். ஒன்று இலக்கியப் பரப்பு. மற்றது கலைப்பரப்பு. தமிழ்ச் செம்மொழி இலக்கியங்களில் சங்ககால இலக்கியங்களுக்குப் பிறகு வெளி வந்த செவ்வியல் இலக்கியம் திருக்குறள் மற்றது சிலப்பதிகாரம் என்பனவே சிறந்தவை.

***- செவ்வாய்க்கிழமைத் தொடர்ச்சி..... - தினக்குரல் 7 யூலை 2011 வியாழக்கிழமை -***

**செ**வ்வியல் இலக்கியமான சிலப்பதிகாரத்தில் நாட்டார் இலக்கியமும் சமாந்தரமாக வளர்ந்து கொண்டு வருவதைக் காணலாம். எமது மொழியில் சிறந்த பேரிலக்கியமாக சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. அற்புத இலக்கியமாக நாட்டார் இலக்கியமாக அது பெருமை பெற்றுள்ளது. மட்டக்களப்பு மக்கள் கண்ணகி மரபினைக் காத்து வருகின்றனர். காப்பிய அமைப்பில் சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. கண்ணகி வழிபாட்டிலே குளிர்த்திப் பாடல் எல்லாக் கோயில்களிலும் பாடும் வழக்கம் இருந்து வருகின்றது. கலைப்பரப்பில் கோவலன் கூத்து, கோவலன் நாடகம் என்பன இடம்பெற்று வருகின்றது. கண்ணகி கதை கூறும் வழக்கமும் இருந்து வருகின்றது. கோவலன் நாடகப் பாடல்களில் நாட்டார் வடிவங்களின் தொன்மங்கள் பின்னணியில் இருக்கின்றன. ஒப்பீட்டு ஆய்வு என்ற அடிப்படையில் இந்தியா - இலங்கையை ஒப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. கண்ணகி பண்பாடு எங்களுடைய உப பண்பாடு என்ற தேவை ஆய்வுக்குரியதாக இருக்கின்றது என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வரங்கிலே நான்கு ஆய்வுரைகள் இடம்பெற்றன. 'கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு' என்ற தலைப்பில் ஊடகவியலாளர் த.சகாதேவராஜாவும் 'கண்ணகி நம்பிக்கைகள் - ஒரு பொது நோக்கு' என்ற ஆய்வுக்கட்டுரையை வெல்லவூர்க் கோபால் சீ.கோபாலசிங்கமும் 'அந்நிய அறிஞர்கள் தேடலில் கண்ணகி' எனும் பொருளில் தொல்லியல் ஆய்வாளர் செல்வி.க.தங்கேஸ்வரியும் கிழக்கிலங்கைச் சமூகத்தில் சிலப்பதிகாரம் கூறும் வாழ்வியல் பற்றிய ஆய்வினை ஊடகத்துறை சார்ந்த எஸ்.மோசஸ்சும் வழங்கியிருந்தனர்.

## கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு

கிழக்கில் கண்ணகி வழிபாடு பிரசித்தமானது. இது ஒரு புராதன வழிபாடாகும். திராவிடப் பண்பாட்டில் முக்கியத்துவம் பெற்ற சக்தி வழிபாட்டினையே கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற கண்ணகியம்மன் வழிபாட்டில் காண்கின்றோம். இலக்கியமானது படைப்பாற்றலுள்ள தனி மனிதர்களால் படைக்கப்படுவதாயினும் அடிப்படையில் அது ஒரு சாதனமாகும். அவ்வகையில் கண்ணகி இலக்கியங்கள் கிழக்கின் சமூக, பொருளாதாரப் பண்பாட்டு அம்சங்களில் பாரிய தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது. கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு பேணப்படுகின்றது.

கிழக்கின் கண்ணகி இலக்கியங்களாக 'வசந்தன் கவித்திரட்டு' குளிர்த்திப் பாடல் 'உடுக்குச்சிந்து' 'ஊர்சுற்றுக்காவியம்' 'மழைக்காவியம்' 'கூவாய்குயில்' 'கண்ணகி அம்மன் குளிர்த்திப் பாடல்கள்' பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'கண்ணகி வழக்குரைப் பாடல்கள்' எப்.எக்ஸ்.சி.நடராஜா 'கண்ணகி வழக்குரை' (முதல் பகுதி) வீ.சீ.கந்தையாவின் 'கண்ணகி வழக்குரை' (முழுமையானது) என்பனவும் சிங்கள மொழியில் 'ராஜாவலி' 'ராஜரத்தினாகார' 'பத்தினிக்கத்தாவ' என்பனவும் இருக்கின்றன.

வழக்குரை நூலில் தெரிவிக்கப்பட்ட அணிகலன்கள் பலவற்றினை அணிகின்ற வழக்கம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. சிலப்பதிகாரம் கூறுகின்ற இசை - நாடக இலக்கணங்களில் மட்டக்களப்பு நாட்டுக்கூத்தின் சாயல் இருப்பதை அறிய முடிகின்றது. மட்டக்களப்பு வடமோடி நாடகங்களிலே நாடகப் பாத்திரங்கள் கூறுகின்ற தம்மேம்பாட்டுரைகள், தாளக்கட்டுகள் என்கின்ற நாட்டுக்கூத்து சம்பந்தமான நாட்டியக் கலைச்சொல் வரிசைகளும் இடம்பெற்றுள்ளன. பேச்சு வழக்குச் சொற்களையும் கிழக்கில் காணமுடிகின்றது.

மொண்ணையப்பர் பரம்பரையினர் மட்டக்களப்பு காரைதீவில் வாழ்ந்து வருவதாகவும் அவர்களே பின்பு அங்குள்ள கண்ணகி ஆலயத்தைப் பரிபாலித்து வருவதாகவும் தெரிய வருகின்றது. சிலம்புக் காதை பற்றிய பாடல்களை மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை என்றும் வற்றாப்பழையில் சிலம்பு கூறல் எனவும் அழைக்கப்படுகின்றது.

'பண்பாடு எனும் கருத்தாக்கம் மக்களின் அறிவுசார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் படிநிலைகள் மூலம் வெளிப்படுவதேயாகும். சமுதாய மரபு வழியாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப்பாகும்'.

கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு பற்றிக் கூற விளைகின்ற போது பல அம்சங்கள் தொடர்புபட்டு நிற்பதைக் காணலாம். அதில் வழிபாட்டுத்துறை, சடங்குகள், ஆலயங்கள், விழுமியங்கள் என்பன உள்ளன என்று த.சகாதேவராஜா தமது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## கண்ணகி நம்பிக்கைகள் - ஒரு பொதுநோக்கு

கிழக்கு மாநிலம் அதன் நீண்டகால வரலாற்றில் தாய்த்தெய்வ வழிபாட்டினை முக்கியப்படுத்தியே வந்துள்ளது. வருடந்தோறும் வைகாசித்திங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் கண்ணகி தெய்வத்திற்கு ஒரு சேர எடுக்கும் விழா கிழக்கிலங்கைத் தமிழரைப் பொறுத்தவரையில் ஒரு தேசிய விழாவாகவே கொண்டாடப்படுகின்றது. கண்ணகி பற்றிய நம்பிக்கைகள் நம்மத்தியில் மிக்க வலுவானவை என்பதால் ஏனைய பிரதேசங்களுடனும் கண்ணகி தொடர்பான தமிழ், சிங்கள மற்றும் மலையாள இலக்கியங்களுடனும் உள்ள பொதுவான தகவல்களை இக்கட்டுரையில் அவதானிக்கலாம்.

கிழக்கிலங்கையில் வழக்குரைகாதை, ஊர்சுற்றுக்காவியம், பொற்புறா வந்த காவியம், கண்ணகியம்மன் பிரார்த்தனை, கண்ணகியம்மன் அகவல், உடுகுச்சிந்து, கண்ணகியம்மன் தோத்திரம், மழைக்காவியம், கொம்புமுறிப்பாடல்கள், கண்ணகி வசந்தன் பாடல்கள், குயில்பாட்டு, கூனற்பத்ததி, குளக்கட்டுப் பத்ததி, கொம்புப் பத்ததி, கன்னிமார் பத்ததி, சிங்களப் பத்ததி, வேடப்பத்ததி போன்ற

இலக்கியங்கள் கண்ணகி வரவு மற்றும் வழிபாட்டு முறைகளை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

***- நேற்றைய தொடர்ச்சி..... - தினக்குரல் 8 யூலை 2011 வெள்ளிக்கிழமை -***

**வட** மாகாணத்தின் பழைமையும் புகழும் மிக்க வற்றாப்பழை கண்ணகியம்மன் கோவிலில் பாடப்படும் காவியம்.

***'அருள் மேவு சிவ சமய நாதரும் வாழி***
***அன்புநெறி மட்டக்களப்பு நகர் வாழி***
***தருமேவு கயபாகு ராசனும் வாழி'***

என வாழ்த்தும் தன்மை கொண்டு மட்டக்களப்பைத் தலைநகராகக் கொண்டிலங்கிய கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டின் சிறப்பினையும் அதனைக் கொண்டுவந்த கயபாகு மன்னனின் பெருமையினையும் நம்மால் அறியமுடியும். கஜபாகு மன்னன் முதன்முதலில் வற்றாப்பழையிலும் தொடர்ந்து கண்டி, நவகமுவ போன்ற இடங்களில் பத்தினிக்கு கோயில்கள் அமைத்தான். கண்டிப் பிரதேசத்தில் தொடங்கிய கண்ணகி வழிபாடே கிழக்குப் பிரதேசத்தில் அறிமுகமாயிருக்கலாம்.

இன்றைய கேரளம் எனப்படும் சேரநாடு உள்ளிட்ட பண்டைத் தமிழகத்திலும் கன்னடத்தின் சில பகுதிகளிலும் ஈழத்தே தமிழ் சிங்கள மக்களிடத்திலும் கண்ணகி பற்றிய நம்பிக்கைகள் வேரூன்றியிருப்பதைக் காணலாம். யாழ்ப்பாணத்தில் பன்றித்தலைச்சி போன்ற ஒருசில கோயில்களில் கண்ணகி வழிபாடு இன்றும் உள்ளன. சிங்கள மொழியில் பத்தினித் தெய்வ இலக்கியங்கள் பல எழுந்துள்ளன. முப்பத்தி மூன்று ஆலயங்கள் கேரள மாநிலத்திலும் பதினொரு ஆலயங்கள் தமிழ் நாட்டிலும் 47 கோவில்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கண்ணகி நம்பிக்கைக்குரியனவாக அமைந்துள்ளன. பொதுவாகப் பார்க்கின்ற போது கண்ணகி பற்றிய நம்பிக்கைகள் என்பது ஒரு இனத்துக்கோ அல்லது பிரதேசத்திற்கோ என்றில்லாமல் பொதுத்தன்மை கொண்டியங்குவதை யாவரும் ஏற்றுக்கொள்வர் என்று சீ.கோபாலசிங்கம் தமது ஆய்வுக்கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

### அந்நிய அறிஞர்கள் தேடலில் கண்ணகி

கண்ணகி வழிபாடு இரண்டு விதத்திலே வேரூன்றி உள்ளது. ஒன்று சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை கூறும் பத்தினி, இது மக்கள் பக்திபூர்வமாக அனுபவித்து ஆராதித்து போற்றும் கண்ணகியம்மன். இரண்டு அறிஞர்களும் கற்றோரும் கண்ணகி பற்றியும் சிலப்பதிகாரம் பற்றியும் கண்ணகி வழக்குரை பற்றியும் ஆராய்ச்சி செய்து மதிப்பளிக்கும் கண்ணகி.

பத்தினி என்ற சிறப்புச் சொல்லால் அழைக்கப்படும் கண்ணகியை நாம் மட்டும் ஆராதிக்கவில்லை. எமது அறிஞர்கள் மட்டும் ஆய்வு செய்யவும் இல்லை. அந்நியர்கள் அதாவது வேறு சமூகத்தைச் சேர்ந்த அறிஞர்கள் ஆராய்ச்சியாளர்கள் வேறு சமூகத்தைச் சேர்ந்த மக்களும் கண்ணகியை ஆராதிக்கின்றார்கள்.

ஈழத்தில் முதன்முதல் அறிமுகப்படுத்தியவன் சிங்கள மன்னனான கஜபாகு.சேரன் செங்குட்டுவனால் எடுக்கப்பட்ட விழாவுக்கு ஆரிய மன்னன், மால்வா அரசன், குடபு மன்னன், கஜபாகு மன்னன் சந்தனக் கட்டையிலான கண்ணகி சிலையும் பொற் சிலம்பும் தங்க மாம்பழமும் கொண்டு வந்து கண்ணகிக்குக் கோயில் அமைத்து விழா எடுத்தான். இதனை ராஜாவலிய, ராஜரட்ணகார, பத்தினி கொல்முரா, பூஜாவலிய போன்ற சிங்கள நூல்கள் கூறும்.

பத்தினி வரலாறு பரவவேண்டும் என்ற நோக்கில் சிலப்பதிகாரத்தை வீ.ஆர்.எம்.தீட்சிதர், அலன்தானியேலு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார். இந்தி, மராட்டி, மலையாளம் போன்ற இந்திய மொழிகளிலும் ரஷ்ய, செக் மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பத்தினி பற்றிய ஆய்வினை ஜீ.எல்.ஹேர்ட் (G.L.HERT) என்பவரும் ஜே.ஈ.சீர்லோட் (J.E.CIRLOT) என்பவரும் மேற்கொண்டிருந்தனர். அவுஸ்திரேலிய சிட்னி பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹைற் (HAIT) கிழக்கு மாகாணத் தம்பிலுவில் கிராமத்தில் தங்கியிருந்து கண்ணகி வழிபாடு பற்றி ஆராய்ச்சி செய்து பத்தினி கல்ற் (PATHNI CULT) எனும் நூலை எழுதியுள்ளார்.

பேராசிரியர் யல்மன் (YALMAN) தனது நூலிலே ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் பெண்களின் புனிதம் பற்றிக் கூறியுள்ளார். பிரித்தானிய தொல்பொருள் காட்சிச்சாலையில் உள்ள கண்ணகி சிலை மட்டக்களப்பிலிருந்து கொண்டு செல்லப்பட்டதாக அறிய முடிகிறது. இன்று அந்நிய இனத்தவரும்

அந்நிய நாட்டவரும் ஆராய்ந்து நோக்கி ஆய்வு செய்கின்ற நிலையில் கண்ணகி புகழ் பெற்றிருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும். நம்மவர் மத்தியில் தெய்வமாகப் போற்றப்படும் கண்ணகி உலக ரீதியாகக் கவனத்தை ஈர்த்திருப்பது மகத்தான விடயமாகும் என்று செல்வி.கதிர்காமன் தங்கேஸ்வரி தமது கட்டுரையில் கூறியுள்ளார்.

**கிழக்கிலங்கைச் சமூகத்தில் சிலப்பதிகாரம் கூறும் வாழ்வியல்**

தமிழ் மண்ணுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் சிறப்பும் செம்மையும் சேர்த்துள்ள சிலப்பதிகாரம், முந்நாடு, முந்நகர், மூவேந்தர் பற்றி முக்காண்டங்களில் மூவர் வரலாற்றை மூன்றுண்மைகள் விரவ முத்தமிழ் பரவ முச்சுவை பொதிய முக்கலை மிக்க முப்பது காதைகளில் 5001 வரிகளில் ஆக்கப்பட்டுள்ளது.

இளங்கோவடிகள் சாதி, சமய, வருண, குல, மண்டல வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்ட வேற்றுமைகளிடையே ஒற்றுமை காண்கின்ற தமிழர் இன ஒருமைப்பாட்டை வலியுறுத்தி சிலப்பதிகாரக் காப்பியத்தைப் படைத்துள்ளார்

*- வெள்ளிக்கிழமைத் தொடர்ச்சி..... - தினக்குரல் 11 யூலை திங்கட்கிழமை*

**வா**ழ்வியலுக்கு உயிருடன் இருந்து இயங்கும் நிலை என அர்த்தம் கூறலாம். அழகுமயமான அர்த்தம் மிகுந்த வாழ்க்கையை வாழ்ந்து பார்த்து வாழ்வியலை வெற்றி கொள்வதற்குரியதுதான் மனிதப்பிறவி. தனி மனித வாழ்க்கை சமூகத்துடன் சங்கமிக்கும் போதுதான் வரலாறாகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலைக் காட்டும் சிலப்பதிகாரம் எமக்கும் பல வாழ்வியல் தத்துவங்களைக் கூறியுள்ளது. அவற்றில் பல இன்னும் எமது சமூகத்தில் பயில் நிலையிலிருக்கிறது. நாம் கிழக்கிலங்கைச் சமூகத்தவர், நாம் தமிழர் கிழக்கிலங்கை சமூக வரலாற்றை படிமுறை ரீதியாக பூரணமாக அறிந்து கொள்ள முடியவில்லை. 18ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஓரளவு அறிய முடிகிறது.

வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய கிழக்கிலங்கைச் சமூகத்தைப் பற்றி பார்ப்போம். வேறு மொழி, மதம், இனத்தவர் வாழ்ந்தாலும் தமிழ் இந்து மக்களை அதிகமாகக் கொண்ட சமூகமே கிழக்கிலங்கைச் சமூகம். வேற்றுமைக்குள்ளும் ஒற்றுமை பெற்றுள்ள சமூகம். வழி வழியாக தமிழ் மரபைப் பேணி பின்பற்றிவரும் சமூகம். இவையெல்லாம் எமக்குப் பெருமை சேர்க்கின்றது. சிலப்பதிகாரம் அக்காலத்தையும் கடந்து இக்காலம் வரைகால ஓட்டத்தினூடே தமிழர் வாழ்வை மரபு நெறிப்படுத்தி வந்துள்ளது. தமிழர் வாழ்வியலை உயர்ச்சி பெறச் செய்திருக்கின்றது.

குடும்பம், திருமணம், தெய்வங்கள், சடங்குகள், திருவிழாக்கள் போன்ற சமூகச் சூழலையும் உணவு வகைகள், குடிவகைகள், உடைகள், அழகுசாதனப்பொருட்கள், அணிகலன்கள், விளையாட்டுக்கள், கலைகள், பொழுதுபோக்கு அம்சங்கள், நீராடுதல் பழக்கவழக்கங்கள், மருத்துவம், கட்டிடக்கலை, தொழில்நுட்பவியல் போன்ற வாழ்க்கை முறைகளையும் விவசாயம், மந்தை வளர்த்தல், நெசவுத் தொழில், வணிகம் போன்ற பொருளாதார நிலைகளையும் மறுப்பிறப்பு, சகுனம், மோட்சம் போன்ற நம்பிக்கைகளையும் கல்வி, பழமொழிகள், விடுகதைகள், கதைகூறல் போன்ற அம்சங்களையும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. அவற்றில் அதிகமானவை இன்னும் கிழக்கிலங்கைச் சமூகத்தில் வாழ்வியலோடு இரண்டறக் கலந்திருப்பதை நாம் காணலாம் என்று எஸ்.மோசஸ் தமது கட்டுரையில் முன்வைத்துள்ளார்.

ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் மதிப்பீட்டுக் குறிப்புக்களைப் பேராசிரியர் செ.யோகராசாவும் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்தி கேசவனும் வழங்கினர்.

பேராசிரியர் செ.யோகராசா தமது மதிப்பீட்டுக் குறிப்பில் ஆய்வு என்பது 1956இல் ஆரம்பிக்கிறது. உண்மையைத் தேடல் என்பதில் ஆய்வு இருக்கிறது. சுருக்கமாகச் சொல்லக்கூடியதும் ஆய்வில் இடம்பெறலாம். கண்ணகி இலக்கியங்கள் எவை? பண்பாடு என்றால் என்ன? இந்த ஆய்வாளர் இவற்றைப் பற்றிக் கூறவில்லை. பண்பாடு பற்றிய செறிவு இருக்கவில்லை. கூறப்பட்ட தகவல்கள் போதாது. மேலும் கண்ணகி இலக்கியங்களில் முக்கியமான நூல்கள் பற்றிக் கூறப்படவில்லை. கண்ணகி இலக்கியங்களின் இயல்புகள் பற்றியும் தெரியப்படுத்தப்படவில்லை. சரியான விளக்கம் இல்லாமல் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. முக்கியமான தகவல்கள் கூறப்படவில்லை.

எந்தக் கட்டுரைகள் ஆனாலும் அவை புதிய சிந்தனைகளை உருவாக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

சீ.கோபாலசிங்கம் தமது கட்டுரையில் புதிய தகவல்களைத் தந்துள்ளார். சிந்தனைக்கு விருந்தான கட்டுரையாக அது அமைந்துள்ளது எனும் புதிய தகவல்களை எடுத்துக்காட்டலாம். கேரளத்தில் ஆடப்படும் கோவலன் கூத்தைப் பற்றியும் தெரிவித்திருக்கலாம்.

தொல்லியல் ஆய்வாளர் செல்வி க.தங்கேஸ்வரியின் அந்நிய அறிஞர்கள் தேடலில் கண்ணகி எனும் கட்டுரையின் ஆய்வு உயர்ந்து நிற்கின்றது. ஆனந்தகுமாரசாமி அந்நியர் என்ற பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளார். உயர்ந்த தரத்துக்குப் போகக்கூடிய ஒரு ஆய்வுக்கட்டுரையாக இது அமைந்துள்ளது.

எஸ்.மோசஸ் வாசித்த கட்டுரையில் புதிய கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டிய பல விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும். கட்டுரையில் கூறப்பட்டவைக்கான ஆதாரங்களை முன்வைத்திருந்தால் நல்லது. தடம்புரண்டு போகாமல் சரியான கருத்துக்களை முன்வைக்க வேண்டும். நல்லதொரு ஆரம்பம். இந்த ஆய்வரங்கு எமக்கு சிந்தனையைத் தூண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மதிப்பீட்டுக் குறிப்பு வழங்கிய திருமதி சாந்தி கேசவன் தானும் பேராசிரியர் செ.யோகராசாவின் கருத்துக்களோடு உடன்படுவதாகத் தெரிவித்தார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் தொகுப்புடன் சபையோருக்கான 'ஜயந்தெளிதல்' இடம்பெற்றது. அத்துடன் ஆய்வரங்கு நிறைவுபெற்றது. இவ் ஆய்வரங்கு மூலமாகப் பயனுள்ள பல கருத்துக்களைத் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. விழாக்குழுவினர் சிறப்பான முறையில் இவ் ஆய்வரங்கை ஏற்பாடு செய்திருந்தனர்.

**கலையரங்கும் நிறைவு விழாவும்**

மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி கலையரங்கு மண்டபத்தில் 19-06-2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மாதவி அரங்கில் கலைமாமணி மாஸ்டர் சிவலிங்கம் தலைமையில் கலையரங்கும் நிறைவு விழாவும் மிகச்சிறப்பான முறையில் நடந்தேறின. சிறப்பு அதிதிகளாக மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் திருமதி.கலாமதி பத்மராஜாவும், முன்னாள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காசுபதி நடராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

அறிமுக உரையை கதிரவன் கலைக்கழகத் தலைவர் த.இன்பராஜா அவர்கள் வழங்கினார். 'பரத ஷேஸ்திரா நாட்டியப் பள்ளி' மாணவர்கள் புஷ்பாஞ்சலி நடன நிகழ்ச்சியை அரங்கேற்றினர். இதைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. தமது வழமையான நகைச்சுவையுடன் கூடிய உரையை வில்லிசையின் பிதாமகன் மாஸ்டர் சிவலிங்கம் நிகழ்த்த சபையோர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். அடுத்து கண்ணகி காவியம் உடுக்கடித்துப் பாடப்பட்டது. நாட்டாரியல் பாடலிலே அமைந்திருந்தமை சிறப்பு. 'கண்ணகி கௌத்துவம்' நடன நிகழ்ச்சி சிறப்பாக அமைந்திருந்தது.

'கண்ணகி வசந்தன்' நிகழ்ச்சியை கன்னங்குடா மகாவித்தியாலய மாணவர்கள் அற்புதமாக நடத்திக்காட்டினார்கள். சிறுவர்களாக இருந்தாலும் பழந்தமிழ்க் கலைகள் மேலுள்ள பற்றை அவர்களின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டின. தொடர்ந்து திருமதி.கலாமதி பத்மராஜா சிறப்பு அதிதி உரையை நிகழ்த்தினார். மட்டக்களப்பு மாவட்டத்தின் கண்ணகி வழிபாட்டு முறைகளையும் கண்ணகி இலக்கிய விழாவின் சிறப்புக்களையும் தெளிவாக எடுத்து விளக்கினார்.

பரதசூடாமணி திருமதி.சுபித்ரா கிருபாகரன் அவர்களின் நெறியாள்கையில் பரதகலாலயா மாணவர்கள் 'கானல்வரி' நாட்டிய நாடகத்தை அரங்கேற்றினர். சிறப்பு அதிதியாக வருகை தந்திருந்த காசுபதி நடராஜா அவர்களால் எஸ்.பொ.வின் நூலிலிருந்து விடயம் ஒன்றைச் சுட்டிக்காட்டி தமது உரையை நிகழ்த்தினார். கண்ணகி இலக்கிய விழாக் குழுச் செயலாளர் அன்பழகன் குரூஸ் தீர்மானங்களை வாசித்தார். பூ.இராஜரெட்ணம் அவர்களின் நெறியாள்கையில் புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய மாணவிகள் 'சிலம்புச் செல்வி' எனும் கூத்தை மேடையேற்றினர். பொற்கொல்லனாக வேடம் ஏற்றவரும் கண்ணகியாக நடித்தவரும் தங்கள் பாத்திரத்தை உணர்ந்து கூத்தை ஆடினர். வடமோடிப் பாணியில் அமைந்த இக்கூத்து மட்டக்களப்பின் கலைப் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது. நிறைவுரையை வடக்கு,கிழக்கு மாகாண முன்னாள் கலாசாரப் பணிப்பாளர் செ.எதிர்மன்னசிங்கம் அவர்கள் வழங்கினார். கண்ணகி இலக்கிய விழா இனிதே நிறைவெய்தியது.

**~ நன்றி ~**

**தினக்குரல்**

# கண்ணகி இலக்கிய விழா – 2011
# நிகழ்வுகள்

## விழா ஊர்வலம்

18.06.2012 காலை 09.00 மணிக்கு மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்திலிருந்து கண்ணகி இலக்கிய விழா ஊர்வலம் தொடங்கி, திருமலை வீதி, பார் வீதி வழியாக அரசடி மகாஜனக் கல்லூரிக் கலை அரங்கு மண்டபத்தை அடைந்தது. ஊர்வலத்தில் மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் இன்னியம் ஊர்வலத்தை ஆசிரியர் திரு.கௌரீஸ்வரன் ஏற்பாடு செய்திருந்தார். பறை மேளக் கூத்தும், அலங்கார ஊர்தியும் ஊர்வலத்தை மேம்படுத்தின. விழா மண்டப வாயிலில் கண்ணகியம்மன் ஆலய அலங்கார வளைவு அதிதிகளை விசேடமாக வரவேற்றது.



# தொடக்க விழா

## 18.6.2011 காலை 10.00 மணி

### "கூலவாணிகன் சாத்தனார்" அரங்கு



அரசாங்க அதிபர் மற்றும் அதிதிகள் மங்கல விளக்கேற்றினர்.

தமிழ் மொழி வாழ்த்து.
செல்வி. சியாமளாங்கி கருணாகரன்

கண்ணகி இலக்கிய விழாக் கீதம்.
திரு.அ.ச.பாய்வா குழுவினர்

வாழ்த்துக் கவிதை –
கவிஞர் செ.குணரத்தினம்

வரவேற்புரை – திரு.க.ஆறுமுகம் (பொருளாளர்,
கண்ணகி இலக்கிய விழாக்குழு)

# கண்ணகி இலக்கிய விழா 2011ல் செங்கதிரோன் த.கோபாலகிஷ்ணன் ஆற்றிய தொடக்கவுரை



"…………… வஞ்சகமில்லாத வாழ்க்கை முறையையும், விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும், வந்தாரை வாஞ்சையோடு வரவேற்று வாழவைப்பதில் வற்றாத மனப்போக்கையும் கொண்ட கிழக்கிலங்கைத் தமிழ் சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல் , பண்பாட்டு உருவாக்கத்தின் அடித்தளமாக விளங்குவது அம்மக்களின் சாதி, மத, பேதமற்ற சமரச நோக்கும், அம்மக்கள் பேணிவரும் சகோதரத்துவ மனப்போக்கும் ஆகும். இவற்றை வெளிப்படுத் துவன அம்மண்ணில் உருவான இலக்கி யங்கள். இவ் இலக்கியங்களுள் அதி முக்கியமானது இம் மக்களிடையே நிலவும் கண்ணகி நம்பிக்கைகளும், அந் நம்பிக்கைளின் மீதெழுந்த கண்ணகி இலக்கியங்களும் ஆகும்.

எவ்வளவுதான் நவீன கலை இலக்கியக் கோட்பாடுகளும், நவீன கலை இலக்கிய வடிவங்களும் தோற்றம்பெற்றாலும் மனித மனங்களைச் செழுமைப்படுத்தும் வல்லமை பாரம்பரியக் கலை வடிவங்களுக்கும், பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்குமே உண்டு.

உலக மயமாக்கமும், தகவல் தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சியும், நுகர்வுக் கலாசாரமும் நமது பாரம்பரியப் பண்பாட்டு விழுமியங்கள் மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி மனித உறவுகளின் மகத்துவத்தை மாசு படுத்துகின்றன. இத் தாக்கத்திலிருந்து தப்புவதற்கு பாரம்பரியக் கலை வடிவங்களையும், இலக்கியங்களையும் மீளக் கட்டமைத்துப் பேணி வளர்த்தெடுக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தின் தேவை. கிழக்கிலங்கைத் தமிழ் சமூகத்தின் தனித்துவமான பண்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கில் இவ்வருடத்திலிருந்து ஆரம்பித்து எடுக்கப்படும் "கண்ணகி இலக்கிய விழாவின்" கன்னி விழாவான " கண்ணகி இலக்கிய விழா 2011" இத் தேவையை நிறைவேற்றும் ஆரம்பப் பணியாகும்.

இந்த ஆரம்பப் பணியை ஆவணமாக்குமுகமாக இத்தொடக்க விழாவில் கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம் இன்று சுவாமி விபுலாநந்த அடிகளாரின் மருமகளான காரைதீவைச் சேர்ந்த திருமதி கோமேதகவல்லி செல்லத்துரை அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு சுந்தரம் அருமைநாயகம் அவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

மன்னன் சேரன் செங்குட்டுவனுக்கு மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் கண்ணகி கதையினைச் சொல்லச் சொல்ல கேட்டு இளங்கோவடிகள் அக்கதையினை "சிலப்பதிகாரம்" எனும் காப்பியமாகப் படைத்தார். இதனால் இத் தொடக்க விழாவிற்குக் "கூலவாணிகன் சாத்தனார் அரங்கு" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவ்வருடத்திலிருந்து ஆரம்பித்து வருடாவருடம் எடுக்கப்போகும் கண்ணகி இலக்கிய விழா எதிர்காலத்தில் கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தை பண்பாட்டுத் தளத்தில் ஒன்றிணைத்து, அவர்களது சமூக, பொருளாதார, அரசியல், கல்வி, கலை இலக்கிய மேம்பாட்டை நோக்கி அவர்களை அறிவு பூர்வமாக ஆற்றுப்படுத்தும் சமூக நோக்கினையும் கொண்டிருக்கின்றது…………."

# பேராசிரியர் சி.மௌனகுரு
# தலைமையுரை

முதன் முறையாக கண்ணகி இலக்கிய விழா மட்டக்களப்பில் நடைபெறுவது வரவேற்றற் குரியது.

கண்ணகை அம்மன் மட்டக்களப்பில் இந்து மக்களின் நெருக்கத்திற்குரிய ஒரு தெய்வம். அம்மாள் என்றழைத்து அவளுடன் உறவாடுமளவு அவள் ஒரு மக்கள் தெய்வமாக மட்டக்களப்பில் குடியமர்ந்துள்ளாள். இம் மக்கள் தெய்வத்திற்கும் ஒரு வரலாறுண்டு.

இந்த வரலாற்றினூடாக பத்தினி கண்ணகியாக மாறி கண்ணகையாகத் திரிந்து கண்ணகையம்மனாக மாறிய கதையுண்டு.

தமிழர் வரலாற்றில் ஆரம்பத்தில் குலக்குழுக்கள் இருந்தமையையும், பின்னர் திராவிடர் வருகையையும் அதன் பின்னர் ஆரியர் வருகையையும் காண்கிறோம். குலக் குழுக்களிடையே பத்தினி வணக்கமும், ஆரியரிடையே மகாபாரத, இராமாயணக் கடவுள் வணக்கமும் இருந்தன என்பர்.

ஆரியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மகாபாரத, இராமாயணக் கதைகள் மேலெழுச்சி பெற்று இந்தியா முழுவதற்கும் பொதுவானதாக மாற பத்தினியை அடியொட்டி எழுந்த கண்ணகி கதை மேலெழுச்சி பெற்று தென்னிந்தியாவுக்கும் ஈழத்துக்குமுரியதாக மாறுகின்றது.

**மகாபாரத மரபும் கண்ணகி மரபும்**

இவ்வகையில் இந்தியாவில் இரண்டு பேரிலக்கிய மரபுகளைக் காணமுடியும். ஒன்று மகாபாரத மரபு, இன்னொன்று கண்ணகி மரபு. முந்தையது ஆரிய மரபு. பிந்தியது தொல் தமிழர் மரபு.

மகாபாரத கதை சிவன், கண்ணன், அல்லி, நாககன்னி முதலான உள்ளூர்க் கதைகளை உள்வாங்கியது போல கண்ணகி கதையும் மாரி, காளி, நாகமாக மாறி இலங்கை வந்து உள்ளூர்க் கதைகளை உள்வாங்கி உருவாகியுள்ளது.

இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றில் கண்ணகி கதை கூறப்படவில்லை. இதனால் கண்ணகி கதை தமிழர் மத்தியில் தனித்துவமான ஒரு தொன்மமாக இருந்தமை புலனாகின்றது. தொன்மம் என்பது உண்மையைக் கருவாகக் கொண்டு கற்பனைகள் சேர்க்கப்பட்டு நம்பிக்கையினடியாகப் பிறந்த ஒரு கதை. கண்ணகி கதைக்கும் ஒரு தொன்மம் உண்டு. கண்ணகி கதை புறநானூற்றிலும், நற்றிணையிலும் கூறப்படும் இரண்டு கதைகளின் இணைப்பு என்பர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள். இவ்விரு கதைகளையும் இணைத்தே இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்ற கற்பனைக் கதையைத் தன் காலத்திற்கு ஏற்ப எழுதினார் என்பார் அவர்.

சிலப்பதிகாரம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என முப்பெரும் பிரிவுகளையுடையது. இவற்றுள் வஞ்சிக்காண்டம் எழுதியது இளங்கோவடிகள் அல்ல, அது பிற்சேர்க்கை என்ற ஒருவாதமும் உண்டு.

**கண்ணகியின் சமயம்**

கண்ணகியை தமிழ் நாட்டில் எழுந்த சமணம், பௌத்தம், இந்து மதங்கள் தத்தமக்கென உரிமை கொண்டாடியதைக் காணுகின்றோம்.

பத்தினி வழிபாட்டில் வரும் கண்ணகி மரபுவழி இந்து மதம் சாராத கண்ணகி என்பர்.

**இளங்கோ படைத்த கண்ணகி சமணக் கண்ணகி.**

சாத்தனார் படைத்த கண்ணகியோ பௌத்தக் கண்ணகி, மணிமேகலையில் கண்ணகி புத்தர் பிறக்கும் வரை நெருப்பால் மக்களை அழித்த பாவம் தீர்க்கக் காத்திருக்கிறாள். சூடாமணிப்புலவரின் 51 விருத்தங்களாலான வைசிய புராணத்துக் கண்ணகி சிலப்பதிகாரத்துடன் ஒத்தவளாகக் காணப்படுகிறாள். காங்கேயன் எழுதிய கண்ணகி வழக்குரைக் கண்ணகி இந்துமதம் சார்ந்த கண்ணகியாகக் காட்டப்படுகிறாள். இவ்வகையில் கண்ணகி வழக்குரை சிலப்பதிகாரத்திலிருந்து பல வகைகளிலும் வேறுபடுகின்றது. சிலப்பதிகாரத்தில் கூறப்படாத பல புதுக்கதைகள் கண்ணகி வழக்குரையில் கூறப்படுகின்றன.

புகழேந்திப் புலவரின் கோவலன் கதைக் கண்ணகி கிராமிய மக்கள் பார்வையில் கண்ணகியை அணுகும் ஒரு நூலாகும். மாயாஜாலக் கதைகள் சில அதில் இடம் பெறுகின்றன. கண்ணகி மலையாள பகவதியாகி, வட்டபுரி அம்மனாக மாறுவதும் கூறப்படுகின்றது.

கோவலன் கண்ணகி கதையில் துர்க்கையே கண்ணகியாகக் காட்டப்படுகிறாள். கணவனைத் தீண்டாத பத்தினியாக துர்க்கை வாழ்ந்து இறுதியில் அவள் மதுரையை அழிக்கிறாள். கேரளத்தில் வழங்கும் கோவலன் கதையில் பாண்டியன் மனைவி பெற்ற பிள்ளையாகக் காட்டப்பட்டும் கண்ணகி மஞ்சள் பாவாடை, ரவிக்கை அணிந்து சிவனை நினைந்து தேகமெல்லாம் நீறும் கையில் வேப்பம் குழையுடனும் காட்டப்படுகிறாள்.

கண்ணகி பற்றி இவ்வாறு பல கதைகளும் நம்பிக்கைகளும் தென்னிந்தியாவிலும், இலங்கையிலுமுண்டு. தமிழ்நாட்டில் கண்ணகி வழிபாடு தேய்ந்துவிட கேரளத்தில் பகவதி, வட்டாபுரி அம்மன் என்றும் இலங்கையில் பத்தினி, கண்ணகி அம்மன், அம்மாளாச்சி என்றும் கண்ணகி வழிபாடு நிலைபெற்றுள்ளமை கவனிக்க வேண்டிய ஒன்று.

### இலங்கையில் கண்ணகி வந்த முறைமை

கண்ணகி வழிபாடு இலங்கைக்கு மிக முன்னால் (கி. பி. 2ம் நூற்றாண்டு) வந்தது என்றும் அதனைக் கஜபாகு மன்னன் கொணர்ந்தான் என்றும் பிந்திவந்தது என்றும் கண்ணகையம்மன் தானாக வந்தாள் என்றும் அபிப்பிராயங்கள் உண்டு. யாழ்ப்பாணக் கண்ணகி அங்கணாமைக்கடவை, செட்டிபுலம் அச்செழுவூடாக வந்து வற்றாப்பளையில் அமர்ந்தாள் என்பர். மட்டக்களப்பிற்கு கண்ணகி வழிபாடு யாழ்ப்பாணம், வன்னி நிலப்பரப்பு, கேரளம், சிங்களப் பகுதிகளுக்கூடாக வந்தது என்பர்.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலரின் சைவசமய மறுமலர்ச்சிப் பிரசாரத்தினால் கண்ணகி அம்மன் கோயில்கள் பல இராஜ இராஜேஸ்வரி கோயில்களாயின. எனினும் வன்னி நிலப்பரப்பில் அவள் அம்மாளாச்சியாகி மக்கள் தெய்வமானாள். பொற்புறா வந்த காவியம் மட்டக்களப்பில் கண்ணகி கோயில்கள் இருந்த இடங்களை பட்டிநகர், தம்பிலுவில், காரைநகர், வீரமுனை, கல்முனை, கல்லாறு, மகிழூர், எருவில், செட்டிபாளையம், புதுக்குடியிருப்பு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, சித்தாண்டி எனக் கூறிக்கொண்டே செல்கின்றது. மட்டக்களப்பில் இன்று ஏராளமான கண்ணகையம்மன் கோயில்கள் தோன்றிவிட்டன. கேரள கண்ணகிக்கும் மட்டக்களப்பு கண்ணகிக்குமிடையே கதைகளிலும் வழிபாடுகளிலும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பிலே கண்ணகியம்மன் மக்கள் தெய்வமாகக் காணப்படுகிறாள். தீரமிக்க பெண்ணாக அறச்சீற்றம் கொண்டவளாக, தாயாக, பறையர், இடையர் தெய்வமாக, மட்டக்களப்பின் இந்துப் பண்பாட்டுத் தெய்வமாக அவள் நோக்கப்படுகின்றாள். நேபாளத்தில் பிறந்த கௌதம சித்தார்த்தர் புத்தராகி இலங்கையில் ஸ்தாபிதம் பெற்றது போல தமிழ் நாட்டுக்குரிய கண்ணகி கண்ணகியம்மாளாகி மட்டக்களப்பின் மக்கள் தெய்வமாக ஸ்தாபிதம் பெற்றுவிடுகிறாள். அவளை வழிபடுவதற்கென பத்தாசி முறைகளும் அதனடியாக வழிபாட்டு முறைகளும் மட்டக்களப்பில் உருவாகிவிடுகின்றன.

### சமஸ்கிருத மயமாகும் கண்ணகி வழிபாடு

இன்று சமஸ்கிருத மயமாகும் கண்ணகியையே மட்டக்களப்பில் அதிகம் காணுகிறோம். கண்ணகையம்மன் சடங்கு இன்று கண்ணகி விழாவாக வடிவமைக்கப்படுகின்றது. பிராமண முறையிலான சடங்குகள் புகுத்தப்படுகின்றன. இவற்றால் மக்களிலிருந்து கண்ணகி அன்னியப்படுத்தப்படும் போக்கு உருவாக்கப்படுவது போலவே தெரிகிறது.

### பல்கலைக்கழகத்தின் பணி

இந்நிலையில் நாம் செய்ய வேண்டியவை அதிகம் உண்டு. இத்தகைய கண்ணகி விழாக்கள் மூலம் கண்ணகி பற்றியும் மாறிவரும் பண்பாடு பற்றியும் ஒரு விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தலாம். நம் மத்தியில் கிழக்குப் பல்கலைக்கழகம், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் என்ற இருபெரும் நிறுவனங்கள் உண்டு. இவற்றில் நாம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

01. இந்து நாகரிகத் துறையில் கண்ணகி வழிபாட்டு முறைகளை ஒரு பாடநெறியாக ஆக்குதல்.
02. தமிழ்த் துறையில் கண்ணகி இலக்கிய பீடம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் கண்ணகி இலக்கிய ஆய்வுகள் நடாத்துதல்.
03. நுண்கலைத்துறை கண்ணகி சம்பந்தமான கூத்துக்கள், நாடகங்களை நடாத்துதல்.
04. சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரையில் வரும் ஆடல் பாடல்களை மீளுருவாக்கம் செய்தல்.

இப்பணிகளை மேற்குறிப்பிட்ட இரு பெரும் நிறுவனங்களும் செயற்படுத்துவதன் மூலம் அவை மட்டக்களப்பு மக்களோடு இப்பணியில் இணைந்தும் கொள்ளலாம்.

# "கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்"

# திருமதி.கோமேதகவல்லி செல்லத்துரை. (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களால் பிரகடனம் செய்து அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது

கண்ணகி இலக்கிய விழா பட்டயத்தினை திருமதி.கோமேதகவல்லி செல்லத்துரை அவர்கள் பிரகடனப்படுத்தினார்

கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம் திருமதி.கோமேதகவல்லி செல்லத்துரை அவர்களால் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது

பிரதம அதிதியாக திரு.சுந்தரம் அருமைநாயகம். (அரசாங்க அதிபர், மட்டக்களப்பு) அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

# "செங்கதிர்" - கண்ணகி இலக்கி விழாச் சிறப்பிதழ் வெளியீடு.



மூத்த எழுத்தாளர். இரா.நாகலிங்கம் (அன்புமணி) வெளியீட்டுரை

மூத்த எழுத்தாளர் திரு.மு.கணபதிப்பிள்ளை. (மூனாக்கானா) அவர்கள் நிகழ்வின் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களிடமிருந்து முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

பாடும்மீன் சு.சிறிகந்தராசாவின் (அவுஸ்திரேலியா) அவர்களின் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" சிலப்பதிகார ஒலிச்சித்திர ஒலிப்பேழை திரு. வெ.தவராஜா. (பிரதேச செயலாளர்,) அவர்களால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. அதன் முதற்பிரதியை தொழிலதிபர் திரு. ரஞ்சிதமூர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சிறப்பு அதிதியாக அருட் சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

நன்றியுரை. திரு.மா.சதாசிவம் (துணைத் தலைவர், கண்ணகி இலக்கிய விழாக்குழு)

# நூலங்காடி திறந்து வைத்தல்




நூலங்காடி.
திரு. பொன். செல்வநாயகம்
அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

விழாவில் கலந்து கொண்ட அவையோரில் ஒரு பகுதியினர்.

## முதலாம் நாள் மாலை நிகழ்வுகள்.
## 18, ஜூன் 2011 சனிக்கிழமை,
## சேரன் செங்குட்டுவன் அரங்கு.
# "உரையரங்கு"



இணைப்பாளராக

திரு.மு.தவராஜா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள் பணியாற்றினார்.



திரு. ச. அருளானந்தம்
(கேணிப்பித்தன்)
தலைமையேற்றார்

பிரதம அதிதியாக

உயர்திரு. பாலேந்திரன் சசிமகேந்திரன்
அவர்கள் கலந்து கொண்டார்.

**உரையாளர்களாக,**

உரை - I. "கடல்கொண்ட காவிரிப்பூம் பட்டினம்"
கலாநிதி செல்வி. அனுசூயா சேனாதிராஜா.
(சிரேஷ்ட விரிவுரையாளர், கலை பண்பாட்டுப் பீடம், தென்கிழக்குப் பல்கலைக் கழகம்)

உரை - II. " வழக்குரைக்கும் கண்ணகி"
திரு. கி.துரைராஜசிங்கம். (சட்டத்தரணி)

# வழக்குரைக்கும் கண்ணகி

ஒளிநிலா மழைமஞ்சள் ஒழுகும் நாட்டில், ஒரு மூன்று உருவங்கள் நடந்து செல்லும். முன்னே செல்கின்ற கவுந்தியடிகளும், பின்னால் வருகின்ற கோவலனும் - இந்தக் கொடிய காட்டை இவள் எப்படிக் கடப்பாள் என்று இட்ட கேள்விக் குறியை, நிமிர்த்தி ஆச்சரியக் குறியாய் மாற்றிக் கொண்டு - இவர்கள் இருவரின் நடுவிலும் கண்ணகி நடந்து கொண்டிருக்கின்றாள்.

காலை முரசமும், கோயில்களில் எழுந்த காண்டாமணி ஓசையும், வேதபாராயணங்களும் காதில் விழ - மதுரையை நெருங்கிவிட்டோம் என்றுணர்ந்த மூவரும் உற்சாக மேலீட்டால் சற்று வேகமாக நடந்து மதுரை நகரினுட் புகுகின்றனர்.

அங்கிருந்து ஆயர் சேரிவரை அழைத்துச் சென்ற கவுந்தியடிகள் - கோவலனையும், கண்ணகியையும் மாதரி என்னும் ஆயர் முதுமகளிடம் ஒப்படைத்துவிட்டு தன் பணி நாடிச் செல்கின்றார். மாதரியும் இருவரையும் அழைத்துச் சென்று தன் இல்லிடத்தில் அல்லாது தனக்குச் சொந்தமான ஒரு புதுமனையிலே அவர்களைப் புகச் செய்து, தன் மகள் ஐயையைத் துணைக்கு அழைக்கின்றாள்.

கோவலனும், கண்ணகியும் தம் ஆசாரங்கள் முடிக்கின்றனர். அதன் பின் கண்ணகி ஆய்ச்சியர் துணையோடு சமையல் செய்து, கோவலனை உண்பிக்கின்றாள். சிறிது காலம் கழிய - கோவலன், கண்ணகி அளித்த ஒற்றைச் சிலம்புடன் சேரியை விட்டு அகலச் செல்கையில் - கிழ எருதொன்று குறுக்கிடுகின்றது. அவனது குல வழக்கப்படி அதில் ஒரு குற்றமும் இல்லாமையால், அதனைக் கடந்து மதுரை நகரில் பொன்வினைஞர் வீதியில் புகுகின்றான் கோவலன்.

இங்கு இது நிகழ, ஆயர் சேரியில் நிகழ்வன காண்போம் - இன்று திருமால் கோயிலுக்கு நெய் கொடுக்க வேண்டிய முறை நாள் - ஆயர்களுடையது அந்தோ! என்னோ உறைமோர் இட்ட பால் உறையவில்லை. எருதுகள் கண்ணீர் சோரக் காணப்படுகின்றன. என்றுமே உருகாத நெய், உருகி...... எண்ணெய்யாய்க் கிடக்கிறது. ஏதோ, துன்பியல் நிகழ்வொன்றுக்கான துர்க்குறி இது எனத் தீர்மானித்த ஆச்சாரியர்.... அத் துன்பியல் நிகழாதிருக்க கண்ணனை வேண்டி, ஆய்ச்சியர் குரவை பாடி வழிபாடியற்றுகின்றனர்.

இவை இங்கு இங்ஙனம் நிகழ, அரண்மனையிலே இன்னொரு காட்சி - அறிதுயில் கொண்ட பாண்டிமாதேவி துணுக்குற்று எழுந்தாள். தன் தோழியை அழைத்தாள். தான் கண்ட தீக்கனா உரைத்தாள். மன்னவனின் வெண்கொற்றம் குடையோடும், கோலோடும் சரிந்து விழுந்தது. வாயிற் கடைமணி அதிர ஒலித்துத் திசையெங்கும் பரவிற்று. சூரியனை இருள் விழுங்கியது. இரவு நேரத்திலே வானவில் தோன்றியது. நண்பகற் பொழுதிலே வானினின்றும் தாரகைகள் உதிர்ந்து வீழ்ந்தன. இவையெலாம் ஏன்? என ஏக்குற்று வினவுகின்றாள் பாண்டிமாதேவி.

மதுரை நகரிலே மற்றொரு காட்சி - ஒற்றைச் சிலம்போடு கைவினைஞர் தெருவிலே வந்து கொண்டிருந்த கோவலன் - ஏனைப் பொன்வினைஞர் சூழவர நடுவணாய் வந்த தலைமைப் பொன்வினைஞனைக் காண்கின்றான். இவனே இச் சிலம்பின் உண்மை விலையை மதிப்பிடக் கூடியவன் எனத் துணிந்து - அவனை அணுகி, சிலம்பைக் கொடுத்துப் பெறுமதியை உரைத்திடுக எனப் பேசாநிற்கின்றான்.

ஏற்கனவே தான் செய்த திருட்டை ஆய்ந்த புலனாய்வுத் துறையினர் இன்றோ, நாளையோ தன்னைக் கைதுசெய்யவுள்ளனர் என்பதை அறிந்து செய்வதறியாது, மீண்டிட வழிதேடிக்கொண்டிருந்த பொன்வினைஞன் - வாராது வந்திட்ட வாய்ப்பாக இதை உணர்ந்தான். கோவலனை ஆங்கோர் கடையில் இருத்திவிட்டு, கோவலனின் சிலம்போடு கோவேந்தன் அரண்மனை நோக்கி விரைந்தான்.

ஆடல் அரங்கிலே - ஆடல் அழகியரின் ஆட்டத்திலும், அவர்தம் வாட்டசாட்டத்திலும் - மன்னன் மயக்குற்றது கண்டு துணுக்குற்ற பாண்டிமாதேவி - மன்னர் பால் ஊடல் கொண்டு - அதனை உணர்த்திடாமல் தலைவலி என்று சாக்கு போக்குச் சொல்லித் தன் அந்தப்புரம் புக்காள்.

பொய்த் தலைவலியையும், அதன் உண்மைப் பொருள்தனையும் நன்கு விளங்கிக் கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் - தேவியைத் தேற்றத் திருவுளங் கொண்டு, அந்தப்புரம் நோக்கிப் புறப்பட்டான்.

அவ்வமையம் அங்கு எதிர்ப்பட்ட பொன்வினைஞன் - தக்க தருணம் இதுவென உவந்து மன்னவன் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்தான். சிலம்பின் செய்தி செப்பினான்.

**'கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும்**
**துன்னிய மந்திரம் துணை எனக் கொண்டு'**

சிலம்பு திருடிய திருடனின் செய்தி கேட்டு, ஊர்க்காவல் செய்யும் வீரரை அழைத்து,

**தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு**
**கன்றிய கள்வன் கையது ஆகின் -**
**கொன்று அச்சிலம்பு, கொணர்க ஈங்கென**

ஆணையிடுகின்றான் - அவர்களும் சென்று - பொன் வினைஞன் சுட்டிய பொய்யிலாக் கோவலனைப் பற்றினர். ஆனாலும், கள்வரின் இலக்கணம் பல்வகை கற்ற, ஊர்க் காவலர்க்கு எழுந்தது ஐயம் - கள்வன் இவனலன் என அவர் சொல்ல - பொய்யுரை வினைஞன் பொழிந்து தள்ளினான்.

முப்பத்தைந்து வரிகளிற் சொன்ன முழுப்பொய் கேட்டு இளகினன் இளையோனான காவலன் - அவன் வாள் கோவலனைப் பிளந்தது - கோவலனும் **'காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்'.**

செய்தி பரவியது - அங்கிருந்த ஆயர் மகள் ஒருத்தி, ஆயர் சேரிக்கு ஓடோடி வந்தாள் - வந்தவள் எதுவும் பேசாது நின்றாள். அவளைத் துருவித் துருவி மற்றையோர் கேட்டதும், சொல்லினள் அந்தச் சுடுதழற் செய்தி.

கள்வனல்ல தனது கணவன் - இதனைக் காட்டும் சாட்சியம் யாது உளது? கண்ணகி நங்கை கதறி எழுந்து கண்ணினிற் பட்ட கதிரினைக் கேட்டனள். **"காய்கதிர்ச் செல்வனே, கள்வனோ என் கணவன்?"** என்று,

**"கள்வனோ அல்லன், கருங்கயற்கண் மாதராய்**
**ஒள்ளரி உண்ணும் இவ் ஊர்"** என்று ஆகாயத்திலிருந்து ஆதவன் அறைந்தனன்.

இ.்தொரு சாட்சி இவளுக்குப் போதுமா? அல்லவே, அதனால்.... கொலைக்களம் அடைந்தாள். கோவலனுக்கு நேர்ந்த கொடுமை கண்டாள் - ஆற்றொணாத் துயரோடு அழுதரற்றினாள் - மாற்றம் நிகழ்ந்தது - தேவர் இறங்கினர் - தீண்டினர் அவன் மேனி - விழித் தெழுபவன் போல் எழுந்தனன் கோவலன்.

**'எழதெழில் மலர் உன்கண் இருந்தைக்க.....'**

எனக்கூறி வானவரோடு வான் நோக்கிப் போயினன் - மற்றொரு சான்றும் மனத்தில் உதித்தது.

சத்திய ஆவேசம் கொண்ட பத்தினியாள், பாண்டியன் அரண்மனை அடைந்தாள் - அங்கு நின்ற வாயிற் காவலரை நோக்கி,

**அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து**
**இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே**
**இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்**
**கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று**
**அறிவிப்பாயே..... அறிவிப்பாயே........** என்று அறிவித்தாள்.

வாயிலோன் அறிவிக்க, மன்னன் அழைத்தனன். மன்னவன் முன்னே மங்கையாள் சென்றாள்-

**"யாரையோ நீ மடக்கொடியோய்?"**

என மன்னன் வினவினன் - மறுமொழி உரைத்தனள் -

**"தேரா மன்னா, செப்புவ துடையேன்...."** என்று தொடங்கிய கண்ணகி - தேர்க்காற்பட்ட கன்றை இழந்து கதறிய பசுவுக்கு - அதே தேர்க்காலில் குற்றமிழைத்த தன் குமாரனைப் படவைத்து நீதி வழங்கிய மனுநீதிச் சோழன் -

புறாவினைக் காக்க தன் தசை கொடுத்த சிபிச் சக்கரவர்த்தி - என்னும் நீதி வழுவா நெறிவாழ் மன்னர்தம் ஆளுகைப் பட்ட சோழர்தம் பூமியள், தான் எனப் புகன்ற பின்னர் -

**"என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பாற்**
**கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி**
**கண்ணகி என்பது என் பெயரே........'** என்று

தன் வழக்குரையின் வாயில் திறந்தனள் -

மன்னன் அதற்கு மறுமொழி பகர்ந்தான் -

**......பெண்ணணங்கே**
**கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று**
**வெள்வேற் கொற்றம் காண் -**

என விளக்கினன் -

உண்மையை விளக்க ஒருபல பத்தாய்ச் சான்றுகள் ஏன்தான் சமர்ப்பிக்க வேண்டும் - கைவசமுள்ள காத்திரமான செய்தியைச் சொல்லும் திராணியம் வந்தது -

பாண்டியர் சிலம்பின் பரல் எது என்றாள் - 'முத்து' என்று முகிழ்ந்தனன் மன்னன் - கோவலன் சிலம்பு கொணரப்பட்டது - தன்னுடைய சிலம்பு 'மாணிக்கம்' என்றாள் - மன்னவன் கொடுத்ததை மாதவள் பெற்றாள். செம்பொற் சிலம்பை நிலத்தொடு மோதினாள். மாணிக்கக் கற்கள் மன்னன் முன் சிதறின. சான்று இதற்கு மேலுமா வேண்டும்.

மன்னன் திகைத்தான். மனுமுறை மீறிய தன்னை நினைத்தான். தலை சுழன்றது.

**யானோ அரசன், யானே கள்வன்**
**மன்பதை காக்கும் தென்புலங் காவல்**
**என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள் -**
என்றவன் வீழ்ந்தான்; எமன் உயிர் கொண்டான்
**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்று**
**இணையடி தொழுது - அரசியும் வீழ்ந்தாள்**

வழக்கொன்று மன்னன் முன் வரும் போது அதனை அளக்கின்ற முறைபற்றி வள்ளுவம் செப்பும்.

**ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்து செய்வ..தே முறை -**

பாண்டியன் வழக்கை (ஓர்தல் - ஆய்தல்) ஆராயவே இல்லை - ஆராய்ந்திருப்பின் இது நிகழ்ந்திருக்காது - அங்ஙனம் ஆராய்ந்திருந்தால் - விசாரணை மன்றுக்குக் கோவலன் அழைத்துவரப் பட்டிருப்பான் - அவன் மீது வினாக்கள் தொடுக்கப்பட்டிருக்கும்.

இதன் பலன் கோவலன் பெருவணிகன் என்பதும் - அவன் மாசாத்துவான் மகன் என்பதும் தெரிய வந்திருக்கும் - இத்தகு வணிகர் குலத் தோன்றல் களவு செய்திருப்பானோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கும் - அது கோவலனுக்குச் சாதகமான ஒரு நிலைமையைத் தோற்றுவித்திருக்கும்.

அல்லாமலும், கோவலனின் சாட்சியாக கண்ணகி வரவழைக்கப்பட்டிருப்பாள். அவளது சாட்சியம் கோவலனின் சாட்சியத்தை ஒப்புறுதிப் படுத்தியிருக்கும். அத்தோடு பொய் புனைந்த பொன்வினைஞன் மேல் சந்தேகம் பிறந்திருக்கும். ஏற்கனவே, புலனாய்வுத் துறையினர் வைத்திருந்த புலனாய்வுக் குறிப்புகள் பொன்வினைஞனின் குற்றத்தை உறுதிப்படுத்தியிருக்கும்.

ஆனால், இவை நடக்கவில்லை.... வெறும் கேள்வியறிவுச் சான்றின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. அதுவும் மரணதண்டனை - களவுக்கு மரண தண்டனை என்பது குற்றத்தை விடக் கூடுதலான தண்டனை அன்றோ!

களவே ஆதலின் - சிறைத் தண்டனை வழங்கியிருந்தால் - கண்ணகி சிறை மீட்க வந்திருப்பாள் தன் கணவன் கள்வனல்ல என நிரூபித்திருப்பாள்.

அது மட்டுமன்று, கள்வன் யார் எனத் தீர்மானிப்பது யார்? மன்னனன்றோ! மன்னன் தன் அதிகாரத்தையும் பாராதீனப் படுத்த முடியுமா? இங்கு நடந்தது என்ன?

**தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு**
**கன்றிய கள்வன் கையது ஆகில்**
**கொன்று அச் சிலம்பு கொணர்க -**

சிலம்பு ஒருவனது கையில் இருக்கின்றது என்பது மட்டுமல்ல - அல்லது, பொன்வினைஞன் காட்டுபவனைக் கொல்வது என்பது மட்டுமல்ல - தேவியின் சிலம்புதான் இது எனத் தீர்மானிப்பது யார்? சாதாரண ஊர்க் காவலரிடம் இத் தீர்மானத்துக்கான அதிகாரம் வழங்கப்படுதல் எவ்வகையில் நியாயத்தின் பாற்படும்?

ஆக, மன்னன் நீதி வழங்கும் முறையை முற்றாகவே அனுசரிக்கவில்லை - நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது. நீதி வழங்கப்பட்டமை வெளிப்படுத்தப் படவும் வேண்டும் என்பது மேற்குலகக் கோட்பாடல்ல - இயற்கை நீதி - எங்கணும் விரவியுள்ள நீதியின் தத்துவமே அதுதான் - இந்த வெளிப்படுத்தல் என்பதே குற்றம் ஐயமின்றி நிரூபிக்கப்பட வேண்டும் என்பதும், குற்றம் சாட்டப்பட்டவன் தன் மறுப்புரைகளை முன்வைக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்பதையும் குறித்து நிற்பதே

இவ் அடிப்படைத் தத்துவம் பாண்டியனைப் பொறுத்தவரை முற்றாக மறுக்கப்பட்டு விட்டது.... தன் மரபினனான பாண்டியன் ஒருவன் மாறுவேடத்தில் நகர் வலம் வருகின்றான். சில வாரங்களாக ஆண் நடமாட்டமின்றி பிராமணப் பெண் ஒருத்தி மட்டும் வாழ்ந்து வந்த வீடொன்றில் அற்றைநாள் இரவு பிராமணன் ஒருவன் புகுவதைக் காண்கின்றான். சந்தேகம் மனதிற் துளிர்க்கவே கதவைத்

தட்டுகின்றான். உள்ளிருந்து வந்த பேச்சு கணவன் மனைவியரே அவர்கள் என்பதை உணர்த்தத் துணுக்குறுகின்றான் பாண்டியன் - தவறைச் சீர் செய்யும் வகையில் - அயல் வீட்டுக் கதவுகள் சிலவற்றைத் தட்டிவிட்டு ஓட்டம் எடுக்கின்றான்.

மறுநாள் நாளோலக்கத்தில் இவ் விடயத்தை முறையீடு ஒன்றாகக் கொணர்கின்றனர் அந்தப் பிராமணனும் மனைவியும். தானே பிழை செய்ததாக ஒப்புக் கொண்ட பாண்டியன் தன் உடைவாளை எடுத்துக் கதவைத் தட்டிய தன் கையை அரிந்தான் - அவனது நீதியை மெச்சிய நீதிதேவதை துண்டித்த கரப்பகுதி பொற்கையாய் வளர வரமளிக்கின்றாள். இதனால் அவன் பொற்கைப் பாண்டியன் என அழைக்கப்பட்டான்.

இத்தகு பாண்டியன் மரபிலே வந்த நெடுஞ்செழியன் நீதிபிழைத்தமை ஊடல் கொண்டு சென்ற பாண்டிமாதேவியின் ஊடல் களையவே - மறுவாறாகக் கூறின் மன்னன் காமவயப் பட்டமையால் அரசியல் பிழைத்தான். காமத்தால் கண்ணிழந்து வாழ்விழந்த - இந்திரன், இராவணன்... போன்றோர் வரிசையில் தன்னையும் சேர்த்துக் கொண்டான்.

வழக்கின் விடயப் பொருள்பால் மனம் செலுத்தாது, தன் தனிப்பட்ட அபிலாசைக்கு ஆட்பட்டு நீதி செலுத்துதல் அநீதியையே விளைக்கும்.

மேலும், சோழ நாட்டவனான கோவலன் கொல்லப்பட்டமை - சோழ மன்னனுக்குக் கோபத்தை ஊட்டி பாண்டி நாட்டின் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுத்துமன்றோ - ஆகையால் நீதி பிழைத்தமையால் தன் நாட்டுக்கே தீங்கிழைத்தவனாகின்றான் பாண்டியன்.

மன்னன் நீதி வழுவுமிடத்து அதனைச் சுட்டிக்காட்ட வேண்டியதும், தட்டிக் கேட்க வேண்டியதும் நாட்டிலுள்ள சான்றோரதும் பொதுமக்களதும் தலையாய கடமையன்றோ! அவ்வாறு குரல் கொடுக்காதவிடத்து அவர்களும் அநீதிக்கு உடந்தையாளராய் ஆவர்.

எனவே, மன்னன் மட்டுமல்ல, மன்னனை நெறிப்படுத்தாத மாந்தரும் குற்றமிழைத்தோரேயாவர். எனவே தான் காய் கதிர்ச் செல்வன் உரைத்த "ஒள் எரி உண்ணும் இவ்வூர்" என்ற இவ்வாக்கியம் நிகழ்வுக்கு வந்தது.

இது கண்ணகி ஊட்டிய தீ அல்ல - அனைத்துக்கும் சாட்சியாய் இருந்த கதிரவன் மூட்டிய தீ.

வழக்குரைத்தவள் மட்டும் தான் கண்ணகி - தீர்ப்பு வழங்கியவள் நீதி தேவதை - அரசியலார் "அரசியல்" பிழைக்கும் போது கண்ணகிகள் வழக்குரைத்துக் கொண்டேதான் இருப்பர். அவ் வழக்குரை கேட்டு வானம் தீர்ப்பளிக்கும். உலக வரலாற்றில் இவை நடந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றன. எனவேதான், கண்ணகி வழக்குரைத்த கண்ணகியாய் அல்லாது வழக்குரைக்கும் கண்ணகியாய் நிற்கின்றாள்.

வாழ்க கண்ணகி புகழ்!

**கி.துரைராசசிங்கம்**

**"அறம் கூறும் சிலப்பதிகாரம்". எனும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன்.** (அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ்ப்பாணம்) **அவர்கள் உரையாற்றினார்.**

**பேராசிரியர் மா.செல்வராஜா அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்**

திருமதி. இராஜகுமாரி கனகசிங்கம் அவர்களும் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்

மட்டக்களப்பு நுண்கலைக்கழக கலைஞர்களின் 'குறவஞ்சி' நடனம்



நன்றியுரை
திரு. சி. சாமித்தம்பி
(துணைத்தலைவர், கண்ணகி இலக்கிய விழாக்குழு)

# இளங்கோவடிகள் அரங்கு

## ஆய்வரங்கு.19.6.2011 காலை அமர்வு.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் தலைமை வகிக்க ஆய்வு மதிப்பீட்டாளர்களாக கிழக்குப் பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளர் **பேராசிரியர். செ.யோகராஜா அவர்களும்,** கிழக்குப் பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளர் **திருமதி. சாந்தி கேசவன்.** அவர்களும் பணியாற்றினர்.

இன் நிகழ்வின் இணைப்பாளராக கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் **திரு.சி.சந்திரசேகரம்** பணியாற்றினார், தொகுப்பாளராக செல்வி: **இராமலிங்கம் அபிராஞ்சல்யா** பணியாற்றினார்.

**ஆய்வாளர்கள் :-** திரு.சீ.கோபாலசிங்கம் ( வெல்லவூர்க்கோபால்), திரு.த.சகாதேவராஜா, திரு.எஸ்.மோசஸ், செல்வி.க.தங்கேஸ்வரி.

# கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு

**விபுலமாமணி.வி.ரி.சகாதேவராஜா** (B.A., PGDE.,M.Ed)
**உதவிக் கல்விப் பணிப்பாளர்**

**கண்ணகி இலக்கியவிழா - 2011 ஆய்வுக்கட்டுரை**

### அறிமுகம்

கிழக்கில் கண்ணகி வழிபாடு பிரசித்தமானது.இது ஒரு புராதன வழிபாடாகும். திராவிடப்பண்பாட்டில் முக்கியத்துவம் பெற்ற சக்தி வழிபாட்டினையே கிழக்கிலங்கையில் பிரசித்திபெற்ற கண்ணகியம்மன் வழிபாட்டில் காண்கிறோம். இலக்கியமானது படைப்பாற்றல் உள்ள தனி மனிதர்களால் படைக்கப்படுவதாயினும் அடிப்படையில் அது ஒரு சமுகசாதனமாகும்.அவ்வகையில் கண்ணகி இலக்கியங்கள் கிழக்கின் சமுக பொருளாதார பண்பாட்டு அம்சங்களில் பாரிய தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது. கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு எத்துணை பேணப்படுகின்றது என்பது தொடர்பில் இக்கட்டுரை ஆராய்கிறது.

### கண்ணகி வழிபாடு

சிந்துவெளி நாகரீக காலத்திலிருந்தே சக்தி வழிபாடு தமிழர் மத்தியில் முக்கிய வழிபாடாக இருந்து வந்துள்ளது.சக்தி வழிபாட்டில் அம்மன் பராசக்தி காளி சரஸ்வதி இலட்சுமி துர்க்கை கண்ணகை முதலிய பெண் தெய்வங்கள் வடிவில் சக்தியை நாம் வழிபட்டு வருகின்றோம். இத்தெய்வங்களுக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் கோவில்கள் கட்டி திருவிழாக்கள் உற்சவங்கள் குளிர்த்தி முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி அம்மனை பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர்.
இத்தெய்வங்களில் கண்ணகை அம்மனுக்கு இலங்கையில் குறிப்பாக கிழக்கிலும் வன்னியிலும் ஆலயங்கள் அமைத்து வருடந்தோறும் பொங்கல் படைத்து குளிர்த்தி பாடி வழிபடுவதைக் காணலாம்.
பூம்புகாரைத் தலைநகராகக்கொண்டு சோழ நாட்டிலே பிறந்து பாண்டியநாட்டிலே அரசியல் புரட்சி செய்து சேரநாட்டிலே தெய்வமாகிய கண்ணகை அம்பாள் சிங்கள மக்கள் மத்தியில் *பத்தினித்தெய்யோ* என இன்றும் வழிபட்டு வருவதைக் காணலாம்.

கண்டியிலுள் தலதா மாளிகையில் கண்ணகி கோயில் இருப்பதும் கயபாகு மன்னன் இந்தியாவின் சேரநாட்டிலிருந்து கொணர்ந்த சந்தனக்கட்டையாலான விக்கிரகமும் சிலம்பும் இன்றுமுள்ளது.

ஈழத்துக் கடைசித் தமிழ் மன்னனின் தலைநகர் கண்டி என்பதுடன் அது கண்ணகி வழிபாட்டின் உறைவிடமுமாகும்.இன்று கண்டியில் நடைபெறும் பெரஹரா பத்தினித்தெய்வமாம் கண்ணகிக்கு எடுக்கப்பட்டவிழாவேயாகும்.

### தமிழ் இலக்கியங்கள்

*உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்.*

*எந்நாட்டவர்க்கும் இறைவன்* என்று சிவனைப் பாடுகின்றனர் தமிழர்கள்.

இச்சிவன்தான் தமிழ்ச்சங்கங்களின் தலைவன் என்று சொல்லலாம். தமிழ்ச்சங்கத்தால் ஒரு நூல் அங்கீகரிக்கப்படுமாயின் அது பல வாதப் பிரதிவாதங்களைத் தாண்டவேண்டும்.

தமிழர்களுக்கு தங்கள் மொழிமீதிருந்த ஒரு கௌரவத்தையும் தமிழ்ப்படைப்பிலக்கியங்களின் மீதிருந்த நம்பிக்கையையும் காட்டுவதாக இதைக்கொள்ளலாம்.

சங்கம் தழைத்த காலத்தில்வாழ்ந்த சான்றோர்க்கு ஒரு உலகு தழுவிய பார்வை இருந்தது.

### சங்கப்பாடலை எழுதிய கணியன் பூங்குன்றனார்

*உலகமே நம் உறவு.அதனால் வேற்றூர் என்பது கிடையாது. யாதும் ஊரே யாவரும் கேளீர்* .
வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்படும் தெப்பம் போன்றதுதான் வாழ்க்கை.

2000 வருடங்களுக்குப் பின்னர் நிகழப்போகும் தமிழனின் இடப்பெயர்ச்சியை மனதில் வைத்து எழுதிய தீர்க்கதரிசனமான பாடலாக இதைக்கொள்ளலாம்.
இலக்கியமானது படைப்பாற்றல் உள்ள தனி மனிதர்களால் படைக்கப்படுவதாயினும் அடிப்படையில் அது ஒரு சமுகசாதனமாகும்.

இன்று ஈழத்திலே இலக்கிய விழிப்பு ஏற்பட்டிருக்கிறது.பல நாவல்களும் சிறுகதைகளும் கவிதைகளும் சஞ்சிகைகளும் புதிதாகப் படைக்கப்பட்டு வருகின்றன.

### சிலப்பதிகாரம்

தமிழர் பண்பாட்டு வரலாற்றில் குறித்தவொரு காலகட்டத்து வாழ்வியல் இலட்சியங்களை கோவலன் கண்ணகி மாதவிஆகிய பாத்திரங்களின் வாழ்க்கை அனுபவங்களூடாக சிலப்பதிகாரம் வெளிக்காட்டி நிற்கிறது.

மணிமேகலை சிந்தாமணி சிலப்பதிகாரம் வளையாபதி குண்டலகேசி ஆகிய ஐம்பெரும் காப்பியங்களுள் தமிழில் உருவான முதல் பெரும் காப்பியம் சிலப்பதிகாரமாகும்.இதனை இளங்கோவடிகள் சிருஸ்டித்திருந்தார்.

சிலப்பதிகாரம் ஒரு சர்வசமய சமரச இலக்கியமான தமிழ்க்காவியமாகும். இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழையும் ஒருங்கே கூறும் தனிச்சிறப்பு வாய்ந்த முத்தமிழ்க்காப்பியமாகவும் இது விளங்குகின்றது.

*அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றுஆவது ஊம்*

*உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்*

*ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்*

*சூழ்வினைச் சிலம்பு காரணமாக சிலப்பதிகாரம்*

இளங்கோவடிகள் மேற்படி மூன்றுஉண்மைகளிலும் தமிழ்ப் பண்பாட்டை நிலைநாட்டியுள்ளார்.

வேறெந்த தமிழ் இலக்கியத்திலும் இல்லாத வகையில் முடியுடை மூவேந்தரையும் அவர்தம் ஆளுகைக்குட்பட்ட தமிழ் நிலத்தையும் சமநோக்கோடு காண்கிறார்.

*கற்பெனும் திண்மையே பெண்களின் பெரும் வீரம்* என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் *உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்* எனக் கூறுகின்றார்.

சங்ககாலத்திலே கன்னிப்பெண்கள் மட்டுமே காலிலே சிலம்பு அணிவது வழக்கம்.ஆனால் சற்று பின்வந்த சிலப்பதிகார காலத்திலே திருமணமான பெண்கள் சிலம்பணிந்தார்கள்.அச்சிலம்பிலே ஒரு சிலம்பு கழன்றாலோ உடைந்தாலோ கழட்டினாலோ அங்கு விபரீதம் நிகழும் என்பது நம்பிக்கை. அவ்வகையிலே கண்ணகையினதும் கோப்பெருந்தேவியினதும் ஒற்றைச்சிலம்புகளே சிலப்பதிகாரமாயின என்று கூறலாம்.

கண்ணகி தமிழரிடையே ஒரு புதுத்தெய்வமாக உருப்பெற்ற கதையை சிலப்பதிகாரம் சுவைபடக்கூறுகிறது.

வானோர் வடிவில் வந்த கோவலனோடு தெய்வ விமானமேறி கண்ணகி வானகம் சென்ற காட்சியைக் கண்ட வேடுவர்கள் அவளைத் தெய்வமாகப் போற்றினார்கள்.

சிறு குடியீரே சிறு குடியீரே.... என்ற சிலப்பதிகார குன்றக்குரவைப் பாடலைப் பாடி வேங்கை மரத்தின் கீழ் எடுத்த முதற் சடங்கு கண்ணகி சடங்காகும்.அதனையொட்டி கண்ணகி சடங்கு முறை வழக்கிற்குவந்தது.

சேரன்செங்கூட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்துவந்து கங்கையில் நீராட்டி அக்கல்லிலிருந்து கண்ணகியின் சிலை வடித்து தனது தலைநகராம் வஞ்சிமாநகரில் அமைத்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்தான்.

இந்த விழாவிற்கு குடகக்கொங்கரும் மாளுவவேந்தனும் கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும் வந்திருந்ததாக சிலப்பதிகாரம் கூறிநிற்கிறது.

### கிழக்கு கண்ணகி இலக்கியங்களில் சிலப்பதிகாரம்

கண்ணகிதேவியைப் பத்தினித்தெய்வமாக முதன்முதல் ஈழநாட்டிற்கு அறிமுகஞ்செய்து வைக்கின்றது சிலப்பதிகாரம்.வழக்குரைநூலோ கண்ணகிதேவியை சோழநாட்டின் பெருந்திருமகளாக காவிரிப்பூம்பட்டணத்து நங்கையர் திலகமாகக் ஈழநாட்டிற்கு முதன்முதல் அறிமுகஞ்செய்து வைக்கின்றது.

இன்று காணப்படும் கிழக்குக் கண்ணகி இலக்கியங்கள் பல 16ம் 17ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கலாம்.அதற்காக அதற்கு முதல் கண்ணகி வணக்கம் இல்லையெனக் கூறமுடியாது.

கிழக்கு மக்கள் படித்தவர்கள். சிலப்பதிகாரக் கதையை இற்றைக்கு 5 நூற்றாண்டுகளுக்கு முன்னரே அறிந்துள்ளனர்.

கிழக்கின் கரிகாலன் மோனத்தவமுனி முத்தமிழ் வித்தகன் இப்புண்ணிய பூமியில் அவதரித்த ஆண்டான 1892 இல்தான் சிலப்பதிகாரமும் முதன்முதலில் அச்சிடப்பட்டது.அதன் பின்பே அதன் புகழ் கற்றவர் மத்தியில் பரம்பியது.

கயவாகு காலத்தில் அதாவது கி.பி.2ம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.ஆனால் இப்போதுள்ள கண்ணகை அம்மன் ஆலயங்கள் மீது பாடப்பெற்ற காவியங்கள் 15ம் நூற்றாண்டின் பின் தோன்றியவை.எனவே இடைப்பட்ட காலத்தில் வழிபாடு பற்றி ஆய்வுசெய்யப்படவேண்டும்.

சிலப்பதிகாரம் மானுடப்பெண்ணை தெய்வமகளாகச்செய்து நிற்க வழக்குரைப் பனுவல் தெய்வமகளை மானுடப் பெண்ணாகக் காட்டிச் செல்கின்றது.

கிழக்கில் கண்ணகி இலக்கியங்களாக வசந்தன் கவித்திரட்டு திரு.தி.சதாசிவ ஐயரும் குளுத்திப் பாடல் உடுகுச்சிந்து ஊர்சுற்றுக்காவியம் மழைக்காவியம் கூவாய்குயில் கண்ணகை அம்மன் ஊஞ்சல் கண்ணகி அம்மன் குளுத்திப்பாடல்கள் ஆகியவற்றை பண்டிதர் வீ.சீ.கந்தையாவும் வெளியிட்டுள்ளனர். பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை கண்ணகி வழக்குரைப்பாடல்களை பத்திரிகைகளில் நிறையவே எழுதியுள்ளார். வித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா கண்ணகி வழக்குரை நூலின் முதற் பகுதியினை 1965 இல் வெளியிட்டிருந்தார்.

அதன்பின்பு வித்துவான் பண்டிதர் வீ.சீ.கந்தையா கண்ணகி வழக்குரை எனும் முழு அளவிலான நூலை1968 இல் எழுதியுள்ளார்.காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் இதனை வெளியிட்டுவைத்தது. கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றி தமிழ் இலக்கிய நூல்கள் மட்டுமல்ல சிங்கள இலக்கிய நூல்களும் காணப்படுகின்றன.ராஜாவலிய ராஜரத்தினாகார பத்தினிக்கத்தாவ முதலிய சிங்கள நூல்கள் அவை.

வழக்குரைநூல் சிறிய மணிப்பரல் காரணமாகப் பெரிய போரினைக் கிளப்பிவிட்டுத் தமிழனைத் தமிழன் வென்ற செய்தியினை விரித்துச் செல்கின்றது.ஈழநாட்டிற்கும் சோழநாட்டிற்குமிடையே நடந்தேறிய இச் சண்டையில் தமிழன் தமிழனோடு சமாதானப்பட்டு வாழ்ந்த செய்தியினை ஈற்றில் நமக்குத் தெரிவித்து நம்மை மகிழ்விக்கின்றது.

வழக்குரைநூலில் வருகின்ற அணிகலன்கள் பலவற்றின் பெயர்கள் கிழக்கோடு தொடர்புடையவை.கொப்புவாழி தண்டை காலாழி பீலி உட்கட்டு மேல்வாளி கொப்புவாளி காறை கைக்கட்டு போன்ற நகைகளை அணிகின்ற வழக்கம் இன்றும் நடைமுறையிலிருக்கின்றது.

மாதவி அரங்கேற்றுக் காதையிலே சிலப்பதிகாரம் கூறுகின்ற இசை.நாடக இலக்கணங்களில் மட்டக்களப்பு நாட்டுக்கூத்தின் சாயல் கலந்துரைக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு வடமோடி நாடகங்களிலே நாடகப் பாத்திரங்கள் கூறுகின்ற தன்மேம்பாட்டுரைகள் பல மாதவியின் பேச்சில் வருவதையும் நாம் காணலாம்.தாளக்கட்டுகள் என்கின்ற நாட்டுக்கூத்து சம்பந்தமான நாட்டியக்கலைச்சொல் வரிசைகளும் மாதவி நடனத்தில் இடம்பெற்றுவருதலையும் இவ்வண் குறிப்பிடலாம்.

வழக்குரைநூலில் கிழக்கின் பேச்சுவழக்கு சொற்கள் பல வருகின்றன.பணிவிடை கழிசறை கிளப்பிவிட்டு அடிச்செழுப்பினாற்போல விடுப்புப் பண்ணுதல் அடசல் முதலான சொற்கள் உள்ளன.மட்டக்களப்புக்கேயுரிய மொண்ணையப்பர் எனும் பெயர் இந்நூலில் வருகின்றது. மொண்ணையப்பர் பரம்பரையினர் மட்டக்களப்புக் காரைதீவில் வாழ்ந்து வருவதாகவும் அவர்களே பின்பு அங்குள்ள கண்ணகி ஆலயத்தை பரிபாலித்துவருவதாகக் கூறப்பட்டுள்ளது.

முத்தமிழ் நூலான சிலப்பதிகாரத்தின் தமிழிசை மரபுகளை கோர்த்து தொகுத்து முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் இசைக்களஞ்சியமாம் யாழ்நூலை யாத்தருளினார்.

நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டில் கண்ணகி வணக்கம் பற்றி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கண்ணகி வணக்கம் இலங்கையின் இரண்டு இனத்தாரிடையே (தமிழர் சிங்களவர்)வளர்க்கப்பட்டு வந்தது. கண்ணகை அம்மன் என்றும் பத்தினி தெய்யோ என்றும் வழங்கப்பட்டுவந்தது.

சிலம்புக்காதை பற்றியபாடல்களை மட்டக்களப்பிலே கண்ணகி வழக்குரை என்றும் திருமலையிலே கோவலன் காதை என்றும் வவுனியாவிலே சிலம்பு கூறல் என்றும் பாடுவர்.

ஊர்சுற்றுக்காவியத்தில் கற்பனை உளதான இளங்கோவடிகள் சொற்கொண்டு தாபித்த *கருணை மயிலே* என்று பத்தினி போற்றப்படுகிறாள். இளங்கோவடிகள் கண்ணகிக்கு வழங்கிய *திருமாமணி திருமாபத்தினி* என்ற அடைமொழிகள் குளுத்திப்பாடல்களில் மூன்றிடங்களில் வருகிறது.கண்ணகி அம்மன் அகவலில் வரும் *பொன்செய் கொல்லன் கோவலன் பட்ட கொலைக்களங்குறுகி* என்ற அடிகள் சிலப்பதிகாரத்தில் வருபவை. பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் காவியத்தில் *சிலம்பிங்கு கொண்டுவந்த கயவாகு வாழி* என கயவாகு மன்னனும் வாழ்த்தப்படுகிறான்.

குளுத்திப் பாடலில் 91ம் காதையில்

***தேனாருஞ் செஞ்சொற் சிலப்பதிகாரக் கதையை எந்நாளும் போற்றி இனிது வாழ்வாரே*** என வாழ்த்துகிறது.

## கிழக்கில் கண்ணகை ஆலயங்கள்

கயவாகு மன்னன் காலத்தில் அதாவது கி.பி.2ம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இன்று கிழக்கில் 60க்கு மேற்பட்ட கண்ணகை அம்மன் ஆலயங்கள் இருந்திற்றபோதிலும் முதல் ஆலயம் எங்கு எப்போது கட்டப்பட்டது என்பது தொடர்பில் தெளிவில்லை. கயவாகு வேந்தனும் இலங்கையில் முதலில் எங்கு கண்ணகிக்கு கோயில் எடுப்பித்தான் என்பதில் ஐயமிருக்கிறது.

அனுராதபுரத்தில் அல்லது யாழ்.கந்தரோடைக்கு அருகிலுள்ள அங்கணாமைக்கடவையில் கட்டப்பட்டது என்று ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

மதுரையை எரித்த கண்ணகி சினத்துடன் தென்பகுதியூடாக இலங்கை வந்து வன்னியின் முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளை எனுமிடத்தில் குளிர்ந்து சீற்றம் தணிந்ததாக வரலாறு கூறுகிறது. தனிப்பட்டவர்கள் கண்ணகை ஆலயங்களை சிறிய அளவில்கட்டி வழிபட்டு வந்தனர்.இதனை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற நூலும் சுட்டிநிற்கிறது.

கண்டி அரசன் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் (1629-1637) பாடப்பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் 30 கண்ணகை அம்மன் ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.அவற்றில் அங்கணாமைக்கடவை (வெளியிலிருந்தும்) முதலூராகக் குறிப்படப்பட்டுள்ளது. எனவே அதுவே முதல் ஆலயமாகக் கொள்ளலாம்.

தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் கூறப்படாத ஆறு ஊர்களின் பெயர்கள் பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் காவியத்திற் காணப்படுகின்றன.

***பட்டி நகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்***
***பவுசுபெறு கல்முனை கல்லாறெருவில் மகிளூர்***
***செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு***
***செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா***
***அட்ட திக்கும் புகழும் வந்தாறுமூலை நகர்***
***மட்டவிழ் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை மனதில் நினைக்க வினை மாறி ஓடிடுமே.***

என ஊர்சுற்றுக்காவியம் கூறுகிறது.

நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டுக்குறிப்புகளின்படி பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் ஆலயம் 18ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 19ம் நூற்றாண்டின் முதற்கூற்றில் கட்டப்பட்டிருக்கலாம் என ஊகிக்கமுடிகிறது.

## பண்பாடு (culture)

மனித நாகரீக வளர்ச்சியின் குறிகாட்டியாக (Indicator ) பண்பாடு என்பது காணப்படுகிறது. பண்பாடு எனும் சொல் மனித அல்லது மனித சமூகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்ற போது வளர்ச்சி நிலை குறிகாட்டி (Progressive Indicator ) எனும் அணுகுமுறையின் ஊடாகவே பார்க்கப்படுகின்றது.

பண்பாடு எனும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்து பார்க்கின்றது. ஆனால் மானிடவியல் வழக்கில் இருந்து வரும் சில சொற்களைப்

போன்றே பண்பாடு என்ற சொல்லையும் மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் வரையறுத்து விளக்குவது இயலாததாகிறது. அதற்குக் காரணம் "பண்பாடு எனும் கருத்தாக்கம் மக்களின் அறிவு சார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் ( abstraction ) படி நிலைகள் மூலம் வெளிப்படுத்துவதேயாகும்'.

பண்பாடு என்பது ஒரு இயலினுடையதோ அல்லது கல்வி அலகினுடைய அடிப்படை விடயமாக மட்டுமல்லாமல் பொதுவாக எல்லாக்கல்வி ஒழுங்கு முறைகளுடனும் ( Acadamic Discipline ) தொடர்புபடுத்தப்பட்டு அல்லது உட்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றதொரு விடயமாக காணப்படுகின்றது. இதன் காரணமாக பண்பாடு எனும் அடிப்படையில் கருத்தாக்கம் இன்று வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. பண்பாடு என்றால் என்னவென்பதில் எடுத்துக் கூறப்பட்டுள்ள ஒரு சில வரைவிலக்கணங்களினால் பின்வருமாறு நோக்கலாம்

பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட்கூட்டம் தனது சமுக வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள் ஆத்மார்த்தக் கருத்துக்கள் மத நடைமுறைகள் சமூகப் பெறுமானங்கள் values ஆகிய யாவற்றினதும் தொகுதியாகும் என்கிறார் 'பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள்.

குரோபர் குளுக்கான் ஆகியோரால் எழுதப்பட்ட Culture : A Critical Review of concepts and Definitions எனும் நூலில் 'பண்பாடு எனும் கருத்தாக்கத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள சில எடுத்துக் காட்டல்கள் பின்வருமாறு அமைகின்றது.

1. பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்.
2. பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாக சேர்ந்து செயற்படுகின்ற போது உண்டாகும் நடத்தை முறைகளின் தொகுப்பாகும். இது அந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராது.
3. மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் பழக்கங்களும் மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடாகும்.
4. பண்பாடு என்பது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச் சூழல்
5. பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துகளும் சமுதாய மரபு வழியாக பெறப்பட்ட நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப்பாகும்.

மேற்கூறிய வரையறைகளுள் புதிய வரையறையாகவும் பெரும்பாலானோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பண்பாடு பற்றிய வரைவிலக்கணமாக காணப்படுவது புகழ் பெற்ற மானிடவியல் அறிஞரான எட்வார்ட் பர்னட் டெய்லரின் வரைவிலக்கணத்தினைக் குறிப்பிடலாம்.

அவர் பண்பாடு எனக் கூற வருகின்ற போது அதனை ஒரு பரவலான நோக்கில் காணவருகின்றார்.

**பண்பாடு என்பது அறிவு (Knowledge) நம்பிக்கைகள்**

(Beliefs), கலை (Art), ஒழுக்கம் (Morals ), சட்டம் (Law ), பாரம்பரியம் (Custom) ஏனைய கொள்ளளவுகள் சமூக உறுப்பினராக வாழ்கின்ற போது சுவிகரித்து கொள்கின்ற பழக்கங்கள் என வரையறை செய்கின்றனர்.

எனவே டைலரின் வரைவிலக்கணத்தோடு ஒப்பிடுகின்ற போது பண்பாடு என்பது பல்பரிமாண வளர்ச்சி நிலைகளையும், உள்ளடக்கத்தினையும் கொண்டதால் அதே நேரத்தில் இடைநிலை ஊடறுப்புகளையும் கொண்டதோடு ஒரு தனிப்பட்ட மனிதனின் சமுகமயமாக்கல் கூறுகள் மிக முக்கியமான பாங்கினை பண்பாட்டு வளர்ச்சியில் வகிக்கின்றதெனக் கொள்ளலாம்..

பண்பாடு என்பது மக்களின் நடத்தை நிலைகளை ஒரு கட்டுக் கோப்பான நிலையில் செயற்படுத்தும் முதன் நிலை அமைப்பாகும். ஆகவே சாதாரணமாக அதன் உட்கூறுகள் என நோக்குகின்ற போது மேலோட்டமாக பார்க்கின்ற நடனம், கவிதை, இசை, சடங்குகள் மட்டுமல்ல, பண்பாடு எனும் அமைப்பில் பல ஆயிரமாயிரம் கூறுகள் இடம்பெற்றுள்ளன. அவை பல வடிவங்களில் அமைந்து நிற்கின்றன. ஆனால் பண்பாடு என்பது மனிதனின் நடத்தையோடு தொடர்பினைக் கொண்டிருப்பதனால் அவை இவை எவையெனக் குறித்துக் காட்டுவது கடினமானதாகும்.

எனவேதான் பண்பாட்டியலாளர்கள் அதன் அமைப்பினை விளக்கும் வகையில் மூன்று வகையாக அதன் உட் கூறுகளை இனங்கண்டுள்ளனர்.

அவை பண்பாட்டு கூறு (Cultural trout) பண்பாட்டு கலவை (Cultural Complex) நிறுவனம் (Institution) மேற்குறிப்பிட் உட்கூறுகள் அதன் போக்கின் தனித்தனியே பண்பாடு எனும் அமைப்பில் அதன் நடத்தையை வெளிப்படுத்த முடியாது. அவை ஒன்றொடு ஒன்று ஒத்ததும் தொடர்புகள் உடையதுமாகும். ஒரு பண்பாட்டு வளர்ச்சி செயற்பாட்டில் இவை மூன்றும் ஒருங்கே செயற்படுகின்றது. பண்பாடு எனும் அமைப்பு வளர்ச்சி (Growth) நவீனமயமாதல் (Modernization) உலகமயமாதல் (Globalisation) என்கின்ற கருத்தாக்கங்களுடன் தொடர்புறுகின்ற போது அதன் வெளிப்பாடுகள் பல பரிமாணங்களை கொண்டதாக நோக்கப்படுகின்றது.

## கிழக்கின் பண்பாடு

சாதாரணமாக பண்பாட்டின் உட்கூறுகள் என நோக்குகின்ற போது மேலோட்டமாக பார்க்கின்ற நடனம், கவிதை, இசை, சடங்குகள் மட்டுமல்ல. பண்பாடு எனும் அமைப்பில் பல ஆயிரமாயிரம் கூறுகள் இடம்பெற்றுள்ளன. அவை பல வடிவங்களில் அமைந்து நிற்கின்றன. ஆனால் பண்பாடு என்பது மனிதனின் நடத்தையோடு தொடர்பினைக் கொண்டிருப்பதனால் அவை இவை எவையெனக் குறித்துக் காட்டுவது கடினமானதாகும்.

அதுபோல கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு பற்றிக் கூறவிளைகின்றபோது பல அம்சங்கள் தொடர்புபட்டு நிற்பதைத் தவிர்க்கமுடியாது.அதில் வழிபாட்டுமுறை சடங்குகள் ஆலயங்கள் முதலான பல விடயங்கள் உள்ளன.

## வழிபாட்டுமுறைமை

இந்துசமயம் பல வழிபாட்டு முறைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இவைகள் மானிட படிமுறை வளர்ச்சியில் காலத்திற்குக் காலம் தோற்றம் பெற்றவை.இந்தியாவிலும் இலங்கையிலும் இவை பரவலாகக் காணப்பட்டவையாகும். ஆலயங்கள் தோன்றும் முன்னரே சடங்கு முறையான வழிபாடு தமிழரிடையே தோன்றிவிட்டது.

இவ்வழிபாட்டை நடாத்துவதற்கு ஒரு இடத்தை தயார் செய்ய வேண்டும். அதனை களன் இழைத்தல் எனக்கூறுவர். கிழக்கில் தோட்டங்களிலும் நதியோரங்களிலும் வயல்வெளிகளிலும் காட்டோரங்களிலும் இத்தகைய சடங்குகள் நடைபெற்றுவந்தன.

பிற்காலத்தில் நிரந்தரமான ஆலயங்கள் தோன்றிவிட்டதால் இச்சடங்குகள் ஆலயங்களிலேயே நடைபெறத்தொடங்கிற்று.

இலங்கையில் குறிப்பாக கிழக்கில் பாரம்பரிய வழிபாட்டு முறைகள் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

பூசாரிமுறை கட்டாடி முறை கப்புகனார் முறை ஆதிக்குடிகள் முறை சுயமுறை எனப்பல வகை. எத்தெய்வத்திற்கு எவ்வழிபாடு பேணப்படுவேண்டுமென்பதில் பாரம்பரியமான முறையான திட்டங்கள் வரையறைகள் இருந்துவந்துள்ளன.இவை பிற்காலத்தில் பத்ததிகளாக அல்லது பத்தாசிகளாக எழுதப்பட்டன.இவை 18ம் 19ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம்.
பத்தாசிகள் இருவகையுண்டு.கண்ணகையம்மன் சடங்கில் வழிபாட்டிற்கு மூன்று இடங்கள் முக்கியமானவை.

அவை கருவறை கல்யாணக்காலடி குளிர்த்திப் பந்தல் ஆகியன.இங்கு கும்பங்கள் மடைகள் படையல்கள் வைக்கப்பட்டு தெய்வங்களுக்கு வழங்க வேண்டும் என பத்தாசிகள் கூறிநிற்கின்றன.

இவற்றில் பூசாரிமுறை கட்டாடி முறை கப்புகனார் முறை என்பன பெண்தெய்வங்களுக்காக ஆண்டுதோறும் சடங்கு என்ற பெயரில் பயன்பட்டுவருகின்றன.

சடங்கு செய்கையில் பல பந்தல்கள் அமைக்கப்படுவதும் இரவுமுழுவதும் நடாத்தப்படுவதும் வழமையாகிவிட்டன.

சடங்குகளின்போது மண்டபம் காவல் பண்ணுதல் கும்பம் வைத்தல் மடைகள் வைத்தல் பூசை செய்தல் தேவாதிகளை கட்டுக்கு வைத்தல் குறைவேண்டுவாருக்குக் கட்டுச் சொல்லுதல் பலிகொடுத்தல் இப்படிப் பல நிகழ்வுகளைக் காணலாம்.

## கட்டாடி முறை

கட்டாடி முறை கிழக்கிலே திருமலையில் பெரும்பாலும் காணப்படுகிறது.தமிழில் கட்டாடி என்பது குறி சொல்லுபவன் அல்லது வண்ணான் எனப் பொருள்படும்.மட்டக்களப்பிலும் அவ்வழிபாடு உள்ளது.இது தொடர்பாக மன்றாட்டு அகவல் அடிகள் கூறுகின்றது.

கட்டாடிமார் பூஜை செய்யும் இடத்தில் தெய்வம் ஆடுபவர் பொதுவாக நிற்பதில்லை.எனி துறைநிலாவணை தாண்டவன்வெளி ஆகிய கண்ணகிஆலயங்களில் தெய்வம் ஆடுதல் நடைபெற்றாலும் உருக்கொடுத்தல் கட்டுதல் வெட்டுதல் பலிகொடுத்தல் என்பன இடம்பெறுவதில்லை.கண்ணகியம்மன் ஆலயங்களில் சிலர் சுயஉணர்வில் தெய்வமாடினாலும் அது அங்கீகரிக்கப்படுவதில்லை.இச்சடங்குகளில் குளுத்தி ஆடுதல் விநாயகப் பானை வைத்தல் கலியாணக்கால் வெட்டுதல் கல்யாணக்கால் சுற்றுதல் போன்ற சந்தர்ப்பங்களில் கட்டாடிமார் உருக்கொள்வதுண்டு.ஆனால் மந்திரம் இல்லை. கட்டாடிமார்களுக்கு மானியமாக நெற்காணிகன் வழங்கப்படுவதுண்டு.

கட்டாடி பூசை முறையில் பத்ததி முறையில் அல்லது பாரம்பரியமுறையில் கும்பங்களும் மடைகளும் வைக்கப்படுகின்றன.இங்கு தாலாட்டு அகவல் காவியம் ஆகிய பாவகைகளும் உடுக்கை சிலம்பு அம்மானைக்காய் தவில் ஆகியவற்றின் ஒலிகளும் எழுப்பப்படுகின்றன.கொம்புவிளையாட்டிற்கும் கண்ணகையின் சீற்றத்தைத் தணிக்கும் வசந்தன் பாடலுக்கும் இங்கு தொடர்பு இருந்திருக்கிறது.

கட்டாடிமார் பயபக்தியுடன் விரதமிருந்து வேண்டிய மழை பொழிந்த வரலாறுமுண்டு.இது செட்டிபாளையத்தில் நடந்ததாக வரலாறு கூறுகிறது. இவ்வாறு இயற்கையையும் வசப்படுத்தி வேண்டியதைச் சாதிக்கும் பாரம்பரிய வழிபாடுபற்றி அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த சி.கணபதிப்பிள்ளை என்பார் தமது மகமாரித்தேவி திவ்வியகாரணி (1971)எனும் நூலில் குறிப்பட்டுள்ளார்.

### கப்புகன் முறைமை

கப்புகன் முறைமை சிங்களத்தில் *கப்புறாளை* என அழைக்கப்பட்டசொல் தமிழில் கப்புகன் என்று சொல்வர்.கிழக்கில் அது மௌன இறை வணக்கத்தின்பாற் பட்டதாகும். வாயில் சீலைகட்டி வழிபாடியற்றுவர். கதிர்காமம் மண்டூர் ஆலயங்களைப் போல் காரைதீவுக் கண்ணகையம்மன் ஆலயத்தில் மட்டுமல்லாமல் பட்டிமேடு தம்பிலுவில் போன்ற இடங்களிலும் இம்முறைமையுண்டு. இதனைத் தேசிய வழிபாட்டு முறையாகவும் கொள்வர்.

கிழக்கில் வழங்கும் வழிபாட்டு முறைகளில் பாடல்களும் முக்கிய இடம் வகிக்கின்றன.அவை காவியம் அகவல் வழிபாடு குளுர்த்தி என வெவ்வேறு வகைப்படும். கண்ணகைஅம்மன் மாரியம்மன் காளியம்மன் பேச்சியம்மன் கடல்நாச்சியம்மன் திரௌபதையம்மன் வைரவர் நாகததம்பிரான் வதனமார் கிருஸ்ணன் ஐயனார் முதலிய தெய்வங்களின் வழிபாடுகளில் இப்பாடல்கள் இடம்பெறுகின்றன.

கண்ணகி வணக்கம் முதலில் தனிப்பட்ட குடும்பங்களின் சொத்தாக பூசிக்கப்பட்டுவந்த போதிலும் கண்ணகையை வழிபடுவோர் தொகை அதிகமாக கோயில் கட்டி வழிபடத் தொடங்கினர்.அதற்கு அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களும் படையெடுக்கத்தொடங்கினர்.
உதாரணமாக செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயத்தைக் குறிப்பிடலாம்.இவ்வாலயத்தில் கிரான்குளம் களுதாவளை குருக்கள்மடம் மாங்காடு அம்பிலாந்துறை பழுகாமம் தேத்தாத்தீவு ஆகிய ஏழு ஊர்களைச்சேர்ந்தவர்களுக்கு உரிமை இருந்தது.

### சடங்கு நிகழ்வுகள்

கண்ணகி மதுரையை எரித்தது கயவாகு மன்னன் பத்தினிக்கு விழா எடுத்தது சிங்கள மக்கள் பெரஹரா ஊர்வலம் நடாத்தி பத்தினியை வழிபடுவதெல்லாம் ஆடி மாதத்திலாகும்.

ஆனால் தமிழர்கள் இதனைத் தவிர்த்து வைகாசி மாதத்தில் கண்ணகிக்கு சடங்கு செய்துவருகின்றனர்.

*வைகாசித்திங்கள் வருவேனென்று வரிசைக்கியைந்து விடைகொடுத்தாரே* என குளித்திப் பாடல் கூறுகிறது.

இதில் *வைகாசித் திங்கள்* என்பதில் இருவேறு கருத்துக்கள் நிலவிவருகின்றன.

ஒன்று வைகாசிப் பூரணையைக்குறிக்கும்.மற்றயது வைகாசிப்பூரணைக்கு அடுத்து வருகின்ற திங்களைக் குறிக்கும்.இவை சடங்குகளின் இறுதித் தினமாகக் கொள்ளப்படுகின்றன.இச்சடங்குகள் வைகாசி மாதத்தில் நடப்பதால் வைகாசிப் பொங்கல் என்றும் வைகாசிச்சடங்கு என்றும் வைகாசிக்குளுத்தி என்றும் அழைக்கப்படுவதுண்டு.

### சடங்கு

சடங்கு நடைபெறும் நாட்களின் எண்ணிக்கை ஊருக்கு ஊர் வேறுபடும். சில ஊர்களில் 5 நாட்கள் சில ஊர்களில் 7 நாட்கள் இன்னும் சில ஊர்களில் 9 நாட்களும் நடைபெற்றுவருகின்றன. சடங்கின் ஆரம்பநாள் கதவுதிறத்தல் என்று கூறுவர்.மாரியம்மன் காளியம்மன் சடங்கைப் பொறுத்தவரை இது கும்பம் வைத்தல் என அழைக்கப்படும். ஆரம்பநாள் கல்யாணக்கால் வெட்டும் சடங்கு என்றும்

கூறுவர்.அன்று கடல்நீர் எடுத்துவரும்வழியில் ஏலவே பார்த்துவைத்திருந்த இடத்தில் பூவரசு மரம் அல்லது வேம்பு மரக்கிளையை கத்தி பாவிக்காமல்முறித்துஊர்வலமாக வந்து ஆலயத்தில் புடவைகள் சுற்றி நடப்படும்.இது பக்தியூட்டும் நிகழ்வாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

பின்பு பச்சைகட்டல் என்பது பாரம்பரிய நிகழ்வாகும்.மதுரையில் மாதரி வீட்டில் புகுந்த கண்ணகைக்கு சமையல் செய்து கொடுக்கப்பட்டதைக் குறிக்கும்.அன்று வழக்குரையில் அடைக்கலக்காதை பாடப்பெறும்.இக்கதையிற் கூறப்படும் காய்கறிகளை ஒவ்வொன்றாகச் சொல்ல கட்டாடியார் அவற்றை எடுத்து அம்மன் முன் காணிக்கையாக வைப்பது இதில் முக்கிய அம்சமாகும்.
இறுதிநாள் பகலில் வழக்குரையில் கொலைக்களக்காதை பாடப்பெறும்.கோயில் சோகமயமாகவிருக்கும்.அன்று மதியச்சடங்கு நடைபெறமாட்டாது.மாலையில் வழக்குரைக் காதை பாடுவர்.இறுதியில் குளிர்த்திக் காதை பாடியபின் வைகறைப் பொழுதில் திருக்குளிர்த்தி நடைபெறும்.அதன்போது அவ்வவ் ஊர்களிலுள்ள மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வழிபடுவது இன்றும் வழக்கிலுள்ளது.

இச்சடங்கு காலகட்டத்தில் கிராமங்களில் மஞ்சள் தட்டக்கூடாது மாவிடிக்கக்கூடாது புலால் உண்ணக்கூடாது இப்படி பலத்த பாரம்பரிய கட்டுப்பாடுகள் உள்ளன.அவை இன்றும் பண்பாடு ரீதியாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றமை அம்மனிலுள்ள பயபக்தியைக் காட்டுகிறது எனலாம்.

## முடிவுரை

பாரம்பரிய இலக்கியங்களில் கண்ணகி வழிபாட்டிற்கென தனியிடமுண்டு. அது ஏனைய வழிபாடுகளிலிருந்து பண்பாட்டியல் ரீதியில் வேறுபட்டுநிற்பது அதன் தனித்துவத்திற்குக் காரணமாகும்.இன்று சில கண்ணகை அம்மன் ஆலயங்கள் ஆகம முறைக்குட்பட்ட ஆலயங்களாக மாறிவருகின்றபோதிலும் பத்ததி முறையினைக் கைவிட தயங்குகின்றன. எனவே அம்மனின் கோபப் பார்வைக்கு ஆளாகாமல் பாரம்பரிய வழிபாட்டுமுறையைத் தொடரவைப்பதில் இலக்கியங்களின் பங்களிப்பு காத்திரமானது என்பது கண்கூடாகும்.


**உசாத்துணை நூல்கள்**

- கந்தையா. வீ.சீ. கண்ணகி வழக்குரை - 1968
- இளங்கோவடிகள் .சிலப்பதிகாரம் குன்றக்குரவை – அடி 11-22
- முத்துத்தம்பிப்பிள்ளை.ஆ.யாழ்ப்பாண சரித்திரம் -1915
- சிறப்புமலர். இரண்டாவது உலக இந்து மாநாடு .இலங்கை- 2003
- மருதநிலா. வட-கிழக்கு மாகாண இலக்கியவிழா மலர் - 1996
- மௌனகுரு .சி. பேராசிரியர் .மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு - 2003
- பாரதி P.V பண்பாட்டு மானிடவியல் சென்னை மாணிக்க வாசகர் பதிப்பகம் -1999
- Kroeber, A.L, and Kiuckhohn, c ( eds ) Culture: A Critical Review of Concepts and Definitions ( Newyork : Random House, 1952
- E.B.Tylor, Primitive Culture, 2 Vols ( New york : Harper & Row, - 1958
- G.H.Peris, Studies on The Press in Srilanka And South Asia ( Srilanka : International Centre for Ethnic Studies, 1997



ஆய்வரங்கத்தலைவர்
பேராசிரியர்
திரு.அ.சண்முகதாஸ் அவர்கள்

ஆய்வரங்க இணைப்பாளர்
திரு.சி.சந்திரசேகரம்
விரிவுரையாளர், கிழக்குப்பல்கலைக்கழகம்

**“கண்ணகி நம்பிக்கைகள் – ஓர் பொது நோக்கு”** எனும் தலைப்பில்
**திரு.சீ.கோபாலசிங்கம்.** (வெல்லவூர்க் கோபால்) ஆய்வுரை நிகழ்த்தினார்.

# கண்ணகி நம்பிக்கைகள் ஏனைய பிரதேசங்களுடனான ஒரு பொது நோக்கு

### கவிக்கோ வெல்லவூர்க் கோபால்

கிழக்கு மாநிலம் அதன் நீண்ட கால வரலாற்றில் தாய்த் தெய்வ வழிபாட்டினை முக்கியப்படுத்தியே வந்துள்ளது. வருடந்தோறும் வைகாசித் திங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் கண்ணகித் தெய்வத்திற்கு ஒருசேர எடுக்கும் விழா கிழக்கிலங்கைத் தமிழரைப் பொறுத்தவரையில் ஒரு தேசிய விழாவாகவே கொண்டாடப்படுகின்றது. கண்ணகி பற்றிய நம்பிக்கைகள் நம்மத்தியில் மிக்க வலுவானவை என்பதால் அவற்றைப் பொதுநிலைப்படுத்தி ஏனைய பிரதேசங்களுடன் எனது உரையினை முன்னெடுப்பதே பொருத்தமானதாக அமையும். கண்ணகி தொடர்பான தமிழ் சிங்கள மற்றும் மலையாள இலக்கியங்களும் கண்ணகி பற்றியதான கள ஆய்வுத் தகவல்களும் இவ்வுரையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

கிழக்கிலங்கையில் வழக்கிலுள்ள - தமிழிலெழுந்த கண்ணகி இலக்கியங்களான வழக்குரை காதை, ஊர் சுற்றுக் காவியம், பொற்புறா வந்த காவியம், கண்ணகியம்மன் குளிர்த்திப் பாடல்கள், கண்ணகியம்மன் பிரார்த்தனை, கண்ணகியம்மன் அகவல், உடுகுச் சிந்து, தனித்தனிக் கோவில்களுக்கான கண்ணகியம்மன் காவியங்கள், கண்ணகியம்மன் தோத்திரம், மழைக்காவியம், கொம்புமுறிப் பாடல்கள், கண்ணகி வசந்தன் பாடல்கள், குயில்பாட்டு மற்றும் கண்ணகியம்மன் பத்ததிகளான கூனற் பத்ததி, குளக்கட்டுப் பத்ததி, கொம்புப் பத்ததி, கன்னிமார் பத்ததி, சிங்களப் பத்ததி, வேடப் பத்ததி போன்றவையும் இங்கு கண்ணகியின் வரவு மற்றும் அவளுக்கான வழிபாட்டு முறைகளை வெளிப்படுத்துவதாக அமையும்.

வடமாகாணத்தின் பழமையும் புகழும் மிக்க வற்றாப்பளை கண்ணகியம்மன் கோவிலில் பாடப்படும் காவியம்,

*அருள்மேவு சிவசமய நாதரும் வாழி!*
*அன்புநெறி மட்டக் களப்புநகர் வாழி!*
*தருமேவு கயபாகு ராசனும் வாழி!*

என வாழ்த்தும் தன்மை கொண்டு மட்டக்களப்பைத் தலைநகராகக் கொண்டிலங்கிய கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டின் சிறப்பினையும் அதனைக் கொண்டுவந்த கயபாகு மன்னனின் பெருமையினையும் நம்மால் அறியமுடியும். சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில் கட்டி விழாவெடுத்ததை இளங்கோ அடிகள் குறிப்பிடுவார். அதில் கலந்துகொண்ட கஜபாகு முதன்முதலில் முல்லைத்தீவில் பத்தினிக்கு கோவில் அமைத்தான் எனவும் பின்னர் வற்றாப்பழையிலும் தொடர்ந்தாற்போல் கண்டி மற்றும் நவகமுவ போன்ற பல இடங்களிலும் பத்தினிக்கு கோவில்கள் எழுப்பப்பட்டதாகவும் சிங்களத்திலெழுந்த சில பத்தினி இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இதில் கண்டிப் பிரதேசத்தில் தொடங்கிய கண்ணகி வழிபாடே இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் அறிமுகமாயிருக்கலாம் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது.

இன்றைய கேரளம் எனப்படும் சேரநாடு உள்ளிட்ட பண்டைத் தமிழகத்திலும் கன்னடத்தின் சில பகுதிகளிலும் ஈழத்தே தமிழ் சிங்கள மக்களிடத்திலும் ஆழமாக வேரூன்றிய தன்மையினைக் கண்ணகி பற்றிய நம்பிக்கைகள் வெளிப்படுத்துவதாக அமையும். உண்மையில் கண்ணகி கதை பற்றிய தொன்மமானது நீண்டகால வரலாற்றினைக் கொண்டிருப்பதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. வாய்மொழி வரலாறாக வரவிவந்த தெய்வீகம் பொருந்திய ஒரு பெண்ணின் கதை சங்க இலக்கியமான நற்றிணையில் 219வது பாடலாக ஒருமுலையறுத்த திருமாவுண்ணி எனக் குறிப்பிடப்பட அதுவே இளங்கோவடிகளின் சிலப்பதிகார காப்பியமாக உருவெடுத்ததாகக் கருதுவர்.

நற்றிணையில் வரும் வேங்கை மரத்தடியில் நின்ற திருமாவுண்ணி, சிலப்பதிகாரம் குறிப்பிடும் வேங்கை மரத்தடியில் நின்ற கண்ணகி அத்தோடு தொங்க மரத்தடியில் நின்ற இயக்கி மற்றும் கேரளம், தமிழகம், கர்நாடகம் போன்ற தென்னிந்திய மாநிலங்களின் மலை ஜாதியினர் இன்றும் வணங்கிவருகின்ற பாலைமரத்தடியின் தெய்வமான ஒற்றை முலைச்சி போன்றவையும் சிங்கள மக்களிடையே நிலவுகின்ற ஏழு பத்தினிகள் கதையும் இலங்கையில் வேடுவர்களின் மரத்தடித் தெய்வமான பத்தினியும் மிகப்

பழங்காலத்தை வரலாறாகக் கொண்ட தாய்த் தெய்வ வழிபாட்டின் வெளிப்பாடாக அமையும். இத்தகைய பழைமை பொருந்திய தாய்த் தெய்வங்களை - Free Goddesses என மேலைத்தேய சமூகவியல் மற்றும் மானிடவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். கேரளத்தின் கிராமிய மக்களிடையே காணப்படுகின்ற நீலி வழிபாடானது கண்ணகியின் முற்பிறப்புப் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடும் நீலியை இணைத்துப் பார்ப்பதாகவே கொள்ளப்படும்.

நம் மத்தியில் படிக்கப்படுகின்ற கண்ணகி வழக்குரை காதையும் கண்ணகி தொன்மத்தின் பாற்பட்டதே. எனினும் வழக்குரை காதை கொண்டிருக்கும் சில அம்சங்கள் சிலப்பதிகாரத்திலிருந்து மாறுபடுவதை நம்மால் அவதானிக்க முடியும். இதில் குறிப்பாக அவளது தோற்றுவாய் முதல்கொண்டு திருமணம் வரையான பகுதிகளின் வேறுபாட்டினை இதன் அடக்கமாகக் கொள்ளமுடியும். சிவனும் உமையவளும் கைலையிலிருந்து பாண்டியனின் நெற்றிக் கண்ணை அழிப்பதற்காக நாமங்கலையை மாங்கனி வடிவில் மதுரைக்கு அனுப்பியதாகக் கண்ணகியின் தோற்றுவாய் அமையும்.

சிங்களத்தில் எழுந்த பத்தினி ஹெல்லவும் அம்ப விதிமயும் கண்ணகியின் தோற்றுவாயை மாங்கனி மூலமே வெளிப்படுத்தும், மாங்கனியை சக்கரக் கடவுள் எனப்படும் இந்திரன் உண்ண முற்பட்டபோது அதில் ஒரு துளி பாண்டியனின் நெற்றிக் கண்ணில் விழ அது மறைந்தாக அவை கூறும். பின்னர் அம்மாங்கனியிலிருந்துஅழகிய இளவரசி வடிவில் பத்தினித்தெய்வம் தோன்றியதாகவும் அவை குறிப்பிடும். இதில் ஒரு முக்கிய அம்சம் யாதெனில் வழக்குரை காதையில் நாமங்கலையை சிவன் அனுப்பியதாகக் கூற, பத்தினி ஹெல்ல மாங்கனியைப் புத்தர் அனுப்பியதாகக் கூறும். இதனோடு இணைவுற்றதாக ஏழு பத்தினிக் கடவுள் தோற்றம் பெறுவதையும் இன்னுமோர் தொன்மம் வெளிப்படுத்தும். காவேரிக் கரையில் விழுந்த மாங்கனியின் விதையானது ஒரு பெண்தெய்வமாகத் தோற்றம் பெற்றதெனவும் அது அம்மை, தொண்டைக்கரப்பான், குக்கல், இருமல், வைசூரி போன்ற நோய்களை தோற்றுவித்ததாகவும் அதனைக் கண்டு அஞ்சிய இந்துக்களும் பௌத்தர்களும் அத்தெய்வத்தை நோக்கி அம்மா எங்களிடம் வந்து எம்மைக் காத்தருளுங்கள் என இரந்து வேண்ட அத்தெய்வம் பின்னர் உரமல பத்தினி, கரமல பத்தினி, கினி பத்தினி, தெவல் பத்தினி, சமன் பத்தினி, ஐரங்க பத்தினி, சித்த பத்தினி என ஏழு பத்தினியாக மாறி மக்களைக் காப்பாற்றுவதாகவும் அது வெளிப்படுத்தும். இதனை ஒட்டியதாகவே கிரியம்மாவுக்கு தானம்கொடுத்து வழிபாடியற்றுவதும் அமையும்.

மட்டக்களப்பில் படிக்கப்படுகின்ற பொற்புறா வந்த காவியம் கண்ணகி தொடர்பில் வேறுபட்ட சில தொன்மங்களைக் கொண்டிருப்பதாக அமையினும் வரலாற்று ரீதியான பல தகவல்களை அவை வெளிப்படுத்தும் தன்மையை நம்மால் அவதானிக்க முடியும். கலிபிறந்து 3300ஆகச் சொல்லப்படுகின்ற கி.பி 198ல் (2ம் நூற்றாண்டின் இறுதி) நாமங்கலை என்னும் அம்மன் மட்டக்களப்புக்கு வந்த கதையாக அது அமையும். இதன் பின்னணியில் தம்பிலுவில் கண்ணகி தோற்றமும் அதில் சேரத்துக் குடியினரான மழவரசன் குடியினரின் உரித்தும் வெளிப்படும். இங்கே குறிப்பிடப்படும் நாமங்கலை எனும் பெண்குறித்துக் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகத் தென்படுகின்றது. சிங்கள மக்களின் பௌத்த வழிபாட்டில் கண்ணகியோடு தொடர்புறுத்தப்படும் நாமங்கலையும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களாக தங்களது வரலாறு கூறும் செட்டிநாடு (காரைக்குடி) செட்டி வம்சத்தினரின் நாமங்கல அம்மனாகக் குறிப்பிடப்படும் கண்ணகியும் ஒத்ததன்மை மிக்கவர்களாக அமைவதுவேயது. செட்டிநாட்டினர் நாக குலத்தின் ஒரு பிரிவினர் என்பதுவும் அக்குலத்தைச் சேர்ந்தவர்களாக கண்ணகி பூம்புகாரை விட்டுச் சென்ற சில காலத்தின் பின்னர் தங்கள் குல அழகியொருத்தியை சோழன் ஆசைநாயகியாக்க விரும்பிய போது அதனை ஏற்றுக்கொள்ளாது அச்சமிகுதியால் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வெளியேறி புதுக்கோட்டைச் சிற்றரசுக்குரிய சிவகங்கைப் பகுதியில் காரைமரங்கள் சூழ்ந்த அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் ஒழிந்து வாழ்ந்ததாகவும் பின்னர் அந்த இடம் காரைக்குடியானதெனவும் கூறுவர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஒருகால் வலுவான - கிராமியத் தன்மைகொண்ட - தாய்த்தெய்வ வழிபாடாக மிளிர்ந்து நாவலர் காலத்து சமஸ்கிரதமயமாக்கலையும் மீறி தனது தனித்தன்மையைக் காத்து பின்னர் 1964ல் மேல்மட்டத்தினரின் ஆதிக்க மேம்பாட்டால் சமஸ்கிருத மயமாக்கலை வலிந்து ஏற்றுக்கொண்ட கோப்பாய் பலானை கண்ணகி தொடர்பான நம்பிக்கைகள் மிக்க பிரமிப்பை ஊட்டுவன. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளின் முன்னோர்கள் கண்ணகிக்கு முதன்முதலில் சேரன் செங்குட்டுவன் விழாவெடுத்த காலத்தே கண்ணகியை நோக்கி, தாயாரே! நீ எங்களிடம் வருவாயா எனக்கேட்க கண்ணகியும் முழு மனதோடு ஆமெனப் பதிலளித்து கோப்பாய் வந்து பலானையில் குடிகொண்டதாக அது தொடர்பான வரலாறுகள் தெரிவிக்கின்றன. அதன் காலத்தொடர்புக்கு சான்றுபடுத்த அவ்வாலயத்தின் பலநூறு ஆண்டுகள் பழமை மிக்க கூழாமரமும் பண்டைய தென்னிந்திய கண்ணகி விக்கிரகங்களை ஒத்ததாக கையில் சிலம்புடன் தென்படும் அதன் மூல விக்கிரகமும் கொள்ளப்படுகின்றன.

மேலும் நாவலரின் சமஸ்கிருதமயமாக்கல் அலைகளுக்கிடையே யாழ்ப்பாணத்தில் சில கண்ணகி அம்மன் கோவில்கள் அடையாளத்தினை இழந்ததுண்டு. செட்டிச்சியான சாதாரண பெண்ணுக்கு எப்படிக் கோவிலமைக்க முடியுமெனும் தீவிர கேள்விகளுக்கிடையே சில கோவில்களை பிற தாய்த் தெய்வங்களுடன் இசைவாக்கி பிழைக்க வைத்ததுமுண்டு. பல்வேறு தடைகளையும், மாற்ற முயற்சிகளையும் தாண்டி சுட்டிபுரம், பூநகரி, புளியங்கூடல், சாவகச்சேரி, பன்றித்தலைச்சி, கோப்பாய், அச்செழு போன்ற இடங்களில் மீளவும் கண்ணகி உயிர்ப்புக் குன்றாமல் நிலைபெறுவதான தகவல்களை சமூகவியல் பேராசிரியர் சண்முகலிங்கன் அவர்கள் தனது ஆய்வில் குறிப்பிடுவதை இங்கு நாம் கவனத்தில் கொள்ளல் அவசியமாகின்றது.

இலங்கையில் கண்ணகி வழிபாட்டின் தொன்மையினை வெளிப்படுத்துவதாக அமையும் சிங்கள மக்களின் பத்தினித் தெய்வ இலக்கியங்கள் தமிழிலெழுந்ததைவிட சிங்களத்தில் எழுந்தவை அனேகம் என்றே கூறவேண்டும். ராஜாவளி, கஜபாகு கத்தா, பத்தினி கத்தா, சிலம்பு கத்தா, பத்தினி தெய்யோ, பத்தினி படிம, தலுமுற பூஜாவ, பகம கம்புறா, பத்தினி சிரசபத, பாண்டி நலவ, பத்தினி மாலாவ, பலங்க ஹெல்ல, சலம்ப சந்திய, அம்பவிதிம போன்ற இலக்கியங்களும் மற்றும் கண்ணகி வழிபாட்டிற்குரியதான பத்ததிகள் போன்றவையும் இதற்குச் சான்றாக அமையும். கஜபாகு மன்னன் பத்தினியிடம் அருள்பெற்று, அம்மா! நீ எங்களிடம் இலங்கைக்கு வரவேண்டுமென விரும்பியழைக்க பத்தினியும் பெருவிருப்புடன் இலங்கை வந்ததாக அவற்றில் அனேக இலக்கியங்கள் கூறும். அது தொடர்பான கதைகளும் கண்ணகி வழிபாடோடிணைந்த ஏழு கன்னிகள் வழிபாடும் கிரியம்மா தான வழிபாடும் சிங்கள கிராமிய மக்களிடம் இன்றும் நிலவுவதும் இதன்பால் பத்தினித்தெய்வம் தங்களுக்குரிய தெய்வமேயென அவர்கள் வலுவான நம்பிக்கை கொண்டிருப்பதுவும் நம் கவனத்தை ஈர்ப்பதாக அமையும்.

கி.பி 2ம் நூற்றாண்டை தொடக்க வரலாறாகக் கண்ணகி வழிபாடு கொண்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். வேதம் பரப்புபவர்களாக வந்த ஆரியர்கள் அக்காலத்தைத் தொடர்ந்து படிப்படியாக முத்தமிழ் நாட்டுக்குள் புகுந்துகொண்டனர். பல்லவராட்சியைத் தொடர்ந்த சோழராட்சிக்காலம் இன்னும் பெருவாய்ப்பினை இவர்களுக்கு நல்கியது. அரசவைக்குள்ளும் ஆலயங்களுக்குள்ளும் கேரளத்தின் நாயர் சமூகத்துடனான சம்பந்த உறவுக்குள்ளும் மிக்க இறுக்கத்தினை ஏற்படுத்திக் கொண்ட இவர்கள் சமூக மட்டத்தில் மேம்பட்டவர்களாயினர். ஆலயங்களின் நிருவாகச் செயல்பாட்டுக்குள் புகுந்துகொண்ட அவர்கள் பின்னர் ஆலயச் சொத்துக்களின் மேலாளர்களாகவும் மாறினர். தமிழர்களது வழிபாட்டு முறைகளுக்குள் தங்களது வழிபாட்டு முறைகளை புகுத்தினர். கி.பி 10ம் நூற்றாண்டைத் தொடர்ந்த சோழர்களது வலுவான ஆட்சிக்காலம் அவர்களுக்குப் பெரும் சாதகமாக அமைந்தபோது சமணச்சியான தமிழ்ப்பெண் கண்ணகியை இந்துக்கள் வழிபடுவது தவறானது எனும் காரணத்தைக் கற்பித்து சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் கண்ணகியை வெவ்வேறு சக்திகளின் வடிவங்களில் மாற்றியமைக்கச் செய்தனர். கண்ணகி பகவதியாக, காளியாக, துர்க்காவாக, மாரியாக, ராஜேஸ்வரியாக, செங்காளத்தியாக, செல்லத்தம்மனாக, வஞ்சியம்மனாக, வலங்கையம்மனாக இன்னும் வட்டபுரியம்மன் போன்ற சூழ்நிலைப் பெயர்களைத் தாங்கியவளாக மாற்றம் பெறலானாள். எனினும் இவ்வாறான மாற்றங்கள் முற்று முழுதாகக் கண்ணகி நம்பிக்கைகளை அழித்துவிடவில்லை என்பதே உண்மையாகும். நாம் பெற்றுள்ள ஆய்வுத் தகவல்களில் முப்பத்தி மூன்று ஆலயங்கள் கேரள மாநிலத்திலும் பதினொரு ஆலயங்கள் தமிழ் நாட்டிலும் நீண்டகால கண்ணகி வழிபாட்டினைக் கொண்டிருந்தமை உறுதியாகின்றது.

கேரளத்தின் குமுளியில் நெடுவேற்குன்றம் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடும் விண்ணேற்று மலையிலமைந்துள்ள மங்கலதேவி கோட்டம் எனப்படும் கண்ணகி கோட்டத்திலிடம்பெறும் சித்திரைப் பௌர்ணமி வழிபாடு, கொடுங்களூர் பகவதி ஆலயத்தில் தலைப்பொலி மற்றும் பரணி விழாவில் இடம்பெறும் ஆகமவிதி இல்லாத ஒற்றைமுலைச்சி அம்மனுக்குரிய வழிபாடு, திருவனந்தபுரம் மாவட்டத்திலுள்ள ஆட்டுக்கால் பகவதி ஆலயத்திலிடம்பெறும் மிகப்பிரமாண்டமான கண்ணகி பொங்கல் மற்றும் இதில் கண்ணகியைச் சிறப்பித்துப் பாடும் மலையாள மொழியிலான தொட்டம்பட்டு உற்சவப் பாடல்கள், தேக்கடியை அண்மித்ததாக சேரத்தின் பாரம்பரிய கட்டிடக் கலைக்கு கட்டியம் கூறுமாப்போல் அழகும் பொலிவும் மிக்கதாக விளங்கும் மங்கல தேவி ஆலயத்திலிடம்பெறும் கண்ணகி கோட்டத்தினை ஒத்த சிறப்பு வழிபாடு, கொல்லம் மாவட்டத்தின் வடக்கனடையிலுள்ள சுமார் 1800 ஆண்டுகால பழமையுடைய பகவதி ஆலயத்திலிருக்கும் - கண்ணகி பிறந்த இடமான காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து எடுத்துவரப்பட்டதாகக் கூறும் அம்மன் சிலை, சிலப்பதிகாரம் செங்குன்றம் எனக்குறிப்பிடும் ஆலப்புளா மாவட்டம் செங்கனூர் பகவதி அம்மன் ஆலயத்தின் வரலாற்றில் சொல்லப்படும் மதுரையை எரித்துவிட்டு நடந்துசென்ற கண்ணகி அவ்விடத்திலுள்ள மரத்தடி நிழலில் தரித்துநின்றதான ஐதீகம், எர்னாக்குளம் சோட்டனிக்காரா பகவதி ஆலயத்தின் மூல விக்கிரகம் ஒரு கையில் சிலம்புடனும் மறுகையில் வாளுடனும் காட்சிதரும் கோலம், பாலக்காடு மாவட்டம் மூத்தாந்தரையில் அமைந்துள்ள பகவதி ஆலயத்தை

சூழவர வாழும் மூத்தான் எனும் வணிகர் சமூகத்தினர் தங்களைக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகியைத் தொடர்ந்து வந்த அவளது உறவினராகக் கூறுவது, பாலக்காடு மாவட்டம் குடவையூர் பகுதியில் ஒன்றையொன்று அண்மித்ததாக ஆத்திமரச்சோடு, குன்னம்புரம் மற்றும் வேப்பின் சோடு ஆகிய இடங்களில் உள்ள அம்மன் ஆலயங்களில் மதுரையில் பாண்டியன் அரண்மனையில் நிகழ்ந்த துயரச் சம்பவங்களைத் தொடர்ந்து கண்ணகி சென்ற போது அவளைக் குளிரவைக்க வேண்டி அவளைப் பின்தொடர்ந்துசென்ற பெண்கள் ஆடியதாகக் கொள்ளப்படும் கன்னியர் காளி மற்றும் தலைப்பொலி போன்ற கிராமிய நடனங்களை அவ்வாலய உற்சவங்களில் இன்றும் ஆடுதல், கண்ணகி மதுரையை எரித்தபின் பதினான்காம் நாள் விண்ணேற்று மலையிலிருந்து கோவலனுடன் சென்றுவிட்டதாகவும் அதன்பின் கோவலனின் தந்தையும் கண்ணகியின் பெற்றோரும் மாதவியின் மகள் மணிமேகலையும் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கடல்வழிந்து வஞ்சியில் தங்கியதாக இன்றும் அப்பிரதேச மக்களால் நம்பப்படும் தன்மை, திருவாளத்தூர் முக்கொலக்கல் எனுமிடத்தில் அங்குள்ள பொற்றொழிலாள சமூகத்திற்குரிய பாரம்பரியம் மிக்க ஆலயமாக விளங்கும் பகவதி ஆலயம் தொடர்பில் கோவலன் கொலையுண்டபின்னர் தங்களது சமுகத்துக்கு தொடராகத் துன்பமேற்பட்டதாகவும் அதனைப்போக்க அம்மக்கள் இங்கு அம்மனுக்கு கோவிலமைத்து வழிபாடு செய்ததாகவும் அதன்பின்னர் எல்லா நலத்தினையும் அவ்வம்மன் தங்களுக்கு அளித்துக் காத்துவருவதாகவும் கூறப்படும் தகவல்கள் எல்லாமே இன்றும் கேரளத்தின் கண்ணகி பற்றிய நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதாக அமையும்.

கேரள மாநிலத்தில் நடைமுறையிலுள்ள பகவதி மந்திரங்களிலும் பகவதி தோத்திரங்களிலும் பெரும்பாலும் கண்ணகியின் அடையாளங்கள் வெளிப்படுவது தெரியும். கேரளாவின் விஷாரிகாவுப் பகுதியில் அமைந்துள்ள ஆனைக்குளம் பகவதி தொடர்பில் பாடப்படும் மலையாள உச்சரிப்பிலமைந்த தமிழ் விருத்தப்பாவானது இதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும்.

**ஆதிமுதல் காவிரிப்பூம் பட்டினத்து ஆயிரவூர் வங்கிசத்தில்**
**அரிய கண்ணகை யம்மனாகவே தான்பிறந்து அதிருபமானபொழுது**
**தீதிலாக் கோவலருடன் பாரியா ளாகவும் சிறிதுகாலம் சென்றபின்**
**திங்கள் முகமாய்வந்து தனிக்காக மதுரையில் சிலம்பு கூறினாளில்**
**நீதியரச சென்றான பாண்டிநா டெத்திநீ நீறாயெரித்த சோதி**
**நித்தில சொருபியாய் இத்துலகாள்கின்ற நீலியே திரிசூலியே**
**ஆதிகாலத்திலும் மகிமையாய் நீவந்த அதிசயமும் ஆரறிவாரோ**
**ஆனைக்குளம் வளர் பகவதி அம்மையே! ஆனந்த மகமாயியே!**

இப்பாடல் அடிகளில் பகவதி குறித்துப் பாடும் நிலையில் கண்ணகியே முற்று முழுதாக இங்கு வெளிப்படுவதை நம்மால் அவதானிக்க முடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சென்னையின் வடபால் திருவள்ளூர் மாவட்டத்தின் திருவொற்றியூர் ஆலயம் பழம்பெருமை மிக்க கண்ணகி ஆலயமாக ஒருகால் மிளிர்ந்ததாகும். துர்க்கையம்மன் ஆலயமென அழைக்கப்படும் இவ்வாலயத்தின் இறைவி வட்டபுரியம்மன் என்றே அழைக்கப்படுகின்றார். இவ்வாலயத்தின் பதினைந்து நாள் விழாவின் இறுதி விழாவாக பாரிய அளவில் பந்தலமைத்து அதனை எரியூட்டுவதன் மூலம் கண்ணகி மதுரையை எரித்த சம்பவம் நினைவூட்டப்படுவதை இன்றும் நம்மால் காணமுடியும்.

கரூரிலுள்ள வஞ்சியம்மன் மற்றும் வலங்கையம்மன் ஆலயங்கள் கண்ணகி வழிபாட்டினை பின்புலமாகக் கொண்டமைவன. ஆங்குள்ள வஞ்சியம்மனின் மூல விக்கிரகம் ஒற்றை மார்பினைக் கொண்டதாகும்.

மதுரையில் வடக்கு வீதியில் சிம்மக்கல் என்னுமிடத்தில் குடிகொண்டுள்ள செல்லத்தம்மனை செல்வத்தை கொடுத்து வறுமையைப் போக்கும் தாய்த் தெய்வமாகவே மக்கள் கருதி வழிபட்டுவருகின்றனர். கருவறையின் முன்னால் கையில் சிலம்புடன் காட்சிதரும் விக்கிரமானது கண்ணகியின் வரலாற்றை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். கண்ணகி மதுரையை எரித்தபின்னர் பாண்டிநாடு வறுமையுற்றதாகவும் அதனைப்போக்கவே சிம்மக்கல்லில் கண்ணகிக்கு கோவில் எழுப்பி வழிபாடியற்றியதாகவும் அதன் வரலாறு அமையும்.

கோயம்புத்தூர் பொள்ளாச்சியின் மேற்கு மலைப்பிரதேசத்தில் வசிக்கும் முத்துவன் எனும் ஆதிவாசிச் சமூகத்தினர் மதுரையில் நடந்த துயரச் சம்பவத்தைத் தொடர்ந்து கண்ணகியுடன் தாங்களும் வெளியேறி அன்று சேரனுக்குரியதாயிருந்த இப்பிரதேசத்தில் தஞ்சமடைந்ததாகத் தங்களது வரலாற்றைக் கூறுகின்றனர். அத்தோடு கண்ணகித் தெய்வத்தினையே இவர்கள் இன்று பயபக்தியுடன் வணங்கவும் செய்கின்றனர்.

நீலகிரிப் பகுதியில் வசிக்கும் தோடர் இன ஆதித்திராவிட மக்களது துர்க்கா - பகவதி வழிபாட்டில் சிலம்பு ஒன்றினுக்காக பாண்டிய மன்னன் தனது கணவனைக் கொன்ற காரணத்தினால் பாண்டிய நாட்டையே துர்க்கா எரித்த சம்பவத்தை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

பெரம்பலூர் மாவட்டத்தின் சிறுவச்சூரில் இன்று மதுரைக் காளியாக உருக்கொண்ட செல்லியம்மன் ஆலய வரலாற்றில் மதுரையை எரித்தபின்னர் ஒருபெண் பித்துப்பிடித்தவள்போல் முதலில் வடக்குநோக்கி வந்ததாகவும் அங்கே ஒரு கொடிய மந்திரவாதி எதிர்கொண்டுவர வாளெடுத்து அவன் தலையை வெட்டியதாகவும் அன்று இரவு அவ்விடத்தில் தரித்து பின்னர் மறுநாள் தெற்கு நோக்கிச் சென்றதாகவும் அவள் தரித்த இடத்தில் மக்கள் வழிபாடியற்றியதாகவும் அதன் வரலாறு கூறுவர்.

மதுரையின் புறநகர்ப் பகுதியில் பழங்காநத்தத்திற்கு அண்மையில் கோவலம் பொட்டல் எனப் பெயர்கொண்ட பகுதியுள்ளதை நம்மால் காணமுடியும். முன்னர் கோவலன் பொட்டல் என அழைக்கப்பட்ட இடமே இன்று கோவலம் பொட்டல் என மருவியதாக ஆய்வாளர்கள் கருதுவர். பொட்டல் என்பது பாழிடத்தைக் குறிப்பதாகும். இங்கிருக்கின்ற மிக விசாலித்த ஆலமரத்தின் கீழ்தான் கோவலன் தலை துண்டிக்கப்பட்டதாக அதனை அண்டி வாழுகின்ற மக்கள் இன்றும் கூறுவதையும் அவர்கள் கோவலனைக் கோவலம் எனவும் கண்ணகியை கர்ணகி என அழைப்பதையும் காணலாம்.

சிங்கள மக்களின் வழிபாட்டிலுள்ள கொழும்பு - அவிசாவளையில் களனி கங்கைக்கு அண்மையில் அமைந்த நவகமுவ பத்தினி ஆலயம் மிகப் புகழ்பெற்றதாகும். இவ்வாலயம் கஜபாகுவின் ஆட்சியில் கட்டப்பட்டதாகவே அதன் வரலாறு கூறப்படுகின்றது. போர்த்துக்கீசரின் ஆட்சியில் ஏனைய பல ஆலயங்களோடு அவ்வாலயத்தையும் இடிக்க போர்த்துக்கீச ஆளுனரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகவும் அவ்வாலயம் இடிக்கப்படவிருந்த சூழலில் அப்பிரதேச மக்கள் பத்தினியம்மனை இரந்து வழிபட்டதாகவும் அதன்போது கோட்டை மன்னனின் கனவில் தோன்றிய பத்தினி அதனைத் தடுக்குமாறு கோரியதாகவும் போர்த்துக்கேயருடன் நட்புறவு கொண்டிருந்த கோட்டை மன்னனின் வேண்டுகோளின் பேரில் அது தவிர்க்கப்பட்டதாகவும் அப்பிரதேச மக்கள் கூறுவர். அப்போதிருந்த ஆலயத்துடன் கண்டியரசன் கீர்த்தி சிறி ராஜசிங்கள் கட்டிய அழகிய ஆலயமும் இன்று கம்பீரமாகவே அங்கு காட்சி தருகின்றது.

குருநாகலைப் பிரதேசத்தில் வில்வாவ கிராமத்தில் ஒரு குன்றின் மேல் கோவில்கொண்டிருக்கும் பத்தினியம்மன் மிகப் பழமைவாய்ந்ததாகும். இதுவும் கஜபாகுவின் ஆட்சிக் காலத்தில் அவனது ஐம்பதாவது அகவையில் கட்டப்பட்டதாகவே கூறப்படுகின்றது. இங்கு இடம்பெறும் வழிபாடானது சிலம்பினை முக்கியப்படுத்தியதாக அமைவதை நம்மால் அவதானிக்க முடியும். வருடம் தோறும் அறுவடைக் காலத்தையொட்டி இங்கு பெருவிழா இடம்பெறும். ஐப்பசியில் இடம்பெறும் இவ்விழாவில் கோவில் கப்புறாளை மற்றும் நிலமை போன்றவர்கள் கையில் சிலம்பினை அணிந்திருப்பர். மேலும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அம்மடுவ பத்தினி தேவாலயம், நுவரெலியாவிலுள்ள ஹங்குறான்கெட்ட பத்தினி தேவாலயம், களுத்தறை விதியாகொட பத்தினி தேவாலயம், பதுளையிலுள்ள ஹெலகல்பே பத்தினி தேவாலயம், தெவிநுவர கொடகெதற பத்தினி தேவாலயம், நுறுகல பத்தினி தேவாலயம், கல்மடுவ பத்தினி கோவில், கல்மங்கொட பத்தினி தேவாலயம், சீதவாக்கை மெதகொட பத்தினி தேவாலயம், ஹிக்கடுவ சீனிகம பத்தினி தேவாலயம், இரத்தினபுரி சமன் தேவாலயம், கடுவல புராண ரண்கடு பத்தினி மகா தேவாலயம், மடுவ பத்தினி தேவாலயம் போன்றவை குறிப்பிடத்தக்க சிறப்புவாய்ந்த பத்தினி வழிபாட்டினை முன்னெடுப்பவையாகவும் கண்ணகி நம்பிக்கைகளை வரலாற்று ரீதியாக வெளிப்படுத்துபவையாகவுமுள்ளன.

பத்தினியம்மனுடன் தொடர்புபடும் ஆடல்களை கிராமிய சிங்கள மக்களிடையே இன்றும் பரவலாக அவதானிக்க முடியும். புகழ்பெற்ற கண்டிய நடனத்திலும் பத்தினியம்மன் முக்கியத்துவம் பெறுவதை நாம் காணலாம். அங்கலிய எனப்படும் இருகுழுக்களுக்கிடையிலான கொம்பு விளையாட்டு கிழக்கிலங்கைத் தமிழரது பாரம்பரியம் மிக்க கண்ணகியோடிணைந்த கொம்பு விளையாட்டினை நினைவுபடுத்துவதாகும். இது ஆங்கிலேயர் ஆட்சியிலே அறிமுகமானதாகத் தெரிய வருவதால் அங்கலிய மட்டக்களப்புப் பிரதேச கொம்புமுறி விளையாட்டை ஒட்டி எழுந்ததா என்பதனைக் கண்டறிதல் அவசியமாகின்றது. போறகெலிய எனப்படும் இரு குழுக்களுக்கிடையிலான போர்த்தேங்காய் அடித்தல் விளையாட்டும் பத்தினித் தெய்வத்துடன் தொடர்புபட்டதாகவே அமைகின்றது.

பொதுவாகப் பார்க்கின்றபோது கண்ணகி பற்றிய நம்பிக்கைகள் என்பது ஒரு இனத்துக்கோ அல்லது பிரதேசத்துக்கோ என்றில்லாமல் பொதுத்தன்மை கொண்டிலங்குவதை யாவரும் ஏற்றுக்கொள்ளவே செய்வர்.

# "அந்திய அறிஞர்கள் தேடலில் கண்ணகி" எனும் தலைப்பில் செல்வி.க.தங்கேஸ்வரி

(தொல்லியல் ஆய்வாளர்) ஆய்வுரை நிகழ்த்தினார்.

## முன்னுரை

கண்ணகி வழிபாடானது இன்று மக்களிடையே இரண்டறக் கலந்து சக்தி வழிபாடு என்றால் கண்ணகி வழிபாடே என்னுமளவிற்கு நிலைத்து விட்டது. வைகசிப் பௌர்ணமி என்றால் ஊரே திரண்டு நின்று விழா எடுக்குமளவிற்கு கண்ணகி விழா உயர்ந்து நிற்கிறது. கண்ணகி எங்குமே குலதெய்வமாகி விட்டாள். கண்ணகி வழிபாடு இரண்டு விதத்திலே வேரூன்றி உள்ளது.

1. சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை கூறும் பத்தினி. இது மக்கள் பக்திபூர்வமாக அனுபவித்து ஆராதித்து போற்றும் கண்ணகியம்மன்.
2. அறிஞர்களும் கற்றோரும் கண்ணகி பற்றியும், சிலப்பதிகாரம் பற்றியும் கண்ணகி வழக்குரை பற்றியும், ஆராய்ச்சி செய்து மதிப்பளிக்கும் கண்ணகி.

## கண்ணகி வழிபாடும் ஆராய்ச்சிகளும் தேடலும்

பத்தினி என்ற சிறப்புச் சொல்லால் அழைக்கப்படும் கண்ணகியை நாம் மட்டும் ஆராதிக்கவில்லை. எமது அறிஞர்கள் மட்டும் ஆய்வு செய்யவும் இல்லை. அந்நியர்கள் அதாவது வேறு சமூகத்தைச் சேர்ந்த அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் வேறு சமூகத்தை சேர்ந்த மக்களும், கண்ணகியை ஆராதிக்கின்றார்கள். அதேநேரம் ஆராய்ச்சியும் செய்கின்றார்கள். அவர்களின் தேடலில் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். ஆகவே அந்நியரான அவர்களின் தேடலில் அவர்கள் கொண்டுள்ள கருத்துக்களே இங்கு கூறப்படுவதாகும். ஆனால் முன்னோடியாக அறிஞர் கண்ணகியை ஆராதிக்கிறார்கள். அதனை சுருக்கமாக பார்ப்பது தேடலிற்கு உதவுவதாக அமையும்.

## அந்நியர் (வேறு சமூகத்தவர்) ஆராதனை செய்த கண்ணகி

சிலப்பதிகாரம், கண்ணகியை மானுடப் பெண்ணாகக் காட்டி தெய்வமாக உயர்த்தியுள்ளது. கண்ணகி வழக்குரை தெய்வ அம்சமான பெண்ணை மானுடப் பெண்ணாகக் காட்டி தெய்வமாக்கியுள்ளது. இதுதான் கண்ணகியின் முக்கிய அம்சம் ஆகும்.

இத்தகைய கண்ணகியை, இன்று எம்மிடையே வேரூன்றி வளர்ந்துள்ள கண்ணகி வழிபாட்டை ஈழத்தில் முதன்முதல் அறிமுகப்படுத்தியவன் அந்நிய சமூகத்தவன். சிங்கள மன்னனான கஜபாகு. முதன்முதல் ஆராதித்தவர்களும் சிங்கள மக்களாகும். (கி.பி 114 - 136) சிங்கள மன்னனான கஜபாகுவினால் கண்ணகிக்கு விழா எடுக்கப்பட்டது. இதனை சிலப்பதிகாரம் கூறுகின்றது.

**"கடல் சூழ் இலங்கைக் கஜபாகு வேந்தனும்**
**எந்நாட்டாங்கன் இமயவரம்பன் - இந்**
**நன்னாட் செய்த நாளனி வேழ்வியில்**
**வந்திகென்றே வணங்கினன் வேண்டத்**
**தந்தேன் வரமொன்றெழந்த தொருகுரல்"**

சேரன் செங்குட்டுவனினால் எடுக்கப்பட்ட விழாவிற்கு ஆரியமன்னன், மால்வாஅரசன், குடகுமன்னன், வேறு சிற்றரசர்கள், கஜபாகு மன்னன் போன்றோரும் வந்து வணங்கினார்கள். கண்ணகியின் அருள் அவர்களுக்கு கிடைத்ததாம். அந்த விழா முடிந்து வரும்போது கஜபாகு மன்னன் சந்தனக் கட்டையிலான கண்ணகி சிலையும், பொற்சிலம்பும், தங்க மாம்பழமும் கொண்டு வந்து ஈழத்தில் கண்ணகிக்கு கோயில் அமைத்து விழா எடுத்தான். இதனை ராஜாவலிய, ராஜரட்ணகார, பத்தினிகொல்முரா, பூஜாவலிய போன்ற சிங்கள நூல்கள் கூறும். கண்ணகியை "பத்தினி" எனக்கூறும் இந்நூல்கள் கண்ணகியை "வெற்றித் தெய்வம்", "காவல் தெய்வம்" எனவும் கூறியுள்ளன. 12000 தமிழ் மக்களும் 12000 சிங்கள மக்களும் விழாக் கொண்டாடினராம். கஜபாகு ஆடிமாதம் தோறும் தலைநகரான அனுராதபுரத்தில் விழா எடுத்தான். சிலம்பை யானைமேல் ஊர்வலமாக கொண்டு வந்தான். இதுவே பின்னர் பெரஹரா (திருவிழா) வாகியது. புத்தசமயத்தின் வரவால் புத்தரும், தந்ததாதுவும், கண்ணகி விழாவுடன் கலந்ததோடு இன்று பெரஹரா புனித தந்ததாதுவிற்கு உரிய விழாவாக மாற்றமடைந்து விட்டது.

சிலம்புக்கதா, பத்தினிபடிமா, மந்தாரம்புவபுவக்த, பன்ரிகொல்முரா, பத்தினிஅதகில்ல போன்ற வேறு சிங்கள நூல்களும் பத்தினி வழிபாடு பற்றி கூறுகின்றன. இன்று பத்தினி விழா மாற்றமடைந்தாலும் தலதா மாளிகையில் உள்ள பத்தினி கோயிலும், சந்தனக் கட்டையிலான கண்ணகி சிலையும் பழமைக்கு சான்றாக அமைகின்றன. 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வரும்வரை சிங்கள மக்கள் கண்ணகியைப் போற்றினர்.

இன்று இலங்கையிலுள்ள கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத் தலமான மடுமாதாதேவாலயம் பண்டு கண்ணகி கோயிலாக இருந்தது. இங்கு கம்மடுவ என்ற கண்ணகி விழாவும் எடுக்கப்பட்டது. பின்பு மாரி கோயிலாகி, போர்த்துக்கேயர் மேரி தேவாலயமாக்கி விட்டனர். தெரிந்தோ தெரியாமலோ அந்நியரான போர்த்துக்கேயரும் கண்ணகியை ஆராதித்துள்ளனர்.

## கண்ணகியை ஆராய்ச்சி செய்த அந்நியர்

கண்ணகி வழிபாடு பற்றி முதன்முதலில் கூறியவர் ராஜாவலிய நூலின் ஆசிரியர். சிங்கள வரலாற்று நூலான இதில் கஜபாகு மன்னனது பணி, பத்தினி வழிபாட்டை ஆரம்பித்து வைத்து விழா எடுத்தது பற்றிக் கூறுகின்றது. பத்தினி கற்பிற்சிறந்த பதிவிரதையைக் குறிக்கிறது எனவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல் பத்தினி வழிபாடு கூறும் மற்றுமோர் சிங்கள இலக்கியம் ராஜரட்ணகார என்பதாகும். இதிலும் கஜபாகு மன்னனின் கண்ணகி வழிபாடு, கற்பின் சிறப்புக் கூறப்படுகின்றது.

பத்தினி அதகில்ல என்பது இன்னோர் சிங்கள இலக்கியமாகும். நவகமுவ பத்தினி தேவாலய என்ற சிங்கள நூலில் கஜபாகுவின் காலத்திலேயே நவகமுவ பத்தினித் தேவாலயம் அமைக்கப்பட்டது எனக்கூறப்படுகின்றது. பின்னர் மாயாதுன்னை, ராஜசிங்க மன்னர்களால் இங்கு வேறு பத்தினி ஆலயங்கள் அமைக்கப்பட்டாலும் புராதன கஜபாகுவினால் கட்டப்பட்ட சிறிய தேவாலயத்திலேதான் பத்தினிச் சிலையுள்ளது. சிலம்புகளும் உள்ளன. வெங்கலத்திலான சிலை இவ்வாலயத்தில் உள்ளது. வேல், சூலமும் உள்ளன. அம்மனின் கையில் நாகமாணிக்கமும் மலர்க்கலசமும் உள்ளன. "மந்தாரபுரவத்த" என்ற சிங்கள நூலில் இப்பத்தினி பற்றிய விடயமும் உள்ளது.

கஜபாகு காலத்தில் நவகமுவ, கண்டி, வில்பாகே, தெவினுவர, அம்பொக்க, குண்டகசாலை, பதுளை போன்ற இடங்களில் பத்தினி கோயில்கள் கட்டப்பட்டன. பின்னர் இராஜசிங்கனின் காலத்தில் 33 பத்தினி கோயில்கள் கட்டப்பட்டனவாம்.

பத்தினிபற்றி ஆராயும் இன்னோர் சிங்கள இலக்கியம் பன்ரிகொல்முரா (Pantokolmura). இதில் 35 பிரபந்தங்களும் 4000 பாடல்களும் உள்ளன. இதில் கம்மடுவ (Gammaduva) எனும் கிராமியச் சடங்கு பாடப்படுகின்றது. இவ்வைபவம் ஆண்டுதோறும் பத்தினித் தெய்வத்தின் ஆசிவேண்டி நடாத்தப்படுவது என்று கூறப்படுகின்றது. நோய்கள் துன்பங்கள் வராமல் காத்து கிராமத்தில் சுபீட்சம் ஏற்பட வேண்டும் என்பது இப்பத்தினிச் சடங்கின் நோக்கமாகும்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள பிறிதோர் விடயம் கிழக்கிலங்கை மக்கள் வேளாண்மை, பயிர்ச்செய்கைகளைக் காத்தருள வேண்டும் என வழிபடுவதாயும் பன்ரிகொல்முரா என்னும் சிங்கள இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பது, சிலப்பதிகாரம் மூன்று கொள்கைகளை நிலைநாட்டுவதற்காக எழுதப்பட்டுள்ளது என்பதாகும்.

1. அரசியல் பிழைத்தோருக்கு அறங்கூற்றரும்
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றல்
3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுதல்

என பன்ரிகொல்முரா என்னும் சிங்கள நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும் தமிழ் சிலப்பதிகாரத்தையும் தமிழ் பத்தினிப் புராணங்களையும் ஒப்பிடும் போது ஆயிரம் வருடங்களிற்கும் மேலான இடைவெளி உள்ளமையால் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும், எனினும் கண்ணகியை ஒரு போதிசத்துவராக எதிர்காலப் புத்தராகவும் உருவகப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. இவையனைத்தும் பன்ரிகொல்முராவில் பத்தினி பற்றி கூறப்பட்டுள்ள கருத்துக்களாகும்.

தபஸ்கமன (Thapas Gamana) என்ற மேலுமொரு சிங்கள நூலும் பத்தினி பற்றி கூறுகின்றது. இது கண்ணகியின் பத்தினித் தன்மையை மேலும் மேம்படுத்தியுள்ளது. கோட்டை நாக விகாரையுள்ள இடத்தில் அமைந்த பத்தினியம்மன் கோயில் பற்றி கி.பி 1446ல் இருகல்குலதிலக தேரரால் எழுதப்பட்ட கோகிலசந்தேச (குயில் விடுதூது) வில் எழுதப்பட்டுள்ளது. கோட்டை இளவரசன் சம்புமல்குமாரயா (தமிழில் செண்பகப்பெருமாள்)வால் கட்டப்பட்டது எனப்படுகிறது. மேற்கூறப்பட்டவை எல்லாம் பண்டைய சிங்கள நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பத்தினி பற்றிய கருத்துக்களாகும்.

இவற்றையெல்லாம் விட பிற்பட்ட காலங்களில் பல்வேறு அறிஞர்கள் கண்ணகிபற்றி பல்வேறுபட்ட கருத்துக்களைக் கூறியுள்ளனர். வேறு சிலர் வெளிநாடெல்லாம் பத்தினி வரலாறு பரவவேண்டும் என்ற நோக்கில் சிலப்பதிகாரத்தை மொழிபெயர்த்துள்ளனர். இதை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்யும் முயற்சியில் டாக்டர் ரா.பி சேதுப்பிள்ளை, ம.பொ.சி (ம.பொ.சிவஞானம்) ஆர்.கே சண்முகம்செட்டியர் போன்றோர் ஈடுபட்டனர். வீ.ஆர்.எம் தீட்சிதர், அலன்தானியேலு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார். சமஸ்கிரதம், மராட்டி, மலையாளம் போன்ற மொழிகளிலும் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ரஷ்ய, செக் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மேலும் பல அறிஞர்கள், மேலைநாட்டு அறிஞர்களில் பெயர் பெற்றவர் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி ஆவார். இவர் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட கீழைத்தேய கலைகள், வழிபாட்டுப் பாரம்பரியங்கள் பற்றி ஆய்வுகள் செய்து வெளியிட்டவர். இவர் Hindusim and Buddhism, History of indian and Indonesian Art போன்றவற்றில் கண்ணகி பற்றி ஆராய்ந்துள்ளார். மட்டக்களப்பிலிருந்து கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படும் (இன்று பிரிட்டிஸ் மியூசியத்திலுள்ள) பாரிய கண்ணகி சிலை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதை மகாயான பௌத்தத்தில் வணங்கப்படும் தாரா எனப்படும் பெண்ணின் உருவம் என பலரும் கருத்து வெளியிட்டாலும் ஆனந்தகுமாரசுவாமி இது கண்ணகி சிலை எனக்கூறியுள்ளார்.

கணநாத் ஒபயசேகர சிங்கள ஆய்வாளராவார். இவரும் கீழைத்தேய கலைகள் பற்றி நிறைய ஆய்வுகள் செய்தவர். அவர் கூறும் ஒரு முக்கியமான செய்தி ஈழத்து மரபில் அதுவும் சிங்கள மக்கள் வழக்கில் கண்ணகியை பத்தினித் தெய்வமாகப் போற்றி அவளின் கதைகூறும் மரபு உள்ளது என பல சிங்கள இலக்கியங்களை ஆராய்ந்து கூறியுள்ளார். தபஸ்கமண என்ற சிங்கள இலக்கியத்திலே கோவலனின் பெற்றோர் துறவு வாழ்க்கையை மேற்கொள்ள நாடு துறந்து கப்பலில் ஏறிச்சென்ற போது கோவலனின் துயர் தீர்க்கும் பொருட்டு கண்ணகி தன் சக்தியால் கப்பலை மீண்டும் கரைக்கு எடுத்தாளாம் என கண்ணகிக்கு முன்னரே சக்தி இருந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்னோர் சிங்கள இலக்கியம் சிறிது வித்தியாசமான முறையில் கூறியுள்ளது. சிங்கள தமிழ் நம்பிக்கையிலிருந்து வேறொரு பரிணாமம் பெற்றுள்ளது எனவும் குறிப்பிடும்.

பத்தினி பற்றி ஆய்வு செய்து G.L.Hert என்பவர் சங்கப்பாடலை நிறைய ஆய்வு செய்தவர். இவர் பெண்களின் புனித சக்தியை (Sacred Power) அணங்கு என இனங்கண்டு, அணங்கு பெண்களின் முலையில் குடிகொள்வதாயும், பெண்களின் தெய்வீகத் தன்மையையும் சக்தியையும் எடுத்துக்காட்ட உதவும் எனவும் கூறியுள்ளார். கண்ணகி தெய்வப் பெண்ணாக சித்தரிக்கப்பட்டாலும் கற்பின் திண்மையால் பெறப்பட்ட அவளது புனித சக்தி முலையில் குடிகொண்டிருந்தது. இதனாலேயே முலையைத் திருகி எறிந்ததும் மதுரை எரிந்தது. என கண்ணகியின் சக்தியை பற்றிக் கூறியுள்ளார். நற்றுணையிலே காணப்படும் ஒரு குறிப்பு "ஒரு முலையறுத்த திருமாவுண்ணி" என்பது இதன் அர்த்தம் காமத்தைத் துறத்தல். வயது வந்த பெண்ணிடம் அணங்கு குடிகொள்ளும் ஒரு பெண் கற்புள்ளவளாக இருக்கும் வரை இச்சக்தி கட்டுப்பாட்டினுள் இருக்கும். இது கணவனின் பலமும் ஆகும். இந்த அடிப்படையிலே பண்டைத் தமிழரிடம் இருந்தது எனவும் கூறியுள்ளனர். இதனாலே கண்ணகி முலையைத் திருகி எறிந்தவுடன் மதுரை எரிந்தது. கற்புடை மாதரின் தெய்வீகத் தன்மையும் ஆற்றல் பற்றியதுமே இது எனக் கூறுகின்றார். இது பற்றிப் பேராசிரியர். சண்முகதாஸ் தனது Mountain worship among the ancient Tamils நூலில் குறிப்பிடுகிறார்.

பிறிதொரு வெளிநாட்டு அறிஞர் J.E.Cirlot பத்தினி பற்றிக் குறிப்பிடுகையில் தீயானது ஆன்மீக சக்தியின் வெளிப்பாடு. (Spiritual Energy) புனிதமாக்குதலில் அடையாளமான நிலைமாற்றத்தையும் மீள் உருவாக்கத்தையும் (Transformation + Regeneration) குறிக்கும் குறியீடான மேல்நிலை கட்டுப்பாட்டையும் (Superiority Control) குறிப்பதாக அமைவதால் மேற்குறிப்பிடப்பட்ட பண்புகளின் உளவியல் வெளிப்பாட்டால் மதுரை எரிந்தது என அருமையாகக் கூறியுள்ளார்.

இன்னுமோர் வெளிநாட்டு அறிஞர் அவுஸ்திரேலிய சிட்னி பல்கலைக்கழகப் பேராசிரியர் Hait எனப்படுபவர் கிழக்கு மாகாணத் தம்பிலுவில் கிராமத்தில் பல மாதங்களாகத் தங்கி அங்குள்ள கண்ணகி வழிபாடு பற்றி ஆராய்ச்சி செய்தவர். இவர் தனது Pathni Cult என்ற நூலிலே கண்ணகி மட்டுமல்ல அப்பிரதேச சமுகத்தில் கண்ணகி வழிபாடு எவ்விதம் கலந்துள்ளது என்பது பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

பேராசிரியர் யல்மனை (Yalman) உதாரணம் காட்டி யல்மன் தனது நூல்களிலே ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் பெண்களின் புனிதம் பற்றி கூறியுள்ளார். இவர்களைத் தெய்வம் எனவும் குறிப்பிடுகிறார். என்று கூறி அவர்களைச் சமூக்துடன் ஆராய்ந்துள்ளார். இவர் தம்பிலுவில் கிராமத்தில் நடைபெறும் பத்தினி வழிபாடு, குடிவழமை, திருமணம், கொம்பு விளையாட்டு, சிங்கள மக்களிடையே காணப்படும் கொம்பு விளையாட்டு எவ்விதம் சமூகத்துடன் பிணைந்துள்ளது என்று சமூகவியல் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளார். இவ்விதமாகக் கண்ணகியின் கற்பின் தன்மையை தெய்வ அம்சம் பொருந்தியவள், கற்பின்கனல் என்றெல்லாம் வெளிநாட்டு அறிஞர்கள் பலரும் மதித்து புகழும் அநேநேரம் குதர்க்கமாகக் கூறுபவர்களும் உள்ளனர்.

பிரஞ்சுப் பெண் ஆய்வாளரான Simane De Menuooir என்பவர் "பெண் என்றால் ஆணாதிக்கமும், ஆண்களால் ஆளப்படுவதுமான, ஆணாதிக்கம் மேலோங்கிய சமூதாயத்திலே சிலப்பதிகாரத்தைச் சந்திக்கிறோம்" எனத் தனது பெண்ணிலைவாதச் சிந்தனைக் கண்ணோட்டத்தில் விபரிப்பதையும் காணமுடிந்தது.

மேலும் Hume, தோமஸ் போல் போன்றோர் இந்திய ஜாதக கதைகள் வேறு இந்திய புராணங்களை அடிப்படையாக வைத்து பெண்கள் பற்றிய கருத்துக்களைக் கூறி உள்ளனர். பொதுவாகவே பெண்ணைப் படைக்கும் போது ஆணுக்கு அடிப்படையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதால், படைப்புத் தெய்வமான

பிரஜாபதி பெண்ணைப்படைத்தது எனவும், மது சூதாட்டம் விளைவிக்கும் எனவும் இந்தியப் புராணங்களை அடிப்படை இப்படி உள்ளது என்றும் கூறியுள்ளனர். இது எதைக்காட்டுகின்றது என்றால் பெண்களின் உள்ளுறைச் சக்தியானது ஆண்களின் நியமத்திற்கு பங்கம் விளைவிக்கும் என்ற பயமே காரணம் எனவும், அதனாலேயே சிலப்பதிகார ஆசிரியர் கண்ணகியை முதலில் கோவலன் மனைவியாகக் காட்டி பின்பு கண்ணகியைத் தெய்வத்தன்மையாகக் காட்டுகின்றார். அந்த சக்தியின் வெளிப்பாடே முலைதிருகி எறிதலும் மதுரையை எரித்தலுமாகும் என்கிறார்.

முதிரா முலை முகத்து எழுந்த தீயானது மதுரை மூதூர் மாநகர் சுட்டது என பெண்களின் சக்தி பற்றி கூறுவதும் நோக்கவேண்டியதாகும்.

இவைகளை விட கண்ணகி படிமங்கள் சில தொல்பொருள் காட்சிச் சாலைகளில் உள்ளன. பிரித்தானிய தொல்பொருள் காட்சிச் சாலையில் உள்ள கண்ணகி சிலை பற்றியது. மட்டக்களப்பிலே குளக்கட்டு ஒன்றின் அயலிலே எடுக்கப்பட்டது என்ற குறிப்பு உள்ளது. இதனை கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி பத்தினியாகிய கண்ணகி தேவியின் சிலை என்று கூறியுள்ளார். ஜேத்தவன அருங்காட்சியகத்திலே காணப்படும் இரண்டு படிமங்கள் வெவ்வேறு பீடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இதன் அங்கலட்சணங்கள் கண்ணகிக்கே உரியன. வலக்கையில் உடைந்த சிலம்பும் வலப்பக்க முலையானது வெட்டிய தோற்றத்தினையும் உடையது. தலையிலே மகுடம் தலைமாலை, கழுத்திலே ஆபரணங்கள் ஒரு காலிலே சிலம்பு, ஒரு காலிலே பாதசரம், சோழர்கால தேவியினரின் வஸ்திரமும் வதனத்திலே கடுமையான பார்வையும் கண்மூடிய நிலையிலும் உள்ள இப்படிமங்கள் கண்ணகியினதாகும். முற்றிலும் சிங்களப்பாணியிலாகும். இப்படி அந்நியரால் பேணப்படும் கண்ணகி படிமங்களும் உள்ளன.

நவகமுவ பத்தினியும் சற்று மாறுபாடான அமைப்பினை உடையது. வெண்கலச்சிலை கஜபாகுவால் ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு கையில் நாக மாணிக்கமும் மறுகையில் மலரக் கலசமும் கொண்டது.

இவ்வாறு உலகம் முழுவதும் கண்ணகி பற்றி அறிமுகமாயுள்ள நிலையில் சிலப்பதிகாரக் குறிப்பொன்றை நோக்கின்

**ஆடித்திங்கள் பேரிருள் பக்கத்து**<br>
**அழல் சேர் குட்டத்து அட்டமி ஞாயிறு**<br>
**வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண**<br>
**உரைசால் மதுரையொடு அரசு கேடுறும்**

அதாவது மதுரை தீப்பற்றி எரிவது பற்றிய தீர்க்கமான பழைய சொல் ஒன்றின் படி மதுரை மூதூர் தீப்பற்றி எரிந்தது. இது தெய்வத்தின் சீற்றத்தினால் விளைந்தது என நம்பினர். ஒருமுலை குறைந்த திருமா பத்தினிக்கு உயிர்பலி ஊட்டப்பட்டது. மதுரையில் அவலமும் போக்கப்பட்டு சூழ்ந்திருந்த இருளும் நீக்கப்பட்டது. எனச் சிலப்பதிகார வரிகள் உள்ளன. சிலப்பதிகார அழற்படு காதை கூறுகின்றது. இப்படி சிலப்பதிகார வரிகள் இருந்தாலும் இன்று அந்நிய இனத்தவரும் அந்நிய நாட்டவரும் ஆராய்ந்து நோக்கி ஆய்வு செய்கின்ற நிலையில் கண்ணகி புகழ் பெற்றிருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும். நம்மவர் மத்தியில் தெய்வமாகப் போற்றப்படும் கண்ணகி உலக ரீதியாக இவ்வாறு கவனத்தை ஈர்த்திருப்பது மகத்தான விடயமாகும்.

**அடிக்குறிப்புக்கள்**


01. சிலப்பதிகாரம் - வரந்தரு காதை 152-160, 160-164
02. Rajavaliya - ed.A.V Suraweera, Colombo, 1976.
    Pujavaliya - ed Benthara Shradhyatisya Tera 1950, PP726.
03. Manifestation of Goddess Pattini in Sinhala Society by Anuradha Seneviratna
04. Rajavaliya - ed.A.V Suraweera, PP129, Colombo, 1976.
05. Rajaratnakaraya - ed Karunadasa Rupasinghe, PP 79, Colombo - 1995.
06. Pantis Kolmura Kovi - ed P.V Kariyavamsa and Paravahera Saddhajiva thera xi - Colombo - 1997.
07. The Hindu Acconography, Hindusim and Buddhism Indian and Indonasien Arts, by Arandakumarasamy.
08. The Cultn of Goddness - Gananath Obeyesekara Chigago University Press, 1984.
09. The Mountain Worship among the ancent taril, 1988, A.Sammgadas.
10. A Dictionary of symbols (Reprint) Routldge Kegan Poul, London, PP 105.
11. Socoal Compass - The Patti Cult of Ceylon by L.R Hoult.
12. The Second sey every mains lobory - Behaviour De Siman.
13. Indian Women Thought ages by Thomas Poul, 1964, Bombay PP58, 59, 88.
14. சிலப்பதிகாரம் அழற்படு காதை - வரி 3472-3475.
15. இரண்டாம் உலக இந்து மகாநாட்டு சிறப்பு மலர் பேராசிரியர் - பத்மநாதன், பக்.158.
16. சிலப்பதிகாரம் அழற்படு காதை வரி 4270-4271.

***"கிழக்கிலங்கைச் சமூகத்தில் சிலப்பதிகாரம் கூறும் வாழ்வியல்"*** எனும் தலைப்பில் ***திரு.எஸ்.மோசஸ்.*** *(தயாரிப்பாளர். ஸ்ரீலங்கா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்.)* ஆய்வுரை நிகழ்த்தினார்.

கண்ணகி இலக்கிய விழா 2011 - ஆய்வுக்கட்டுரை

# கிழக்கிலங்கைச் சமூகத்தில் சிலப்பதிகாரம் கூறும் வாழ்வியல்

தமிழ் மண்ணுக்கும் தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கும் சிறப்பும் செம்மையும் சேர்த்துள்ள சிலப்பதிகாரம், தமிழ் மண்ணில் தமிழ்ப்புலவரால் தமிழ் மொழியில் தமிழ் மாந்தர்களைக் கொண்டு ஆக்கப்பட்ட தமிழ் இனத்தின் தேசியக் காப்பியம், ஒரு பத்தினிக்காப்பியம்.

முந்நாடு, முந்நகர், மூவேந்தர் பற்றி, முக்காண்டங்களில் மூவர் வரலாற்றை, மூன்றுண்மைகள் விரவ, முத்தமிழ் பரவ, முச்சுவை பொதுள, முக்கலைமிக்க முப்பது காதைகளில் 5001 வரிகளில் ஆக்கப்பட்டுள்ளது. கி.பி இரண்டாம் நூற்றாண்டில் சேர நாட்டின் இளங்கோவடிகள் இக்காப்பியத்தைப் படைத்தார்.

காலத்தின் தேவையை நிறைவு செய்யவே காப்பியங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. கற்பனை வளமும் சிந்தனைத் திறனும் சுவை உணர்வும் இலக்கிய நயமும் மிக்க ஓர் உன்னதப் படைப்பே காவியம் அல்லது காப்பியம். மனித சமூகமும் மனித வாழ்க்கையுமே இதனது அடிப்படை. இது எவராலும் மறுக்க முடியாத உண்மை. அந்த வகையில் இளங்கோவடிகளும் தம் காலத்தில் தமிழினத்திற்குத் தேவைப்பட்ட ஒருமைப்பாட்டைப் பேணவே சிலப்பதிகாரம் செய்துள்ளார் என எண்ண முடிகிறது.

சேர சோழ பாண்டியர் என பிரிந்து நின்ற தமிழ் மூவேந்தரின் ஒருமைப்பாடு, அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என முட்டி மோதிய நால் வருணத்தவர்க்கிடையிலான ஒருமைப்பாடு சைவர், வைணவர், சமணர், பௌத்தர் ஆகி அகப், புறச் சமயத்தவர் ஒருமைப்பாடு நிலவழிப்பட்ட இந்திய தேசிய ஒருமைப்பாடு.

இத்தனை ஒருமைப்பாடுகளையும் மொழிவழிப்பட்ட தமிழ் இனத்தின் ஒருமைப்பாட்டின் மூலந்தான் சாதிக்க முடியுமென இளங்கோவடிகள் கருதியுள்ளார். அதனால் தான் சாதி, சமய, வருண, குல, மண்டல வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்ட வேற்றுமைகளிடையே ஒற்றுமை காண்கின்ற தமிழர் இன ஒருமைப்பாட்டை வலியுறுத்தி சிலப்பதிகாரக் காப்பியத்தை படைத்துள்ளார்.

இன்றைய சூழலில் இருந்து கொண்டு பார்க்கும் போது இந்த ஒருமைப்பாடே சிலப்பதிகாரத்தின் கருப்பொருளாகவும் தெரிகிறது. ஆனால் கி.பி இரண்டாம் நூற்றாண்டு, இது கி.பி 21ம் நூற்றாண்டு எமது வாழ்வியலோடு விஞ்ஞானமும் தொழிநுட்பமும் இணைந்து எமது சிந்தனைகளை ஆழ, அகலமாக்கி வாழ்வியலை எழுச்சி கொள்ளச் செய்திருக்கும் காலம்.

வாழ்வியலுக்கு உயிருடன் இருந்து இயங்கும் நிலை என அர்த்தம் கூறலாம். அழகுமயமான அர்த்தம் மிகுந்த வாழ்க்கையை வாழ்ந்து பார்த்து வாழ்வியலை வெற்றி கொள்வதற்குரியதுதான் மனிதப்பிறவி. அர்த்தம் மிகுந்த விடயங்களை விட்டுச்செல்லும் மகிழ்ச்சியில் ஆன்மா அமைதியடைய வேண்டும் என்ற ஓர் இலக்கை பாதிக்கும் போதுதான் வாழ்வியலுக்கு வடிவம் கிடைக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் வடிவம் மிக்க வாழ்க்கை வாழ்கின்றான். அவனது தனிமனித வாழ்க்கை சமூகத்துடன் சங்கமிக்கும் போதுதான் வரலாறாகிறது. இன்று வரலாறாக பேசப்படும் இலக்கியங்களும் மனிதர்களும் மரபின் வழியாக பேணப்பட்டவைதான். ஒரு விடயம் மரபாகிவிடும் போது அதன் வருகை உண்மை என்பவற்றை நாம் கண்டறிவதில்லை. காண முயற்சிப்பதுமில்லை. இந்த இடத்தில் தான் இன்றைய நிகழ்வின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது.

பழமையைத் தேடுகின்றோம் புதுமையை கண்டறிகின்றோம். மரபினை எமது தமிழ் மரபினை பேண அல்லது முன்னெடுத்துச் செல்ல வழி அமைக்கின்றோம். இது பாரியதொரு தமிழ்ப்பணி. எமது ஒவ்வொரு தமிழ் மரபிலும் செய்யப்படவேண்டிய கட்டாயப்பணி.

பரந்து விரிந்த உலகத்தில் அனைத்து நாடுகளிலும் தமிழர் வாழ்கின்றார்கள். அங்கெல்லாம் தமிழ் வாழ்கின்றதா? அங்கெல்லாம் தமிழர் வாழ்வியல் பேணப்படுகின்றதா? இது போன்று பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகலாம். இனியும் சிந்திக்காவிட்டால் எமது தமிழ் மிக விரைவாகவே அடையாளமற்றுப் போய்விடும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ச்சமூகத்தின் வாழ்வியலைக் காட்டும் சிலப்பதிகாரம் எமக்கும் பல வாழ்வியல் தத்துவங்களை கூறியுள்ளது. அவற்றில் பல இன்னும் எமது சமூகத்தில் பயில்நிலையிலிருக்கிறது.

நாம் கிழக்கிலங்கை சமூகத்தவர், நாம் தமிழர் கிழக்கிலங்கை சமூக வரலாற்றை படிமுறை ரீதியாக பூரணமாக அறிந்துகொள்ள முடியவில்லை. 18ம் நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஓரளவு அறிய

முடிகிறது. அதற்குமுந்திய எமது சமூக வரலாற்றை அதாவது 13ம் நூற்றாண்டுகளுக்கு பிந்திய வரலாற்றை கல்வெட்டுக்கள், தொல்பொருள், இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. 13ம் நூற்றாண்டுக்கு முந்திய வரலாறுகளை சிற்சிறு விடயங்களாக இராமாயணம், கந்தபுராணம், மகாவம்சம், மட்டக்களப்பு மான்மியம் போன்றவற்றிலிருந்து பெற முடிகிறது. இவையெல்லாம் வரலாற்றைப் பற்றி அறிய முயலும் போது தேவைப்படுபவை. அவை இந்த மேடையில் தேவையல்ல. தேவைப்படும் போது பார்க்கலாம்.

வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய கிழக்கிலங்கைச் சமூகத்தைப்பற்றிப் பார்ப்போம். வேறு மொழி, மதம் இனத்தவர் வாழ்ந்தாலும் தமிழ் இந்து மக்களை அதிகமாகக் கொண்ட சமூகமே கிழக்கிலங்கைச் சமூகம். இனம், மொழி, மதம் என்பவற்றால் வேற்றுமைக்குள்ளும் ஒற்றுமை பெற்றுள்ள சமூகம், வழி வழியாக தமிழ் மரபைப் பேணி பின்பற்றி வரும் சமூகம், இவையெல்லாம் எமக்கு பெருமை சேர்க்கின்றது.

ஆனால் பல சிறுமைகளையும் நாம் கூடவே வைத்துள்ளோம். கோபம் கொள்ளக்கூடாது. உண்மை.

சாதி, குடி, தொழில் போன்றவற்றால் வர்க்கபேதம் காட்டும் சமூகம்; பட்டம், பதவி, அந்தஸ்து போன்றவற்றால் பிரிந்து நிற்கும் சமூகம்; பணம், பொருள், நிலம் போன்றவற்றால் மமதை கொண்ட சமூகம்; அவன், அவனுடைய ஆக்கள், இவன், இவனுடைய ஆக்கள் என்ற உட்பூசல் வக்கிரம் கொண்ட சமூகம்; சூது, வாது, வஞ்சகம், பொறாமை போன்றவற்றை முன்னிறுத்தும் சமூகம்; மனித அறங்களை மறந்து வாழ்க்கை தத்துவத்தை மறுத்து சீர் கெட்டுக்கொண்டிருக்கும் சமூகம் என இன்னும் ஏராளம். அத்தனையும் பிரிவுகள், பிளவுகள்.

குறித்த சமூகத்தின் பிரிவுகளும், பிளவுகளும் மேலும் மேலும் குறித்த சமூகத்தில் பின்னடைவை ஏற்படுத்தி மிக மோசமான அழிவுகளையே ஏற்படுத்தும். அது மீட்சியை அல்ல பாரிய வீழ்ச்சியையே கொடுக்கும். அப்போதெப்படி சமூக உயர்ச்சி கிடைக்கும். நாம் இன்றைய காலத்தில் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

மனித சமூகத்தை அறிஞர் ஏங்கெல்ஸ் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார்

1. காட்டுமிராண்டி மனித சமூகம்
2. அநாகரிக மனித சமூகம்
3. நாகரிக மனித சமூகம்

இவற்றில் நாம் நாகரிக மனித சமூகம் : ஏனெனில் நமது உடல், உயிர், மனம், வாழ்வு தொடர்பான வீழ்ச்சிக்கும் முயற்சிக்கும் பல்துறை கண்ணோட்டத்தில் ஆராய்ந்து தீர்வு காணுகின்றோம். எமது எண்ணங்களும் நம்பிக்கைகளுக்குமேற்ப வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஆறறிவைத் தாண்டி ஏழாவது அறிவு என்று வர்ணிக்கப்படுகின்ற உயிரியல் அணு அறிவுக்கும் சென்று விட்டோம். பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதரும் இப்பிரபஞ்சத்திலிருந்தே அனைத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். எமது வாழ்வியலுக்கு பல விடயங்களை இலக்கியங்களிலிருந்து நாம் பெற்றிருக்கின்றோம். சிலப்பதிகாரம் கூறும் வாழ்வியல் விடயங்களையும் நாம் கைக்கொண்டிருக்கின்றோம்.

சிலப்பதிகாரம் எப்போதோ எதற்காகவோ எவருக்காகவோ படைக்கப்பட்டிருக்கலாம். மறுக்கவில்லை. ஆனால்; அது அக்காலத்தையும் கடந்து இக்காலம் வரை கால ஓட்டத்தினூடே தமிழர் வாழ்வை மரவு நெறிப்படுத்தி வந்துள்ளது; வருகிறது. தமிழர் வாழ்வியலை உயர்ச்சி பெறச் செய்திருக்கின்றது.

குடும்பம், திருமணம், பெண், சாதி பரத்தமை, அடிமை, தெய்வங்கள், சடங்குகள், திருவிழாக்கள் போன்ற சமூகச்சூழலையும் உணவு வகைகள், குடிவகைகள், உடைகள், அழகுசாதனப் பொருட்கள், அணிகலன்கள், விளையாட்டுக்கள், கலைகள், பொழுதுபோக்கு அம்சங்கள், நீராடுதல், பழக்கவழக்கங்கள், மருத்துவம், கட்டடக்கலை, தொழில்நுட்பவியல் போன்ற வாழ்க்கை முறைகளையும்; விவசாயம், மந்தை வளர்த்தல், நெசவுத் தொழில், வணிகம் போன்ற பொருளாதார நிலைகளையும்; முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு, மோட்சம், சாபங்கள், பேய்மகளிர், அருந்ததி, சகுனம், கனவுகள், அசரீரி, மூன்று என்ற எண் மீதான நம்பிக்கை, ஊழ்வினை போன்ற பல நம்பிக்கைகளையும்; கல்வி, பழமொழிகள், விடுகதைகள், கதைகூறுதல் போன்ற அம்சங்களையும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. அவற்றில் அதிகமானவை இன்னும் கிழக்கிலங்கைச் சமூகத்தில் வாழ்வியலோடு இரண்டறக்கலந்திருப்பதை நாம் காணலாம்.

நேர மட்டுப்பாடு காரணமாக எமது ஆய்வுரையானது; இவற்றில் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்காட்டுகளுடன் கூறுகின்றது.

**ஆய்வாளர் :**
**எஸ். மோசஸ்,**
**சிரேஷ்ட தொலைக்காட்சி தயாரிப்பாளர், வருகை விரிவுரையாளர்**

# 19 ஜூன் 2011 ஞாயிறுக்கிழமை.
# இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகள்.

**"கலையரங்கும் நிறைவு விழாவும்" மாதவி அரங்கில்** மாலை **05.00 -** பி.ப **08.40 மணிவரை நடைபெற்றது**. இந்நிகழ்வுக்கு கலைமாமணி. **மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள்** தலைமை வகித்தார். **அதிதிகளாக** : **திருமதி. கலாமதி பத்மராஜா.** ( பிரதேச செயலாளர், மண்முனை வடக்கு) அவர்களும், **திரு. காசுபதி நடராஜா.** (முன்னாள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ) அவர்களும் கலந்து கொண்டனர். இணைப்பாளராக புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்கழகத் தலைவர் **திரு.த.இன்பராஜா** அவர்கள் பணியாற்ற **திரு. தேவ அலோசியஸ்** நிகழ்வைத் தொகுத்தார்.

**கண்ணகி காவியம் பாடும் கன்னன்குடாவைச் சேர்ந்த திரு.மா.தங்கராசா திரு.க.சதாசிவம்**



**கண்ணகி வசந்தன்.**
மட்/கன்னன்குடா மகாவித்தியாலய மாணவர்கள்.

சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் **திருமதி. கலாமதி பத்மராஜா** உரையாற்றினார்.



**திருமதி.சுபித்ரா கிருபாகரன் அவர்களின்** நெறியாள்கையில் பரதகலாலயா மாணவர்களின் நாட்டிய நாடகம் **"கானல்வரி"**

சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட முன்னாள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. **காசுபதி நடராஜா** உரையாற்றினார்.

கொழும்பில் இருந்து வருகைதந்த பேராளர் பிரபல எழுத்தாளர் **திரு.அன்தனிஜீவா** அவர்கள் உரையாற்றினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வருகைதந்த பேராளர் **கலாநிதி வே.யுகபாலசிங்கம்** அவர்கள் உரையாற்றினார்.

வவுனியாவிலிருந்து வருகைதந்த பேராளர் ஓய்வுநிலைப் பிரதேச செயலாளர் **க.ஐயம்பிள்ளை** அவர்கள் உரையாற்றினார்.



**மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய அதிபர் திரு. இராஜரெட்ணம் அவர்களின் நெறியாள்கையில் புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய மாணவிகள் பங்கேற்ற "சிலம்புச் செல்வி" கூத்து சிறப்பு நிகழ்வாக நடைபெற்றது.**

கொழும்பிலிருந்து வருகைதந்த பேராளர் எழுத்தாளர் **த.சிவசுப்பிரமணியம் (தம்புசிவா)** அவர்கள் உரையாற்றினார்.

முன்னாள் கலாசாரப் பணிப்பாளர் **வ.கி.மா. திரு.செ.எதிர்மன்னசிங்கம்** அவர்களின் நிறைவுரையுடன் கண்ணகி இலக்கிய விழா 2011 நிறைவடைந்தது.

● 18.06.2011 அன்று ஆற்றிய உரை

# கடல் கொண்ட காவிரிப் பூம்பட்டினம்

கலாநிதி அனுசூயா சேனாதிராஜா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கலை பண்பாட்டுப் பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**முன்னுரை:**

கடல் கொண்ட நிலப் பரப்பொன்று குறித்த இலக்கியக் குறிப்புகளும் அவற்றுக்கு உரையாசிரியர்கள் தந்த விளக்கங்களும் தமிழர்கள் பன்னூறு ஆண்டுகளாக அறிந்தவையே. ஆனால், அவற்றில் "குமரிக் கண்டம்" என்ற சொற்றொடர். அதிலும் குறிப்பாகக் 'கண்டம்' (Continent) என்று நாம் கொள்ளும் பொருளில் எங்கும் இடம்பெறுவதில்லை. இலக்கியங்கள் கூறும் அந்த நிலப்பரப்பிற்கு அப்பால் வேறு உறுதியான ஆதாரங்கள் இன்னமும் முழுமையாகத் திரட்டப்படவில்லை. ஆனால், பல நூற்றாண்டுகளாக வழங்கிவந்த இலக்கிய மரபுடன் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில ஐரோப்பிய அறிஞர்களின் கூற்றுக்கள் இணைந்து குமரிக் கண்டம் (லெமூரியாக் கண்டம்) என்ற தொன்மம் (Myth) உருவாகத் துணை புரிந்தன. குமரிக் கண்டம் (லெமூரியாக் கண்டம்) லெமூரிய நாகரீகத்தின் தொட்டில். அதனைக் கடல் கொண்டது கடற் கோள்களின்போது தப்பிச் சென்றவர்கள் சிந்துவெளி, சுமேரிய, பாபிலோனிய, எகிப்திய நாகரீகங்களை உருவாக்கினர்.

மறைந்த கண்டம் பிளவுபட்டு நகர்ந்தபோது ஆதி மனிதர்கள், தெப்பத்தில் மிதப்பதுபோல் சென்றனர். இன்று மூழ்கிப் போன ஆனால், அன்றிருந்த நிலப் பாலங்கள் மீது சென்று ஆஸ்திரேலியாவில் குடியேறினர். குமரிக் கண்டம், லெமூரியாக் கண்டம், கொண்டுவானாக் கண்டம் ஆகிய அனைத்தும் கடலில் மறைந்த ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைத் தான் குறிப்பிடுகின்றன. இங்குதான் மாந்த இனமே தோன்றிற்று. 'தமிழினம்தான் முதன்முதலில் தோன்றிய மாந்த இனம். தமிழ் மொழிதான் முதலில் தோன்றிய மொழி. பிறமொழிகள் யாவும் இதிலிருந்து பிறந்தவையே. இவை போன்ற அடுக்கடுக்கான கருதுகோள்கள் உருவாக்கப்பட்டன. இவற்றிற்கு அறிவியல் அடிப்படைகள் இருப்பதாகவும் உரிமை கொண்டாடப்பட்டது.

தமிழர்கள் பண்டைக் காலத்தில் வாழ்ந்த நிலப்பரப்பையும் மிகப் பெரிதாக்கி எழுதிய மரபு சென்ற நூற்றாண்டில் இருந்தது. அப்பெரும் நிரப்பரப்பைக் கடல் கொண்டால் அங்கு வாழ்ந்தவர்களின் குடியிருப்புக்கள் இயற்றிய நூல்கள் அனைத்தும் அழிந்துபட்டன. ஒரு பெரு நிலப்பரப்பு மூழ்கியதும் அன்றைய நாகரீகம் அழிந்து போனதும் இலக்கியங்கள் பல மறைந்து போனதும் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பேரிழப்பு என்றனர். இவற்றிற்கான ஆதாரங்கள் என்ன?

அவைதான் சங்க இலக்கியங்களில் பழந்தமிழகத்தின் எல்லைகள் மற்றும் அழிந்து பட்ட நிலப்பரப்புகள் பற்றிய குறிப்புகள் என்பன ஆதாரங்களாகும். வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் தமிழகம் இலங்கையை ஒட்டிய நிலப்பரப்பு எவ்வாறு இருந்திருக்கலாம் என்பதை அறியமுடியும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் தெற்கே குமரிக் கண்ட நில நீட்சி இருந்ததாகவும் பின் ஏற்பட்ட கடற்கோளில் மூழ்கி விட்டது எனக் கூறும் தமிழர் மரபு காணப்படுகிறது. இம்மரபின் தோற்றத்தை:

1. சங்க இலக்கியக் குறிப்புகள்
2. அவற்றிற்கு உரை எழுதியவர்களின் கூறுகள்
3. வாய் மொழிக் கர்ண பரம்பரைக் கதைகள்

என வகைப்படுத்தலாம். குமரிக் கண்டம் என்ற கருத்தாக்கத்தை உருவாக்கியவர்களின் கருத்துப்படி இலக்கியம் கூறும் தமிழர் தாயகம், அலைகளால் விழுங்கப்பட்டு, இந்து மாக்கடலில் மறைந்தது. இவ்வாறு கடலில் மூழ்கிய நிலப்பரப்பே லெமூரியா நாகரீகத்தின் தொட்டில். இங்குதான் ஆதி மனிதத் தோற்றம் நிகழ்ந்தது. இத்தென் கண்டத்தில் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ச் சங்கங்கள் தோன்றின. இங்கிருந்த தென் மதுரை நகர் கடலில் மூழ்சி அழிந்தது.

வேறு சிலர் குமரிக் கண்டமே தமிழர் தாயகம். அது மூழ்கியபோது தப்பிச் சென்றவர்களே சிந்துவெளி நாகரீகம் மட்டுமன்றி, சுமேரிய, பாபிலேனிய, எகிப்திய நாகரீகங்களையும் உருவாக்கினர் என நம்பினர். மற்றும் சிலர், மறைந்த கண்டம் பிளவுபட்டு, நகர்ந்தபோது ஆதி மனிதர்கள் மிதப்புகள் மீது பயணிப்பதுபோலச் சென்றோ அல்லது இன்று மூழ்கிப்போன ஆனால் அன்றிருந்த நிலப் பாலங்கள் மீது சென்றோ, ஆஸ்திரேலியாவில் குடியேறினர் என்று கூறுகின்றனர். 20ஆம் நூற்றாண்டில் தமிழறிஞர்கள் சிலர் இத்தகைய மரபுகளையே ஆதாரங்களாக்கிக் குமரிக் கண்டம் கருதுகோளை விளக்க முற்பட்டனர். இவற்றிற்கான அறிவியல் ஆதாரங்களைத் தேடுவது அவசியம்.

மறைந்த கண்டம் அல்லது கடல் கொண்ட நிலப்பரப்புப் பற்றிக் கூறியவர்கள் குமரிக் கண்டம், லெமூரியா, கொண்டுவானாக் கண்டம் மூன்றுமே ஒரே நிலப்பரப்பைக் குறிப்பதாக எண்ணினர். ஆனால், இவை காலத்தாலும் உருவாக்கத்தாலும் மாறுபட்டவை. கண்டம் போன்ற பெரிய நிலப்பரப்பு கடலில் மூழ்கினால் அது கடலடியில் இருக்க வேண்டும். இன்றைய கடலியல் ஆய்வு, கடலடி அகழ்வாராய்ச்சிகள், கடல் அடித்தளம் பற்றிய நம் அறிவை மிகப் பெருக்கியுள்ளன. கடலடியில் உள்ள தொல் எச்சங்களை ஆராய முடிகின்றது.

கொண்டுவானாக் கண்டம் பிளந்து நகர்ந்து தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, அரேபியா, தென் இந்தியா, ஆஸ்திரேலியா, அன்டார்ட்டிக்கா கண்டங்கள் உருவாகி இன்றைய நிலையை அடைந்ததற்கு ஆதாரங்கள் உள. ஏறத்தாள 35 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்நிகழ்வுகள் தோன்றின. அப்போது மனிதர்கள் தோன்றியிருக்கவில்லை. ஆதி மனிதர்கள் தோற்றம் மிக அண்மையில் நிகழ்ந்தது. அகழ்ந்தெடுக்கப்பட்ட பல ஆதி மனித எலும்புகள், தொல்லுயிர் எச்சங்கள் இவற்றின் மீதான மரபணு ஆய்வுகள் மானுடத்தின் தொட்டில் ஆபிரிக்காதான் என்பதைத் திட்டவட்டமாக நிரூபிக்கின்றன.

ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆதி மனிதர் தோன்றிய பின்னர் கண்டங்கள் சில மீற்றர்கள் மட்டுமே நகர்ந்துள்ளன. எனவே, தமிழ் இலக்கியங்கள் கூறும் நிலப் பரப்பிற்கும் கொண்டுவானாக் கண்டத்திற்கும் எத்தொடர்பும் இல்லை. ஆதி மனிதன் விவசாயம் செய்ய ஆரம்பித்து குடியிருப்புக்களை ஆரம்பித்தது. இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்தான் என்று உலகத் தொல்பொருள் ஆய்வுகள் கணிக்கின்றன.

கர்ண பரம்பரையாக வந்துள்ள பிரளயக் கதைகள் குடியிருப்புகள் உருவாகிய காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட பிரளயங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. பிரளயங்களும் கடற்கோள்களும் புவி வரலாற்றில் அவ்வப்போது ஏற்பட்டன. தமிழ் இலக்கியக் குறிப்புகள் வரலாற்றுக் காலத்திலும் வரலாற்றுக்குச் சற்றே முற்பட்ட காலத்திலும் உண்டான கடற்கோள்கள் பற்றியே குறிப்பிடுகின்றன. உலகளாவிய ரீதியில் கடற்கோள்கள், மற்றும் பிரளயங்கள் பற்றி உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலும் கலாச்சாரங்களிலும் புராணங்கள், மரபுகள் உள்ளன. கடற்கோளும் கடற் கொந்தளிப்பும் பழந்தமிழகத்தை மட்டும் சாடிய இயற்கைச் சீற்றங்கள் அல்ல.

ஒரு பெரிய கடற்கோள் அல்லது பிரளயம் பற்றிய ஐதீகம் உலகளாவிய ரீதியில் எல்லாப் பழம் சமூகங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து செல்லும் முன் கடற்கோள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது ஒரு சாராரின் வாதம். மனித குலம் ஆரம்பித்தது முதல் உலகின் பல்வேறு இடங்களிலும் பல்வேறு காலகட்டங்களிலும் கடற்கோள்கள் பிரளயங்கள் பற்றிய கதைகள் தெரிவிக்கின்றன. பிரளயத்தினால் தப்பிப் பிளைத்த முன்னோர்களின் அனுபவங்கள், நினைவுகளை மையமாக வைத்துப் புனையப்பட்ட புராணங்கள் மற்றும் கதைகளில் ஒரு பொதுத் தன்மையைக் காணலாம். வெள்ளத்திற்குத் தப்பியவர்களின் வளித் தோன்றல்கள் பல தலைமுறைகளைக் கேட்ட கதைகளே பிரளயக் கதைகள் பிரளயத்திற்கான காரணங்களையும் இங்கு காணலாம்.

தமிழ்நாட்டில் சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளின் துவக்கத்தில் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடும் குமரி எனும் நில நீட்சியும் மறைந்த கண்டமான லெமூரியாவும் ஒன்றென வாதிக்கப்பட்டது. பிரம்மஞான சபையினரால் லெமூரியாக் கண்ட உணர்வுகள் வலுப்பெற்றுப் பதிவு செய்யப்பட்டன. இதன்மூலம் வெள்ளையர் இனம் உலகத்தின் அனைத்து இனங்களை விடவும் உயர்ந்தது என்பதை இது சுட்டி நின்றது. ie. லெமூரியாக்கள் பரிணாம வளர்ச்சியில் தாழ்ந்தவர்கள் என்பதைக் காட்டியது.

ஆனால், தமிழ் ஆர்வலர்கள் குமரிக் கண்டமும் அழிந்துபட்ட லெமூரியாவும் ஒன்றென குமரிக் கண்ட கோட்பாட்டிற்கு வலிமை சேர்த்தனர். இந்தியாவிற்கும் மடகாஸ் காதிற்குமிடையே இந்து சமுத்திரத்தில் இருந்திருக்கக் கூடும் எனக் கருதப்பட்ட நிலப் பாலத்திற்கு “லெமூரியா” எனப் பெயரிடப்பட்டது இன்னோர் காரணம். பின்பு தமிழர்களின் தொன்மையை வலியுறுத்த இக்கருத்தாக்கம் தமிழ் ஆர்வலர்களால் எடுத்தாளப்பட்டது.

லெமூரியாக் கண்டக் கருத்திற்கு யாரும் மறுப்புக் கூறவில்லை. இக் கருதுகோளை ஆதரித்து நாற்பதுகளில் பலர் எழுதினர். பழந்தமிழரின் தொன்மையைப் போற்றும் இப்பாரம்பரியத்திற்கு நம்பகத் தன்மையான ஆதாரங்கள் வேண்டியிருந்தன. இதைப் பற்றிய வரலாற்று ரீதியான விவாதமோ பரிசீலனையோ இல்லாமற் போய்விட்டது.

தமிழகத்தின் தென்பகுதியிலிருந்த நிலப்பரப்பைக் கடல் கொண்டதாகச் சில சங்க இலக்கியப் பாடல்கள் கூறுகின்றன. மரபுவளிச் செய்தியாக மட்டுமன்றி தமிழ் வளர்த்த தலைச்சங்கம், இடைச்சங்கங்கள் இரண்டும் கடற்கோள்களால் அழிந்ததாகக் கருதப்படுவதால் இலக்கியத்துடன் இணைந்துள்ளன. ஆனால், இவ் ஆய்வாளர் இலக்கியம் காட்டும் குமரி எனும் நில நீட்சிக்கும் நாம் கண்டம் எனக் குறிப்பிடும் பிரதேசத்திற்கும் தொடர்பை அறிய வேண்டியுள்ளது என்கிறார்.

**சங்க இலக்கியக் குறிப்புகள்:**

சங்க இலக்கியப் பாடல்கள் தமிழகத்தின் தென்பகுதியிலிருந்த நிலப்பரப்பைக் கடல் கொண்டதாகக் கூறுகின்றன. மிகப் பழைய இலக்கியங்களிலும் நூல்களிலும் உரைகளிலும் குமரி முனைக்குத் தெற்கே நெடுந் தொலை நிலமாயிருந்தது என்றும் பின்பு பல்லூளிக் காலத்தில் படிப்படியாகக் கடலுள் மூழ்கி விட்டதென்றும் ஆசிரியர்கள் உணர்கின்றனர். இங்கு காணப்பட்ட நாடுகள், அரசுகள், மலைகள், ஆறுகள் ஆகியவற்றைப் பற்றிய விபரங்கள் சிலப்பதிகாரம், புறநானூறு ஆகிய இலக்கிய நூல்களில் காணப்படுகின்றன. அங்கிருந்த மலைகளுள் **குமரி மலை** ஒன்று என்றும் ஆறுகளுள் **குமரி ப.்றுளி** என்பன முதன்மையானவை என்றும் தெரிவிக்கின்றன.

இப்பிரதேசங்கள் தமிழரின் தாயகம் என்று கூறக்கூடிய அளவு தமிழ் இனமும் தமிழ் நாகரீகமம் அங்கு காணப்பட்டது. இந்நாடு பின்பு தமிழகத்தின் ஒரு பகுதியாயிற்று. தமிழைப் பாரம்பரியமாக வளர்த்த சங்கங்கள் மூன்றினுள் தலைச்சங்கம் நடைபெற்ற தென்மதுரையும் இடைச்சங்கம் நடைபெற்ற கவாட புரமும், இக்குமரிப் பகுதியிலேயே இருந்தன.

குமரித் தெய்வத்தின் வழிபாடு காரணமாக இந்நிலப்பரப்பிற்கு “குமரி” என்ற பெயர் ஏற்பட்டது. பண்டு – பழமை – பாண்டியன் குமரிப் பரப்பின் வடகோடியில் ஓடிய குமரி ஆற்றுக்கும் தென்கோடியில் இருந்த பஃறுளி ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஏழ் தெங்க நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணகரை நாடு, ஏழ்குறும்பனை போன்ற நாற்பத்தொன்பது நாடுகளுடன் குமரி, கொல்லம் போன்ற பன்மலை நாடுகளும் இருந்தன என அடியாருக்கு நல்லார் குறிப்பிடுகின்றார். இப்பகுதியைப் பாண்டியன் நெடியோன் ஆண்டதாகக் கூறப்படுகின்றது. இம் மன்னனைப் பற்றி,

முந்நீர் விழவின் நெடியோன்
நன்நீர்ப் பஃறுளி மணலினும் பலவே

(புறநானூறு, 9:10 – 11)

என்ற சங்கப் பாடல் கூறுகிறது. அவன் பல்லாண்டு வாழ வேண்டும் என்ற கருத்துடையது இப்பாடல்.

## முதற் கடற்கோள்:

தமிழ் வளர்த்த தலைச் சங்கம் இயங்கிய பாண்டியனின் தலைநகரான தென்மதுரை உள்ளிட்ட குமரியின் தென்பரப்பை ஒரு கடற்கோள் அழித்தது. இதையே சங்க இலக்கியங்கள் குறிக்கும் முதல் சுனாமி எனலாம். பாண்டிய மன்னன் இமயத்தையும் கங்கையையும் கைப்பற்றிக் கடற்கோளால் இழந்த குமரி மலைக்கும் பஃறுளியாற்றிற்கும் ஈடுசெய்து கொண்டான் என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறுகின்றார். (காடு காண் காதை 17 – 22)

## இரண்டாம் கடற்கோள்:

பின்பு குமரியின் தென் பகுதியைக் கடல் கொள்ளச் சற்று வடக்கேயிருந்த கபாட புரத்தைத் தன் தலைநகராக்கினான். பாண்டிய மன்னன் இங்கு இடைச் சங்கம் நிறுவப்பட்டு இயங்கி வந்தது. கபாட புரத்தின் வேறு பெயர்கள் கபாடம், கதவம் புதவம் அலைவாய் என்பன ‘அலைவாய்’ கடற்கரையில் அமைந்த ஊர் எனக் குறிப்பிடப்படும். இந்தப் பகுதியைக் கடற்கோள் அழித்தது. இதையே இரண்டாம் கடற்கோள் எனலாம். இதற்குத் தப்பிய பாண்டிய மன்னன் தான் கைப்பற்றிய சேர, சோழ நாட்டுப் பகுதிகளில் தன் குடிகளைக் குடியமர்த்தினான்.

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மலிவின்றி மேற் சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர்கொண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்

என்ற முல்லைக் கலிப்பாடல் (104:1 – 4) குறிப்பதாக அடியார்க்கு நல்லார் தம் உரையில் சுட்டிக் காட்டுகிறார். ‘மேற்கண்ட பாடலில் கூறப்படும் இழப்பிற்கு ஈடாக சோனாட்டு முத்தூர் கூற்றமும் சேர நாட்டுக் குண்டூர் கூற்றமும் வென்று இணைத்துக் கொள்ளப்பட்டவை என்கிறார். உரையாசிரியர் நச்சினார்க்கினியார்’.

மேலும் இறையனார் அகப்பொருளுரையில் அமைந்த முக்கழக வரலாறு இந்த இரண்டு கடற்கோள்கள் பற்றிக் கூறுகின்றது. கபாட புரத்தையும் கடல் கொள்ள வடக்கில் குமரியாற்றின் கரையிலிருந்த மணவூர் பாண்டியனின் தலைநகராகியது.

## மூன்றாவது கடற்கோள்:

தொல்காப்பியர் காலத்தில் (ஏறத்தாழ கி.மு. 6 அல்லது 7ஆம் நூற்றாண்டில்) தெற்கில் குமரியாறு ஓடிக் கொண்டிருந்தது. ‘தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறுங் கடல் கொண்டொழிதலால்’ என்று அடியார்க்கு நல்லார் கூறுவது குமரி ஆற்றைக் கடல் கொண்ட நிகழ்ச்சியைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டால் இது இலக்கியம் குறிக்கும் மூன்றாவது கடற்கோள் எனலாம்.

இங்கு, மாடல் மறையோன் குமரியாற்றில் குளித்ததாகக் குறிப்பிடும் சிலப்பதிகாரக் கதையின் முடிவில் ‘தெடியோன் பௌவமென இளங்கோவடிகள் குமரியைக் கடலாகக் குறிப்பிடுவதை நோக்க வேண்டும். குமரியாற்றின் கரையிலிருந்த மணவூரைக் கடல் கொள்ள பாண்டியன் வடக்கே சென்று வைகைக் கரையிலுள்ள மதுரையைத் தலைநகராக்கி அங்கு கடைச் சங்கத்தை நிறுவினான்.

இவ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட கடற்கோள்கள் வரலாற்றுக் காலத்திலும் வரலாற்றிற்குச் சற்றே முற்பட்ட காலத்திலும் நிகழ்ந்தவை.

தமிழ் விடு தூதில் குமரி ஆறு தமிழ் கூறும் நல்லுலகத்தின் தென் எல்லையாயிருந்தது எனக் குறிக்கப்படுகின்றது. குமரிக் கண்டம் பற்றிய குறிப்பேதும் இங்கில்லை.

## சிலப்பதிகாரம்:

சிலப்பதிகாரத்தில் மாடலன் நீராடியதாகக் கூறும் வரிகளில்;

‘மாமறை முதல்வன் மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து....’

என அடைக்கல காதையில் (வரிகள் 13 – 15) வரும் "குமரியம் பெருந்துறை" எனுங் குறிப்பு, மயிலை சீனி வேங்கடசாமி கருத்துப்படி குமரியாறு ஏறத்தாழ கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கடலால் கொள்ளப்பட்டதாகக் கூறுவதால் இது கரையிலமைந்த பகுதியைக் குறிக்கிறது. குமரியம் பெருந்துறை என்பதற்குக் கன்னியா குமரியின் (குமரிக் கடலின்) துறைமுகம் என்பது பொருள். அக்காலத்து யவன வணிகரும் குமரிக் கடலின் கரையில் அமைந்த துறைமுகத்தைக் குறிப்பிடுகின்றனர். கோவலன் காலத்திற்கு முன்னமே குமரியாறு கரைந்து போய் குமரிக் கடலின் கரையில் அமைந்த துறைமுகம் ஏற்பட்டு விட்டது என்கிறார் கா. அப்பாத்துரை. (குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு ப. 2, 3).

**ப.'றுளி ஆறு:**

சங்க இலக்கியங்களான புற நானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் இவ் ஆறு பற்றிய குறிப்புகள் உண்டு. இப்ப.'றுளி ஆறு எதுவாக இருந்திருக்க முடியும். கடல் கொண்ட நிலப் பரப்பில் மூழ்கிப் போனதாகக் கருதப்படும். இந்த ஆற்றின் தொடர்ச்சி இன்றும் தலை நிலத்தில் இருக்க வாய்ப்புக்கள் உண்டு எனக் கூறப்படுகின்றது. குமரி மாவட்டத்தில் இப்போதும் மணக்குடியருகே கடலில் கலக்கும் ஆற்றின் பெயர் பழையாறு. இதற்குப் பறளி ஆறு எனவும் சிலர் குறிப்பிடுவதால் இது கடைச் சங்க காலத்திற்கு முன் கடல்கோளால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் ப.'றுளி ஆற்றின் தொடக்கப் பகுதியாக இருக்கலாம் என செ. சதாசிவத்தின் கருத்து (செ. சதாசிவம், சேரநாடும் செந்தமிழும்).

**மகாவம்சம்:**

இலங்கை வரலாற்றைக் கூறும் ஒரு ஆதார நூலாக இது கொள்ளப்படுகிறது. (கி.பி. 463 – 479) பௌத்த தேரர்கள் எந்தெந்த நாடுகளுக்குச் சென்று பௌத்தத்தைப் பரப்பினார்கள் என்று கூறுகின்றது. ஆனால், குமரிக் கண்டம் எனக் கூறப்படும் நிலப் பரப்புக்கு யாரும் சென்றதற்கான குறிப்புகள் ஏதுமில்லை.

'தொல்காப்பியருக்கு முற்பட்ட புலவர்கள் எழுதியதை மேற்கோள் காட்டி எழுதும் மரபு எழுநூறு அல்லது எண்ணூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த உரையாசிரியர்களாலும் பின்பற்றப்பட்டது. வரலாற்றாசிரியர்களைப் பொறுத்தவரையில் லெமூரியாவைப் பற்றிய கருத்தாக்கத்தில் உடன்பாடு இல்லை. பல்வேறு வகையான கருதுகோள்கள் வெவ்வேறு வல்லுநர்களால் பல காரணங்களுக்காக முன்வைக்கப்பட்டன. காலத்திற்குக் காலம் முன்வைக்கப்படும் கருதுகோள்கள் பின்பு வெவ்வேறு ஆய்வுக் கருத்துக்களின் அடிப்படையில் நம்பகத் தன்மையை இழந்து விடுகின்றன. ஆரிய இனம் எப்படிப் பரிணமித்து உயர்ந்தது என விளக்குவதற்காக அமைக்கப்பட்ட பிரம்ம ஞான சனபனயர் சார்ந்தவர்களின் சித்தாந்தத்தின் பின்னணியாகவே லெமூரியா மற்றும் அட்லாண்டிஸ் பற்றிய கருத்தாக்கங்கள் இருந்தன.

**குமரி மலை:**

இறையனார் கூற்றுப்படி கதிரவன் வெப்பத்தால் நீர் குறைய பெரிய மலையின் சிகரம் வெளியில் தோன்றியது. பின்னர் நீர் வற்ற பன்மலையடுக்குகளும் வெளிப்பட்டன. இதுவே பின்பு குமரி மலை, குமரி நாடு, குமரிக் கண்டம் என வழங்கலானார்கள்.

1975இல் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினர் எழுதிய 'தமிழ் நாட்டு வரலாறு' என்ற நூலில் வெளியிடப்பட்டது. இதில் நிலப்பரப்பின் தோற்றம் பற்றிக் கூறும்போது லெமூரியாக் கண்டம், அட்லாண்டிஸ் கண்டம், 'மூ' எனும் பசுபிக் கண்டம் அறிவியலாளரால் ஒப்புக் கொள்ளப்படவில்லை. எனினும் இலங்கை தென்னகத்துடன் இணைந்திருந்ததென்பதும் குமரி முனைக்குத் தெற்கே நிலப்பரப்பு இருந்தது என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகளே ஆகும். இந்நிலப்பரப்பே இலக்கியங்கள் குறிப்பிடப்படும் குமரிக் கண்டமாக இருக்கலாம். பல்வேறு வகையான முரண்பாடுகள் இக்கருத்தாக்கத்தில் காணப்படுகின்றன.

**பிற கலாச்சாரங்களில் கடற்கோள் பற்றிய மரபுகள்:**

உலகம் முழுவதும் பல்வேறு கலாச்சாரங்களிலும் நாடுகளிலும் கடற்கோள் பிரளயங்கள் பற்றிச் சொல்லப்படுகின்றன.

**ஆசியா:** இந்தியா, இலங்கை, பர்மா, தீபெத், சீனா, பிலிப்பைன்ஸ்.

**ஐரோப்பா:** கிரேக்க, ரோமானிய, வெலஷ், கெல்டிக், ஸ்காண்டினேவியன் புராணங்களிலும்

**அண்மைக் கிழக்கு நாடுகள்:** எகிப்து, பெர்சியன், அசிரியா, பாபிலோனியா, சேல்டிய, எபிரேய, யூதப் புராணங்களிலும் மத்திய தரைப் புராணங்களிலும்

**ஆஸ்திரேலியப் பழங்குடிகள்:** கதைகளிலும் (அமோரி ஜின்ஸ்)

**ஆபிரிக்காவில்:** கென்யா, தன்சானியா, மொசாம்பிக்

**தென் ஆபிரிக்காவில்:** கெமருன், செனகல்

போன்ற நாடுகளிலும் பிரளயங்கள் பற்றிய மரபுகள் இருந்தன.

## சுனாமி (Tsunami) என்றால் என்ன?

நில நடுக்கத்துடன் தொடர்புள்ள பேரழிவை உண்டாக்கும் கடலலைக்குப் பெயர் சுனாமி இந்த ஜப்பானியச் சொல் துறைமுகங்களைத் தாக்கும் அலைகளைக் குறிக்கின்றது. இவைகள் tidal (ஓத) அலைகளும் அல்ல. புயலடிக்கும்போது எழும் அலைகளும் அல்ல. கடலடியில் நில முறிவுகள் உரசுவதாலோ கடலடியில் எரிமலை குமுறுவதாலோ ஏற்படும் நில நடுக்கங்களின்போது

உருவாகும் சக்தி கடல் நீரில் சுனாமி அலைகளாகப் பரிணமிக்கின்றது. இவை நடுக்கடலில் பெரும் அலைகளை உருவாக்காது. ஆனால், இவை கரையை நோக்கி வரும்போது மணிக்கு 500 – 600km வேகத்துடன் அசுரப் பரிமாணம் கொண்டு விடுகின்றன. நடுக்கடலில் 1 மீற்றர் அளவேயிருந்த அலைகள் 10 மீற்றர் முதல் 30 மீற்றர் வரை உயர்ந்து கரைகளைத் தாக்கும் நீராலான பெரும் மதில்போல் முன்னேறும் சுனாமி அலைகள். கரையோரப் பகுதிகளில் பேரழிவை உண்டாக்கும். அப்போது துறைமுகங்களில் உள்ள கப்பல்கள், படகுகள் தூக்கியெறியப்படுவதாலேயே இவற்றை ஜப்பானியர் துறைமுக அலைகள் என அழைக்கின்றனர்.

**1883இல்** ஜப்பானின் கடலடியில் எரிமலை வெடித்துக் குமுறி அதனால் ஏற்பட்ட சுனாமியினால் 30,000 பேர் மாண்டனர்.

**1896இல்** சன்றிகு எனும் ஜப்பானியக் கடற் பகுதியைத் தாக்கிய சுனாமி ஏழு மாடிக் கட்டிட உயரத்திற்கு எழும்பியது. இதனால் 26,000 பேர் மாண்டனர்.

**1998இல்** பாப்புவா நியூ கினியில் 7.1 என்ற அளவில் அதி வீரியம் கொண்ட நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் உருவாகிய 12 மீற்றர் உயரம் கொண்ட சுனாமி அலை கரையைத் தாக்கி அரோப் (Arop) வராப்பு (Warapu) என்ற இரு கடற்கரைக் கிராமங்களை அழித்ததில் 3000 பேர் மாண்டனர்.

சுனாமி அலைகள் கண்டத் தட்டுகள் முட்டுவதினாலுள்ள நில நடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்புகள் ஏற்படும் பகுதிகளில் உருவாகின்றன.

## கடலால் அழிக்கப்பட்ட சில பகுதிகள் அகழாய்வுத் தகவல்கள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு ஏற்பட்ட கடல் மட்ட மாற்றங்கள் கரையை ஒட்டியிருந்த குடியிருப்புக்களை அழித்துள. கடலோர நாகரீகங்கள் பல அழிவதற்கு இதுவம் ஒரு காரணம். வரலாற்றுக் காலத்தே இயங்கிய பல துறைமுகங்களும் இவ்வாறே மறைந்து விட்டன. கடலோர அகழ்வாராய்ச்சிகள், இவ்வாறு அழிவுற்ற குடியிருப்புக்கள் பற்றிய விபரங்களைத் தருகின்றன.

இதுபோலவே இந்தியக் கண்டத்தின் கடற்கரையோர ஆதிக் குடியிருப்புகள் அழிந்து பட்டதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. தமிழ் நாட்டில் பூம்புகார் (கி.மு. 3 – கி.பி. 3) எனும் காவிரிப்பூம் பட்டினம் கடல்மட்ட உயர்வால் அழிந்துவிட்டது. இத்துறை முகங்கள் பற்றிய இலக்கியக் குறிப்புகள் பல உள்ளன. (சோழ மன்னன் இளங்கிள்ளி காலத்தே நிகழ்ந்த பூம்புகாரின் அழிவு பற்றி மணிமேகலை கூறுகின்றது.

அண்மைக் காலத்தில் 1965இல் தனுஸ்கோடி மூழ்கியதும் இன்றைய மாமல்ல புரத்து கரை அரிப்பும் கடல் மட்ட உயர்வின் பாதிப்புக்களே.

கடல் அரிப்பால் இந்நகரங்கள், அழிந்துபோனதற்கான ஆதாரங்கள் பல்வேறு வகையான அய்வுகளின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது.

காவிரித்தாய் குடாவில் பிறந்து, மைசூர் பகுதியில் வளர்ந்து, ஒகனேகலில் குதித்துக் கொண்டு, தமிழ்நாட்டில் கடலை வந்து சேர்கின்றாள்.

இவ்வாறு அமைந்த இயற்கை நீரோட்டத்தைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து மனித குலம் பாசனத்திற்கும் மற்றத் தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றது. ஆற்றின் ஆரம்பம் முதல் இறுதி வரை, மக்கள் காலங்காலமாகப் பயன் பெற்று வருகின்றார்கள். ஆறுகளை ஒட்டியே நாகரீகங்கள் வளர்ந்தன. நாகரீகங்களின் அடையாளமாக, தேசங்களின் அடையாளமாக ஆறுகள் விளங்குகின்றன. எகிப்து நாகரீகம் பற்றிப் படிக்கும்போது நைல் நதி, மனத்திரையில் விழும்.

காவிரி வரலாற்றுக் காலம் தொட்டு சோழநாட்டை வளப்படுத்துகின்றது.

வாழி அவன்தன வளநாடு
மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி.

என்றார் இளங்கோவடிகள். சோழ வள நாட்டைத் தன் பிள்ளையாய்க் கருதி காவிரித் தாய் வளர்க்கின்றாள். ஊழிதொறும், ஊழிதொறும் இப்பேருதவியை நிறுத்திக் கொள்ளாத காவிரியே நீ வாழ்க என்று மாதவி கானல்வரி பாடியதாக இளங்கோவடிகள் கூறுகின்றார்.

சோழநாடு "காவிரி நாடு" என்று சிறப்புப் பெயர் சூட்டி அழைக்கப்பட்டது.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரி தலான்.

என்றார் இளங்கோவடிகள். அயோத்தியைப் புகழ வந்த கம்பர்.

"காவிரி நாடன்ன கழனி நாடு" என்று பாராட்டினார்.

வெள்ளப் பேரிழப்புக்களையும் காவிரி ஏற்படுத்தியது.

**புகார் - சோழர் சிறப்புகள்:**

சமண சமயப் பற்றுடையவர் இளங்கோவடிகள், மதுரைக் கடல் வாணிகர் சாத்தனார் வாயிலாகக் கேட்டறிந்த கண்ணகியின் வரலாற்றைக் கூறுகின்றார், சிலம்பு முதன்மை பெற்றிருப்பது விசேடமானது.

**தமிழ் நாட்டில் நடந்த வரலாறு:**

சிலப்பதிகாரம் – மணிமேகலை இரட்டைக் காப்பியங்கள் உருவாக சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டினான். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் – சுப்பிரமணிய பாரதியார், பெண்மைப் புரட்சியாகிய இந்நூல் சிறப்புற்று விளங்குகின்றது. ஆரம்பம் – இன்பியல் முடிவு – துன்பியல் குடிமக்கள் காப்பியம் – இலக்கிய நயமிக்கது. மூவேந்தர் காப்பியம் என்ற பெருமையையும் உடையது.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறுநல்லுலகம் வடக்கே திருவேங்கடம் தமிழக எல்லைக்குத் தெற்கே குமரி மதுரை, உறந்தை, வஞ்சி, புகார் ஆகிய இடங்களில் அரசு செய்கின்ற மன்மதன் துணையாகிய இளவேனில் வசந்தம். சோழர் புறவுக்காக நிறைத்தட்டில் ஏறித் தசை அரிந்து தந்த சிபிச் சக்கரவர்த்தி கன்றைக் கொன்ற தன் மகனைக் கொன்று ஆவிற்கு முறை வழங்கிய மனு நீதிச் சோழன் ஆகிய சோழர்களின் பெருமைகளைக் குறிப்பிட்டுள்ளது.

"புறவு நிறைவுக்கோள், கறவைமுறை செய்தோன்
பூம்புனல் பழமைப் புகார்நகர் வேந்தன்"

**பு'ம்புகாரின் சிறப்புக்கள்:**

பட்டினம் என்பதும் புகார் என்பதும் காவிரிப் பூம்பட்டினத்தைக் குறிக்கும். வேறு பெயர்களும் உண்டு. சிலப்பதிகார காலத்திலே இந்நகரம் எப்படியிருந்தது என்பதை இளங்கோவடிகள் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

காவிரிப் பூம்பட்டினத்தின் அமைப்பு, அதில் வாழ்ந்த மக்கள், அவர்களுடைய வாழ்வு, ஒழுக்கம், நகரத்தின் மாண்பு இவைகளைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

"காவிரிப் பூம்பட்டினத்தை எக்காலத்திலும் பகைவர்கள் கைக்கொண்டதேயில்லை; ஆதலால் அந்நகர மக்கள் வேற்றூர்களில் குடிபுகுந்து அறியமாட்டார்கள். அவர்கள் பரம்பரையாக அவ்வூரிலேயே வாழும் பழங்குடி மக்கள், பொதியமலை, இமயமலை, ஒப்பற்ற புகழ்படைத்த புகார் நகரம் - இவை மூன்றும், எப்பொழுதும் அழியாமல் நிலைத்திருப்பவை; இவைகளுக்கு இறுதிக்காலம் உண்டு என்று உரைப்போர் ஒருவரும் இல்லை.

பொதியில் ஆயினும், இமயம் ஆயினும்,
பதிஎமு அறியாப் பழங்குடி கெழீஇய
பொதுஅறு சிறப்பின் புகாரே ஆயினும்
நடுக்குஇன்றி நிலைஇய, என்பது அல்லதை,
ஒடுக்கம் கூறார்"

என்று மங்கல வாழ்த்தில் கூறப்படுகின்றது. இத்தகைய அழியாத புகழ்பெற்ற அந்நகரம் இன்று அழிந்துவிட்டது. ஆயினும் அதன் புகழ்மட்டும் மறையவில்லை.

காவிரிப் பூம்பட்டினத்தின் அமைப்பு, அங்கு நடந்த வாணிகம், தொழில்கள், அங்கிருந்த மக்கள் வாழ்வு முதலியன இந்திரவிழவு ஊர் எடுத்த காதையிலே விரிவாகக் கூறப்படுகின்றன. அவைகளைக் கீழே காணலாம்.

காவிரிப் பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு பிரிவாக அமைந்திருந்தது. மருவூர்ப்பாக்கத்தைப் புறநகர் என்றும் பட்டினப்பாக்கத்தை அகநகர் என்றும் கூறலாம்.

**மருவு'ர்ப்பாக்கம்:**

மருவூர்பாக்கத்திலே நிலாமுற்றம் (மொட்டைமாடி) அமைந்த பல வீடுகள் இருந்தன. பல்வேறு வகையான அணிகலன்களைக் குவித்திருக்கும் சரக்கறைகள் இருந்தன. மான் கண்களைப்போல் அமைக்கப்பட்ட சாளரங்களையுடைய மாளிகைகள் இருந்தன.

நீர்த்துறையின் பக்கங்களிலே யவனர்கள் வாழ்ந்தனர். அவர்களிடம் காண்போர் கண்களைக் கவரும் அளவற்ற செல்வங்கள் இருந்தன. இவர்கள் கிரேக்க நாட்டிலிருந்து வந்த வணிகர்கள்.

கடற்கரையிலே அந்நிய நாட்டிலிருந்து வந்த வணிகர்கள் பலர் வாழ்ந்தனர். அவர்கள் பல நாட்டினர்; பல மொழி பேசுவோர். அவர்கள் தமிழர்களுடன் ஒன்றுபட்டு வாழ்ந்தனர்.

நகர வீதியிலே பலர் பல பண்டங்களை விலைகூறித் திரிவார்கள். தடவிக்கொள்ளத் தக்க நிறமுள்ள வாசனைக் குழம்பு, வாசனைப் பொடி, மணம் கமழும் சந்தனம், நறுமலர், மற்றும் பல வாசனைப் பண்டங்கள் இவைகள் அவர்கள் விலைகூறி விற்கும் பண்டங்கள்.

பட்டுச்சாலியர் ஒரு புறத்திலே வாழ்கின்றனர்; அவர்கள் பட்டினாலும், எலி மயிராலும், பருத்தி நூலாலும் ஊசியின் உதவிகொண்டு பல நுட்பமான தொழில்களைச் செய்து வாழ்கின்றனர்.

பட்டு, பவளம், சந்தனம், அகில், முத்து, இரத்தினங்கள், பொன், பொன் ஆபரணங்கள் இவைகள் எண்ணிக்கை காணமுடியாத அளவுக்கு நிரம்பியிருந்தன. இச் செல்வக் குவியல்களைக் கொண்ட பெரிய வீதிகள் இருந்தன.

தானியங்களைத் தனித்தனியே பிரித்து வைத்து விற்பனை செய்கின்ற கடைத்தெரு இருந்தது. இதற்குக் கூலவிதி என்று பெயர்.

மாமிசங்களை விற்பனை செய்யும் தனி இடம் இருந்தது. அங்கே பிட்டுச் சுட்டு விற்கும் வணிகர்கள் இருந்தனர். இவர்களுக்குக் **காழியர்** என்று பெயர். அப்பம் சுட்டு விற்போர் இருந்தனர்; இவர்களுக்குக் **கூவியர்** என்று பெயர். வலைச்சியர்கள் கள் விற்பனை செய்து வந்தனர். பரதவர் மீன் விற்பனை செய்து வந்தனர். உப்பு விற்பனை செய்வோர் இருந்தனர். பச்சை மாமிசம், வெந்த மாமிசம் இவைகளை விற்போர் இருந்தனர்; இவர்களுக்குப் **பாசவர்** என்று பெயர் வாசனைப் பொருள் விற்போரும் இருந்தனர். ஆட்டிறைச்சி விற்போரும் இருந்தனர். குறிப்பிட்ட ஒரு தனி இடத்திலே இத்தகைய வியாபாரங்கள் நடைபெற்றன.

பலவகைப்பட்ட தொழில்களைச் செய்வோர், தனித்தனி இடங்களிலே வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்த இடங்கள் தொகுதியாக இருந்தன. இதைத் தொழிலாளர் பகுதி என்று சொல்லலாம்.

வெண்கலக் கன்னார், செம்பினால் வேலை செய்வோர், மரவேலை செய்யும் தச்சர்கள், இரும்பு வேலை செய்யும் கொல்லர்கள், சித்திரம் தீட்டுவோர், சிற்பம் செதுக்குவோர், பொன்னால் நகைகள் செய்வோர், தையல்காரர்கள், தோலினால் பண்டங்கள் செய்வோர், துணியினாலும், நெட்டியாலும் பல பண்டங்களைச் செய்யும் பல வேலைக்காரர்கள், குழல், யாழ் முதலிய கருவிகளிலே ஏழிசைகளையும் இணைத்துத் தங்கள் திறமையைக் காட்டும் பாணர்கள் இவர்கள் எல்லாம் ஒரு புறத்திலே வாழ்ந்தனர்.

அங்கே ஒழுக்கம் குன்றியவர்களாய்ப் பிறர்க்குக் குற்றேவல் செய்து வாழும் மக்களும் இருந்தனர்.

மேலே கூறிய பலதிறப்பட மக்கள் மருவூர்ப்பாக்கத்திலே வாழ்ந்து வந்தனர். இவைகள் இந்திரவிழவு ஊர் எடுத்த காதையிலே 6 முதல் 39 வரையுள்ள அடிகளிலே சொல்லப்படுகின்றன. இதன்பின் பட்டினப்பாக்கத்தின் அமைப்பு கூறப்படுகின்றது.

**பட்டினப்பாக்கம்:**

பட்டினப்பாக்கத்திலே அரச வீதிகள் தனியாக இருந்தனர்; திருவிழாக் காலத்திலே தேரோடும் தெருக்கள் தனியாக இருந்தனர்; கடைத்தெருக்களும் இருந்தன.

சிறந்த குடியிலே பிறந்த வணிகர்கள் வாழும் வீதி தனியாக இருந்தது. அவ்வீதியிலே உயர்ந்த மாடமாளிகைகள் காணப்பட்டன.

மறையோர் வீதி தனியாக இருந்தது. அங்கே வேதம் உணர்ந்த அந்தணர்கள் வாழ்ந்தனர்.

உழவுத் தொழில் செய்யும் குடிகள், உழவர்கள், மருத்துவ நூல் உணர்ந்த வைத்தியர்கள், சோதிட நூல் உணர்ந்தோர் இவர்கள் தனித்தனியே வாழும் வீதிகள் இருந்தன.

இரத்தினங்களை இழைத்துச் சீர்செய்வோர், நுண்ணறிவுடன் சங்குகளை அறுத்து வளையல்கள் செய்வோர் இவர்கள் வாழும் அகலமான தெருக்கள் இருந்தன.

நின்றுகொண்டு புகழும் சூதர்கள், உட்கார்ந்துகொண்டு புகழும் மாகதர்கள், வேதநெறிப்படி கூத்தாடும் வைதாளிகர்கள், நாழிகை அறிந்து சொல்வோர், காண்போர் விரும்பும்படி கோலம் புனைந்து கூத்தாடும் சாந்திக் கூத்தர்கள், பலர் காணக் களத்திலே கூத்தாடும் கூத்தியர், உள் அரங்கங்களிலே கூத்தாடும் கூத்தியர், மலர் விற்பனை செய்யும் மாதர்கள், ஏவின வேலைகளைச் செய்யும் பெண்கள், தோற் கருவி இசைப்போர், பல வகையான இசைக் கருவிகளையும் பயின்றவர்கள் இவர்கள் தனித்தனி தெருக்களிலே வாழ்ந்து வந்தனர்.

குதிரை வீரர்கள், யானைப் பாகர்கள், தேர்ப் பாகர்கள், காலாட்படைத் தலைவர்கள் கோயிலைச் சூழ்ந்த பெரிய வீதிகளிலே வாழ்ந்தனர்.

பட்டினப்பாக்கத்திலே மேலே கூறப்பட்ட வீதிகளும் அமைந்திருந்தன. இதனை இந்திரவிழவு ஊரெடுத்த காதையிலே 40 முதல் 58 வரையில் உள்ள அடிகளிலே காணலாம்.

பட்டினப்பாக்கத்துக்கும் மருவூர்ப்பாக்கத்துக்கும் இடையிலே ஒரு வெட்ட வெளியுண்டு. அங்கே பகலில் வாணிகம் செய்வோர் கூடும் இடம் இருந்தது; இதற்கு **நாள் அங்காடி** என்று பெயர். இரவிலே வாணிகம் செய்வோர் கூடும் இடமும் இருந்தது; இதற்கு **அல் அங்காடி** என்று பெயர்.

நாளங்காடியிலே ஒரு காவல்பூதம் உண்டு. மறக்குடியிலே பிறந்த மகளிர் அங்குள்ள பூதத்துக்குப் பூசை போடுவார்கள். சித்திரை மாதத்திலே, சித்திரை நட்சத்திரம் சேர்ந்த பௌர்ணமியிலே, அவர்கள் நாளங்காடிப் பூதத்துக்குப் பலியிட்டு வணங்குவார்கள்; பொங்கல், எள்ளால் செய்த கசிவு என்னும் பணியாரம், மாமிசம் கலந்த சோறு, மலர், புகை, கள் இவைகளை வைத்துப்

படைப்பார்கள். கையை முடக்கிக் கொண்டு ஆடுகின்ற ஒருவகைக் கூத்தான துணங்கைக் கூத்து, கைகோத்துக்கொண்டு ஆடும் குரவைக் கூத்து முதலிய கூத்துக்கள் ஆடுவார்கள். தெய்வ ஆவேசம் கொண்டும் ஆடுவார்கள்.

அவர்கள் "சோழ மன்னனது பெரிய நாடு முழுவதும் பசி, பிணி, பகையின்றி வாழ்க! மழையும் வளனும் பெருகி வாழ்க!" என்று வாழ்த்துவார்கள்.

மறக்குடியிலே பிறந்த வீரர்கள், "வெற்றி வேந்தன் கொற்றம் கொள்க. வெற்றியை உடைய வேந்தன் மேலும் மேலும் வெற்றி பெறுக! பகைவரை வெல்க!" என்று வாழ்த்துவார்கள். மன்னனுடைய வெற்றிக்காகத் தங்கள் தலைகளைத் தாங்களே அறுத்துப் பலிபீடத்திலே வைப்பார்கள்.

இச் செய்திகளால் காவிரிப்பூம் பட்டினத்து மக்களின் சிறந்த ஒழுக்கத்தைக் காணலாம். தங்கள் நாடு செழிக்க வேண்டும்; அரசு செழிக்க வேண்டும் என்று அவர்கள் தெய்வத்தை வேண்டிக் கொள்ளுவார்கள்; தெய்வங்களுக்குப் பலியிடுவார்கள்; சிறந்த ராஜபக்தியும், தேசபக்தியும் வாய்ந்தவர்கள் அவர்கள் என்ற உண்மைகளையும் உணரலாம்.

**ஐவகை மன்றம்:**

காவிரிப் பூம்பட்டினத்திலே ஐந்துவகை மன்றங்கள் இருக்கின்றன. அவற்றின் இயல்பை அறிந்தால் சிலப்பதிகார காலத்தில் அந்நகரில் எத்தகைய சிறந்த ஆட்சி நடைபெற்றது என்பதை அறியலாம்.

**வெள்ளிடை மன்றம்:**

வெட்ட வெளியிலே ஒரு குறிப்பிட்ட இடத்திலே ஒரு பொது இடம் உண்டு. அங்கு ஒரு மண்டபமும் உண்டு. அம்மண்டபம் எப்பொழுதும் திறந்தே இருக்கும். காவற்காரர்களும் இருக்க மாட்டார்கள். பண்டங்களின் அளவு, நிறை, எண் இவைகளைக் குறித்து, எப்பண்டங்களானாலும் அவைகளை மூட்டைகளாகக் கட்டி அங்கே வைத்துவிட்டுப் போகலாம். அவைகளை யாரும் களவாட மாட்டார்கள்.

அந்நகருக்குப் புதிதாக வந்தவர்கள் யாரேனும் திருடினால், அவர்கள் அகப்பட்டுக் கொள்ளுவார்கள். அங்கேயுள்ள பூதம், சும்மாவிடாது. களவாடியவர் கழுத்து நோகும்படி அவர் களவாடிய மூட்டையை அவர் தலையிலே வைக்கும். ஊரைச் சுற்றி அடிக்கும். ஆதலால் அவ்வூரில் உள்ளோர் களவைப் பற்றி எண்ணவே மாட்டார்கள்.

**இது வெள்ளிடை மன்றத்தின் இயல்பு**

இதனால் அவ்வூரில் திருட்டுப் பயம் இல்லை. யாரும் திருடமாட்டார்கள். யாரேனும் திருடினாலும் காவலர்களிடம் அகப்பட்டுக் கொள்ளுவார்கள். களவாடியவர்கள் ஊரார் சிரிக்கும்படியான அவமானத்திற்கு ஆளாவார்கள். இவ்வுண்மையை வெள்ளிடை மன்றம் உணர்த்துகின்றது.

**இலஞ்சி மன்றம்:**

இலஞ்சி என்பது ஒரு குளம். கூனர்கள், குள்ளர்கள், ஊமையர்கள், செவிடர்கள், பெருநோய் பிடித்தவர்கள் அக்குளத்திலே நீராடுவார்களானால் தங்கள் நோய் நீங்குவர்; நல்ல தோற்றத்தை அடைவர். அப்பொய்கையை வலம் வந்து அதிலே மூழ்கிப் போவோர் இத்தகைய நலம் பெறுவர். இதுவே இலஞ்சி மன்றத்தின் சிறப்பு.

காவிரிப் பூம்பட்டினத்திலே சிலப்பதிகார காலத்திலே சிறந்த பொது வைத்தியசாலை இருந்தது. சிறந்த மருத்துவர்கள் இருந்தனர். கூன், குறள், ஊமை, செவிடு, பெருநோய் முதலிய தீராத நோய்களுக்கும் வைத்தியம் செய்யப்பட்டது. அந்நோய்கள் மருந்துகளாலும் இயற்கை வைத்திய முறைகளாலும் நீக்கப்பட்டன. தண்ணீரின் மூலம் நோய்களை ஒழித்தல் இயற்கை வைத்திய முறையாகும்.

**நெடுங்கல் மன்றம்:**

பிறர் இட்ட மருந்தினால் பித்தேறியவர்கள், நஞ்சுண்டு துன்புற்றோர், பாம்பினால் கடியுண்டோர், பேய் பிடிக்கப்பட்டோர் இவர்கள் நோயை நெடுங்கல் மன்றம் குணப்படுத்தும். இந்நோயாளிகள் அங்கே நாட்டப்பட்டிருக்கும் நீண்ட கல்லை ஒருமுறை வலம் வந்தால் போதும், அதிலிருந்து ஒரு ஒளி வீசும். அதனால் அவர்கள் நோய் நீங்கும். நீண்ட கல் நிற்பதனால் இதற்கு நெடுங்கல் மன்றம் என்று பெயர்.

விஷ நோய்களை நீக்கும் மருத்துவசாலையும் இருந்தது. மக்கள் எந்த நோயால் பீடிக்கப்பட்டாலும் அதற்கான சிகிச்சை பெற்று வாழ்ந்தனர். இதையே நெடுங்கல் மன்றம் குறித்தது.

**பு'தசதுக்க மன்றம்:**

பூதசதுக்க மன்றம் என்பது ஒன்று, நான்கு தெருக்கள் கூடும் சந்தியிலே ஒரு பூதம் உண்டு. "போலித் தவக்கோலம் பூண்டோர், பொய்யொழுக்கம் உள்ள பெண்கள், அரசுக்குக் கேடு சூழும் அமைச்சர், பிறர் மனைவியை விரும்புவோர், பொய்ச் சாட்சி கூறுவோர் இவர்களையெல்லாம் என் கையில் உள்ள கயிற்றால் கட்டுவேன்; நிலத்தில் அறைந்து அவர்கள் உயிரைக் குடிப்பேன்." என்று அப்பூதம் ஓங்கிய குரலில் முழங்கிக் கொண்டேயிருக்கும். அம்முழக்கம் சுற்றிலும் நான்கு காத தூரம் வரையிலும் ஒலிக்கும். இதுதான் பூத சதுக்கம் என்பது.

காவிரிப் பூம்பட்டினத்திலே திறமையுள்ள துப்பறியும் அலுவலர்கள் இருந்தனர். அவர்கள் மறைவாகக் குற்றம் புரிவோர்களையெல்லாம் கண்டுபிடித்து விடுவார்கள். அவர்களுக்குக் கடுந்தண்டனை விதிக்கப்படும். போலித் துறவிகள், பொய்யொழுக்க மகளிர், தேசத்துரோக அமைச்சர்கள், பிறர்மனை விரும்பும் ஆண்கள், பொய்க்கரி புகல்வோர், புறங் கூறுவோர் இவர்களுக்கெல்லாம் கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டது. இவர்கள் பெரிய குற்றவாளிகளாகக் கருதப்பட்டனர். இத்தகைய குற்றங்கள் நிகழாமல் முன்னறிவிப்பும் செய்து வந்தனர். இவ்வுண்மையை விளக்குவதே பூதசதுக்க மன்றம்.

## பாவை மன்றம்:

பலரும் காணும் இடத்திலே ஒரு பதுமை நின்று கொண்டிருக்கும். அரச நீதி தவறினாலும், நீதிமன்றத்தோர் அறநூல் முறைக்கு மாறாக நீதி உரைத்தாலும் அப்பதுமை கண்ணீர்விட்டு அழும். நாவினால் கூறாமல் இவ்வாறு அடையாளத்தால் அநீதியை அறிவிக்கும். இதுவே பாவை மன்றம்.

அரசன் அநீதி செய்தாலும், நீதிமன்றத்தோர் அறந் தவறினாலும், பொதுமக்கள் பொறுக்கமாட்டார்கள்; தங்கள் துன்பத்தை எல்லோரும் அறியும்படி வெளிப்படையாகச் சொல்லிக் கண்டிப்பார்கள். ஆதலால் ஆட்சியும், நீதிமன்றமும் தவறு செய்யாமல் அறநெறியிலே செல்லும். இவ்வுண்மையை விளக்குவதே பாவை மன்றமாகும்.

ஐவகை மன்றம் பற்றிக் கூறப்படும் இச்செய்திகள் காவிரிப் பூம்பட்டினத்தின் சிறந்த ஆட்சியையே காட்டும். அந்நகரத்தில் திருட்டில்லை; மக்கள் நோயின்றி வாழ்ந்தனர்; மக்கள் நல்லொழுக்கமுடன் வாழ்ந்தனர்; அரசும், நீதிமன்றமும் அறநெறியிலே நின்றன. இவ்வுண்மையை ஐவகை மன்றங்கள் அறிவித்தன.

ஐவகை மன்றம் பற்றிய இச்செய்திகள் இந்திரவிழவு ஊர் எடுத்த காதையிலே 111 முதல் 138 வரையில் உள்ள அடிகளில் கூறப்படுகின்றன.

மேலே கூறியவைகளைக் கொண்டு காவிரிப் பூம்பட்டினத்தின் அமைப்பை அறியலாம். அந்நகரில் வாழ்ந்த மக்கள், அவர்கள் ஆற்றிய தொழில்கள், அந்நகரில் நடந்த வாணிகம், பட்டினத்தின் சிறந்த தோற்றம், மக்கள் ஒழுக்கம், அரசாட்சியின் சிறப்பு இவைகளையெல்லாம் காணலாம். சிலப்பதிகார காலத்திலே இவ்வளவு சிறப்புடன் இருந்த நகரம் இன்று உருவில் இல்லை; பெயரில்தான் சிறந்து நிற்கின்றது.

காவிரிப் பூம்பட்டினத்தைப் பற்றிப் பத்துப் பாட்டில் உள்ள பட்டினப்பாலையிலும் காணலாம். பட்டினப்பாலை காட்டும் காவிரிப் பூம்பட்டினமும், சிலப்பதிகாரம் காட்டும் காவிரிப் பூம்பட்டினமும் ஏறக்குறைய ஒன்றாகவே காணப்படுகின்றன. ஒற்றுமை மிகுதி; வேற்றுமை குறைவு; அவ்வளவுதான்.

காவிரி புகும் பட்டினம் ஆரம்ப சோழரின் தலைநகராயிருந்தது. காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. கி.பி. 500இல் ஏற்பட்ட கடல்கோளினால் அல்லது சுனாமியினால் நகரின் அநேக பகுதிகள் அழிக்கப்பட்டு விட்டன.

## கடல் கொண்ட தன்மை:

மேலும் காவிரிப் பூம்பட்டினத்திலும் (பூகார்) தொடர்ந்து குமரிமுனை வரையிலும் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் மேற்கூறியதை வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியத்தின்படி பூகார் நகரம் இலக்கிய வர்த்தக மையமாகக் காணப்பட்டது. இவற்றுக்குரிய ஆதாரங்கள் இங்கு கிடைக்கப் பெற்றன. இன்று இத்துறை கடற்கரையில் இருந்து 1½ மைல் உள்ளாகக் காணப்படுகின்றது. பூகாருக்குத் தெற்கே கொற்கை முக்கிய துறையாகக் காணப்பட்டது என்பதையும் அகழ்வாராய்ச்சிகள் நிருபிக்கின்றன. இத்துறை மணல் மேடால் தடுக்கப்பட்டு காயல் பட்டினம், மாந்தை (மன்னார்), குலசேகரப்பட்டினம் ஆகியன தொடர்ந்தும் துறைமுகங்களாகக் காணப்பட்டன என்பதற்குச் சான்றுகள் உண்டு. ஆனால், இவையெல்லாம் இன்று கடற்கரையில் இருந்து உள்நோக்கியும் மணல்மேடுகளால் தடுக்கப்பட்டும் உள்ளன. இந்த நகரங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் துறைமுகங்களாக இருந்தன. வர்த்தக மையங்களாக விளங்கின. பின்பு ஏன் இவை முக்கியத்துவம் இழந்தன. மணல்மேடுகளால் மூடப்பட்டன என்பவற்றுக்குக் கொடுக்கப்படும் காரணங்கள் சங்ககால நகரங்கள் மறைவுக்குக் காரணமாகுமோ என்பது தீர்மானிக்க வேண்டிய விடயமாகும்.

பாண்டிச்சேரியில் இருந்து தெற்காகக் குமரிமுனை வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி கடல் நீர் மட்டம் இன்று முன்பிலும் பார்க்க தாழ்ந்துள்ளது என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது. (Akkaraju V.N. Sanka, 1074). குறிப்பாகக் கன்னியாகுமரியில் நான்கு வெவ்வேறு அளவான கடல் நீர் மட்டங்கள் காணப்பட்டுள்ளன. அவை 10, 20, 40, 50, 100 அடிகள் உயரங்களில் உள்ளன. இன்றைய கன்னியாக்குமரிக் கிராமம் 100 உரிய கடல் நீர்மட்டத்தில் அமைந்துள்ளது. இராமேஸ்வரம் தீவில் கடல் நீர் மட்டம் 20 அடி உயர்ந்திருந்ததற்கு ஆதாரம் உண்டு. இவை குறிப்பிடத்தக்க விடயங்களாகும். பொதுவாகக் கடல் நீரின் மட்டம் தாழ்கின்றபோது நதிகள் வேற்று வழி கண்டன. அவற்றின் சங்கமப் பகுதிகள் கடற்கரையில் வேறு இடத்துக்கு இடம் மாறின. பழைய துறைமுகங்கள் உள்நாட்டுப் பகுதிகளாகி மணல் மேடுகளால் மூடுண்டு முக்கியத்துவம் இழந்தன. இதனால் தொடர்ச்சியாக அவை வர்த்தக இலக்கிய மையங்களாக அமைய முடியாமற் போயின என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

## அகழ்வாய்வின் தகவல்கள்:

பூம்புகார் கடல் கொண்ட பின்பு செய்யப்பட்ட ஆய்வுகளின்படி சிவன், இந்திரன், சூரியன் ஆகியோரின் கோயில்கள் காணப்பட்டன. புத்தர் சிலைகள் அல்லது தூண்களும், ஏழு விகாரைகளும் காணப்பட்டன. மேலும் சம்பாபதி அம்மன், செங்கற் சிலைகள், உலக அறவி மன்றம் என்பன பூம்புகாரில் காணப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

மேலும், குளிர்மையான மரங்கள் நிறைந்த ஆற்றங்கரைகள் காணப்பட்டன. கோவில்களில் இருந்து கடவுள் ஆற்றில் நீராடுவதற்காகச் செல்லும் புனிதப் பாதைகள் என்பன நகரத் திட்டமிடலில் விசேட தன்மைகளாகக் காணப்பட்டதாக அகழ்வாராய்ச்சிகள் எடுத்துக் கூறுகின்றன. நகரம், புலிச் சின்னம் பதித்த எல்லைச் சுவரைக் கொண்டிருந்தது. நகரத்தில் பல்வேறு சந்தைகளும் யவ்வனர்கள் (எகிப்தியர்கள்) வாழ்விடங்களும் காணப்பட்டன.

1910இல் இந்தியப் புதைபொருள் ஆய்வுத் திணைக்களம் செய்த ஆய்வின்படி, பல உறை கிணறுகள் (Ringed Wells) கடற்கரை அருகில் காணப்பட்டதாகவும் அறிகின்றோம். மேலும், செங்கல் கட்டடங்களும் கப்பற் துறைமுகங்களும் கீழை ஊரில் காணப்பட்டதாக 1960 – 61 அகழ்வாராய்ச்சிகள் கூறுகின்றன. அறுபது அடி நீளமான சதுர வடிவமான அறைகளையுடைய புத்த விகாரை காணப்பட்டது. சுண்ணாம்பினால் ஆன புத்தருடைய புனித பாதமும் காணப்பட்டது. மேலும், செங்கல்லால் ஆன உருவங்களும் சதுர, வட்ட வடிவமான செப்பு நாணயங்களும் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவற்றில் கரிகாலச் சோழனின் புலிச் சின்னமும் சூரியனும் பதிக்கப்பட்டிருந்தன.

கி.பி. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டிற்குரிய புராதன மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

**முடிவுரை:**

ஆய்வுகளில் பல்வேறு வகையான சிக்கல்கள் காணப்படுகின்றன. சில ஆய்வுகளில் மனித குலத்தின் தோற்றம் கண்டங்கள் பெயர்ச்சி, இவை பற்றித் தெளிவின்மை மிகைப்படுத்தப்பட்ட காலக் கணிப்பு முக்கிய காரணங்களாகக் காணப்படுகின்றன. புவியியலின் அடிப்படைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் வாழும் நிலம் அழியாதது, அசையாதது என்ற நம்பிக்கை தகர்த்தெறியப்பட்டது. பேரழிவை உண்டாக்கிய கடற்கோள்கள் அன்று ஏற்பட்டதும் இன்று ஏற்படுவதும் இயற்கையின் நியதி. நாளையும் கடற்கோள்கள் ஏற்படலாம் என்று கூறுவது அழிவு காலத் தீர்க்கதரிசனம் அல்ல. அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உருவான முடிவு. கடற்கோள்கள், பிரளயங்கள் ஏற்படுவதற்குப் பூமி வெப்பமடைவதே முக்கிய காரணம். காவிரிப் பூம்பட்டினத்தின் கடல் கொண்ட தன்மையும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆயினும், பூம்புகார்ப் பண்பாடு மக்கள் வாழ்க்கை முறை, சேர சோழ அரசாட்சித் தன்மை என்பன சிறப்பான முறையில் அகழ்வாராய்ச்சிகளின் மூலம் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன.

## உசாத்துணை நூல்கள்


01. கந்தையா குணராசா, சுனாமி – கடற்கோள் 26.12.2004, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், பெப்ரவரி 2005.

02. தமிழறிஞர் சாமிசிதம்பரனார், (1988), **சிலப்பதிகாரத் தமிழகம்,** சிதம்பனார் இலக்கிய நிலையம், சென்னை.

03. சுந்தர முருகனார், (1992), **சிலம்போ சிலம்பு தித்திக்கும் திறனாய்வு,** வானதி பதிப்பகம், சென்னை.

04. பெ. மணிசேகரன், (2002), **காவிரி, உலக நீதியும் உள்நாட்டு அநீதியும்,** புதுமலர் பதிப்பகம், கோவை.

05. என். சுப்பிரமணியம், (2004), **இந்திய வரலாறு,** கொஸ்மிக் பிரின்டேர்ஸ், சென்னை.

06. சு.கி. ஜெயகரன், (2002), **குமரி நில நீட்சி,** காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்.

07. கா. அப்பாத்துரை, (2000), **லெமூரியா அல்லது குமரிக் கண்டம்,** திருநெல்வேலி தென் இந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.

08. வெல்லவூர்க் கோபால், (2005), **சுனாமி ஒரு மீள்பார்வை,** விபுலம் வெளியீடு, ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.

09. இணையத்தளம்

10. வீரகேசரி, தினக்குரல், தினகரன்

# கண்ணகி கலை இலக்கிய விழா 2012
# கண்ணகி இலக்கியக்கூடல்

காப்பாளர் : பேராசிரியர் சி.மௌனகுரு

| செயற்குழு | | | |
|---|---|---|---|
| இல | முழுப் பெயர் | | முகவரி |
| 1 | செங்கதிரோன் தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் | தலைவர் | 607, பார்வீதி, மட்டக்களப்பு. |
| 2 | கணபதிப்பிள்ளை ஆறுமுகம். | து.தலைவர் | 7, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு. |
| 3 | அ. அன்பழகன் குரூஸ். | செயலாளர் | 45A, சின்ன ஊறணி, மட்டக்களப்பு. |
| 4 | மாணிக்கப்போடி சதாசிவம். | து.தலைவர் | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. |
| 5 | செல்வி.கதிராமன் தங்கேஸ்வரி. | து.தலைவர் | 10/1, பயனியர் வீதி, மட்டக்களப்பு. |
| 6 | இராசையா நாகலிங்கம்.(அன்புமணி) | | 19, தவபதி, ஆரையம்பதி -1 |
| 7 | கி. துரைராஜசிங்கம். | | 73, வாவிக்கரைவீதி-1, மட்டக்களப்பு. |
| 8 | செ.எதிர்மன்னசிங்கம். | | 22, திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு. |
| 9 | கதிரவன் த.இன்பராஜா | | கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. |
| 10 | பு.தியாகதாஸ் | | கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு. |
| 11 | சி.சாமித்தம்பி. | | 32/2, கண்ணகியம்மன் கோவில் வீதி, தாண்டவன்வெளி, மட் |
| 12 | அ.செல்வேந்திரன் | | 23/1, டயஸ் லேன், மட்டக்களப்பு. |
| 13 | ம.வேதநாயகம். | | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. |
| 14 | திருமதி, சுந்தரமதி வேதநாயகம். | து.செயலாளர் | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. |
| 15 | தி.டிவதர்சினி. | | 8/42, 1ம் குறுக்கு, செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு. |
| 16 | தேவ.அலோசியஸ். | | 72, கதிர்காமர்வீதி, மட்டிக்களி, மட்டக்களப்பு. |
| 17 | ச. ஜெயராஜா. | பொருளாளர் | 19, முதலாம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. |
| 18 | செ.துரையப்பா. | | 4, முதலியார் வீதி, மட்டக்களப்பு. |
| 19 | த.அழகையா. | | 14/10, கூழாவடி, மட்டக்களப்பு. |
| 20 | காசுபதி நடராஜா. | | 42, 2ம் குறுக்கு, கல்லடி வேலூர், மட்டக்களப்பு. |
| 21 | வெ.தவராஜா. | | 200, பழைய கல்முனை வீதி, மட்டக்களப்பு. |
| 22 | தி.நாகநாதன் | | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. |
| 23 | க.குருநாதன் | | 40/B, அனுமர் வீதி மேற்கு, நொச்சிமுனை, மட்டக்களப்பு. |
| 24 | க.செல்வாநந்தம். | | 10, சிவன்கோவில் வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று. |
| 25 | செ.தபராஜா | | 17, நல்லையா வீதி, மட்டக்களப்பு. |
| 26 | மு.தவராஜா | | 25/10, அரசடிப் பிள்ளையார்கோவில் வீதி, மட்டக்களப்பு. |
| 27 | ச.மதன் | | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. |
| 28 | சு.தெய்வேந்திரன் | | 394/42A, நாகதம்பிரான் கோவில் வீதி, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு. |
| 29 | க.காண்டீபன். | | அரசடிப் பிள்ளையார்கோவில் வீதி, மட்டக்களப்பு. |
| 30 | கதிர் பாரதிதாசன். | | 15/4, அதிகார் வீதி, மட்டக்களப்பு. |
| 31 | மண்டூர் அசோகா. | | 8/22, பிள்ளையார்கோவில் கல்லடி, மட்டக்களப்பு. |
| 32 | திருமதி. சி.ஞானசூரியம். | | 25/2, மாரியம்மன் கொவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. |
| 33 | சி.வினோதன் | | கொக்குவில், மட்டக்களப்பு. வீதி, |
| 34 | இ.பாக்கியராஜா | | 10/4, 1ம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. |
| 35 | இ.வரதராஜன் | | புதுக்குடியிருப்பு |

# கண்ணகி கலை இலக்கிய விழா 2012 – "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" செயற்குழு

**முன் வரிசை இடமிருந்து வலம்** : செல்வி. தி.டிவதர்சினி, திருமதி.சி.ஞானசூரியம், மண்டூர் அசோகா, செ.எதிர்மன்னசிங்கம், பேராசிரியர் சி.மௌனகுரு, செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன், க.ஆறுமுகம், மா.சதாசிவம், க.குருநாதன், செல்வி.க.தங்கேஸ்வரி, திருமதி.சுந்தரமதி வேதநாயகம்.

**நடுவரிசை இடமிருந்து வலம்** : தேவஅலோசியஸ், சி.சாமித்தம்பி, த.அழகையா, காசுபதி நடராஜா, செ.துரையப்பா, கதிர்பாரதிதாசன், ச.மதன், ச.ஜெயராஜா, அன்பழகன் குரூஸ், சி.வினோதன், பு.தியாகதாஸ்.

**இறுதி வரிசை இடமிருந்து வலம்** : சு.தெய்வேந்திரன், செ.தபராசா, தி.நாகநாதன், த.இன்பராஜா, க.செல்வாநந்தம், இ.வரதராஜன், ம.வேதநாயகம்.

வருகை தராதோர் : இரா.நாகலிங்கம் (அன்புமணி), கி.துரைராஜசிங்கம், அ.செல்வேந்திரன், வெ.தவராஜா, மு.தவராஜா, இ.பாக்கியராஜா, க.காண்டீபன்.

## 2012ம் ஆண்டு கண்ணகி கலை இலக்கிய விழா மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் நடைபெறுகையில் அப் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள எம்மால் ஏற்படுத்தப்பட்ட உப குழுக்களின் விபரம்.

**ஊர்வல ஏற்பாட்டுக் குழு**

கதிரவன் திரு.த.இன்பராசா. – இணைப்பாளர்.
திரு.பொன்.சின்னத்தம்பி.
திரு.ச.மதன்.
திரு.பு.தியாகதாஸ்.
திரு.தி.நாகநாதன்.

**உபசரணைக் குழு.**

திரு.பொன். சுந்தரராஜன் – இணைப்பாளர்.
திரு.அ.அனேந்திரன்.
திரு.அ.குலேந்திரராஜா.
திரு.வ.கமலக்கண்ணன்.
திரு.க.பத்மநாதன்.
திருமதி.தயானி கிருஷ்ணாகரன்.

**அரங்க ஒழுங்கமைப்புக் குழு.**

திரு.வே.தட்சணாமூர்த்தி (அதிபர்) – இணைப்பாளர்.
திரு.சீ.இராஜேந்திரம்.
திரு.அ.இராமேஸ்வரன்.
திரு.க.தேவராசா.
திரு.செ.தேவதாஸ்.
திருமதி.ஜெயந்தி உதயகுமாரன்.
திரு.ந.கனகசூரியம்.
திரு.பூ.தேவராஜா.

**அலங்காரக் குழு**

திரு.ச.மோகன் – இணைப்பாளர்.
திரு.சி.சுதேஸ்வரன்.
திரு.ந.சஞ்சீவன்.
திரு.அ.பத்மநாதன்.
திரு.கே.பேரானந்தராஜா.
திரு.ந.குகதாஸ்.

ஆய்வரங்க ஆய்வு மதிப்பீட்டாளர் - I
பேராசிரியர் **செ.யோகராஜா,**
சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப்பல்கலைக்கழகம்.

ஆய்வரங்க ஆய்வு மதிப்பீட்டாளர் - II
**திருமதி.சாந்திகேசவன்**
சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப்பல்கலைக்கழகம்.

கொழும்பில் இருந்து வருகை தந்த
பேராளர்
**சி.யோதிலிங்கம்** அவர்கள்.

அவையோர்

அவையோர்

அவையோர்

PATTAKANNUS
SINCE 1895

*Jewellers of trusted excellence.....*

102, New Chetty Street,
Colombo-13

Tel : 2422304
2431759

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa. T.P: 065 222 7170